பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 14 திங்கட்கிழமை (30.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 004

# 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வு

## ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, நவம்பர் 30

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது அவசியம். ஆனால், பெரும்பான்மைச் சமூகத்தின் விருப்பத்திற்கு இணங்கவே இந்தச் சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டம் 20 ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட சட்டம் என்பதால் அச்சட்டத்தில் மாற்றங்களைக் மேற்கொள்வது அவசியம்.

- இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் I, II, III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## பொன்சேகாவின் சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் பொலிஸாரால் கைது!

கொழும்பு, நவ. 30

ஜனாதிபதித் தேர்தலின்பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் சுவரொட்டிகளை ஒட்டிய இருவரை கிளர்ச்சி ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டைப் பாதுகாக்கும் எஸ்.எவ். நடவடிக்கை ஆரம்பம் என்ற வாசகம் அடங்கிய சுவரொட்டிகள் நாடு முழுவதிலும் ஒட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த ஜே.வி.பி கட்சியைச் சேர்ந்த இரண்டு ஆதரவாளர்களையே பொலிஸார் கைது (20ஆம் பக்கம் பார்க்க)

## 25 லட்சம் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை இல்லை

### ஆள்பதிவுத் திணைக்களம் தகவல்

கொழும்பு, நவ. 30

நாட்டிலுள்ள 25 லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லை என்று ஆள் பதிவுத் திணைக்களம் தெரிவிக்கிறது.

2008ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலுக்கு அமைய இந்த எண்ணிக்கை 26 லட்சமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அடையாள அட்டை இல்லாதோருக்கு அடையாள அட்டை வழங்க விசேட செயற்றிட்டமொன்றை (20ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நோயாளர் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகிறது

கொழும்பு, நவ. 30

நாட்டின் மூன்று மாவட்டங்களில் மீண்டும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு, மாத்தளை, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கடந்த சில வாரங்களாக டெங்குநோய்த் தொற்றுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என சுகதார அமைச்சு கூறுகிறது.

இந்த மாவட்டங்களில் டெங்குநோய் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்பினார் கஜேந்திரன் எம்.பி.

கொழும்பு, நவ. 30

வெளிநாட்டில் தங்கியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை அறிக்கையை ஆணைக்குழு அடுத்தமாத இறுதியில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும்

கொழும்பு, நவ. 30

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் சுமத்தப்பட்டிருக்கும் யுத்தக்குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மை குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு அடுத்த மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளது.

இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்க காங்கிரஸுக்கு அறிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மீனவர் கொலை; சந்தேகத்தில் 3 கடற்படையினர் கைது

கொழும்பு, நவ. 30

திருகோணமலையில் மீனவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் மூன்று கடற்படையினரை பொலிஸார் நேற்றுக் கைது (20ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வருடத்துக்கான பொதுநலவாய மாநாடு முன்னர் தீர்மானிக்கப்பட்டது போல் இலங்கையில் நடைபெறாது

கொழும்பு, நவ. 30

2011 ஆம் ஆண்டின் பொதுநலவாய நாடுகளின் மாநாடு ஆஸ்திரேலியாவில் நடத்தப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் நேற்றுமுன்தினம் மேற்கிந்திய தீவுகளின் ரினிடாட் டுபெக்கேவில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகளின் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து நடக்குமாறு மஹிந்தவிடம் வலியுறுத்து

### ஜிம்மி கார்ட்டர், டெஸ்மண்ட் டுட்டு உட்பட உலகப்பிரமுகர்கள் 12 பேர் கடிதம்

கொழும்பு, நவ. 30

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்திருக்கும் தமிழ் அகதிகளின் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து நடக்கவேண்டும் என்று வலியுறுத்தி உலகப் பிரசித்தி வாய்ந்த பிரமுகர்கள் 12 பேர் கூட்டாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேரடிக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்கள்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் ஆசீர்வாதத்துடன் இயங்கும் 'த எல்டேர்ஸ்' உலகப் பிரசித்தி பெற்ற பிரமுகர்கள் அமைப்பைச் சேர்ந்தவர்களான பேராயர் டெஸ் மண்ட் டுட்டு, மார்ட்டி ஹ்டிஸாரி, கொபி (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் அரைவாசிப் பேர் வாக்களிக்க முடியாத நிலை; இடம்பெயர்ந்தோர் வேறு இடங்களில் வசிப்பதால் பாதிப்பு!

கொழும்பு, நவ. 30

வடக்கில் அரைவாசிக்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களுக்கான அமைப்பு (பவ்ரல்) சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தேர்தல் முடிவுகளை மாற்றி அமைக்கும். ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொள்ள விரும்பும் வடக்கு மக்களின் அபிலாஷைகளுக்குப் பாதகமாக அமையும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)



உலக எயிட்ஸ் தினம் - World AIDS Day 2009

HIV/ AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும், மனித உரிமைகளை மதித்தலும்

"Universal Access and Human Rights"



HIV தொற்றுக்கான சிகிச்சை

பூரணமாகக் குணமாக்க மருந்துகளில்லை.

தொற்றடைந்தவர்களின் ஆரோக்கியத்தைப் பேண Antiretroviral drugs வாழ்நாள் முழுவதும் எடுக்க வேண்டும். (இதற்கான செலவு வருடத்திற்கு 15-20 இலட்சம்) இதன் மூலம் வாழ்நாளை அதிகரிக்க முடியும். அத்துடன் நல்ல போஷாக்கான உணவு, ஆதரவான கவனிப்புத் தேவை.

HIV இலிருந்து பாதுகாத்தல்.

விசுவாசத்துடன் இருவருக்கிடையே மாத்திரம் பாலுறவை மட்டுப்படுத்துதல். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் ஆணுறை (கொண்டம்) சரியான முறையில் பாவிப்பதை உறுதி செய்தல். மருத்துவ உபகரணங்கள், சவர அலகுகள் போன்றவை எப்போதும் புதியதாக அல்லது ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டதாக பாவிப்பதை உறுதி செய்தல். HIV தொற்ற ஏதுவான சந்தர்ப்பத்துக்குள்ளானோர் விரைவாகவே தமது தொற்று நிலையைப் பரிசோதித்து உறுதி செய்வதன் மூலம் ஏனையோருக்குப் பரவாது பாதுகாக்க முடியும். குருதி மாற்றீட்டின் போது HIV தொற்றற்ற குருதி என்பதை உறுதி செய்தல். HIV தொற்றுள்ள தாய்மார் பிள்ளைக்குத் தொற்றாது பாதுகாப்பான மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுதல்.

ஆண் - பெண் பாலுறவைப் போன்றே பாதுகாப்பற்ற ஓரினப் பாலுறவுத் தொடர்புகளிலும் HIV தொற்றுவதற்கான ஆபத்து உள்ளது.

ஒவ்வொருவரும் HIV தொற்றக்கூடிய ஆபத்தான சந்தர்ப்பங்களை அறிந்திருப்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உணர்தகு நிலையிலிருப்பதன் மூலம் மாத்திரமே தம்மை HIV தொற்றிலிருந்து இலகுவாகப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

நிதியுதவி

ஆக்கம்: சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை

TRRO LIMITED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# செலான் வங்கியின் மூன்று கிளைகள் இன்று குடாநாட்டில் திறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், நவ.30

செலான் வங்கி தனது சேவையைக் குடாநாட்டில் விரிவுபடுத்தும் பொருட்டு நெல்லியடி, மானிப்பாய், சங்கானை ஆகிய இடங்களில் இன்று தனது கிளைகளைத் திறக்கவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு நெல்லியடியில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி அஜித் நிவாட் கப்ரால் கிளையைத் திறந்து வைக்கவிருக்கிறார்.

மானிப்பாயில் பிற்பகல் 2.30 மணிக்கும் சங்கானையில் பிற்பகல் 4 மணிக்கும் இரு கிளைகளை செலான் வங்கியின் தலைவர் ஈஸ்மன் நாரந்கொட வைபவ ரீதியாகத் திறந்து வைப்பார்.

இந்த நிகழ்வுகளில் செலான் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர். நடராசா, பொதுமுகாமையாளர் அஜித் பக்ரோல், பிரதிப்பொது முகாமையாளர் (வலயம் 3) கலாநிதி பி.நிரஞ்சன் ஆகியோர் உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக செலான் வங்கியின் உயர் அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. (அ-1)

# ஜனாதிபதி மஹிந்தவின் வெற்றிக்கு ஆசி வேண்டி மக்கள் கட்சி நல்லூரில் இன்று விசேட வழிபாடு

யாழ்ப்பாணம், நவ.30

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு ஆசிவேண்டி இன்று காலை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் விசேட வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் குமாரணதுங்கவின் கட்சியான ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் யாழ். மாவட்ட இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திலக்குமார உடுகம தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கட்சியின் தலைவரும் பொது மக்கள் ஐக்கிய கூட்டமைப்பின் உப தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஞ்சித் நவரத்ன, சப்பிரகமுவ மாகாண சபையின் அமைச்சரான ஜி.எம். கருணபால, குருநாகல் மாகாணசபை உறுப்பினரான அசங்க நவரத்ன உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர்.

இக்கட்சி தனது அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் விரைவில் திறக்கவிருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# உலகக் கிண்ணத்துக்கு முன்னர் முரளிதரன் ஓய்வுபெறத் திட்டம்

டில்லி, நவ.30

இலங்கை அணியின் சுழல் மன்னன் முத்தையா முரளிதரன் 2010ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் (ஒரு நாள் போட்டி) கிரிக்கெட் தொடருக்கு முன்னர் ஓய்வு பெறப்போகிறார் என அறிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் முரளிதரன், இது குறித்து மேலும் கூறியவை வருமாறு:-

''தொடர்ந்து நான் சிறப்பாக விளையாடுவதற்கு எனது உடல் நிலை ஒத்துழைப்புக் கொடுக்காமையினால் நான் விரைவிலேயே, அதாவது எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னதாகவே டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதற்கு எண்ணியுள்ளேன்'' - என்றார்.

**PHYSICS**

ஆங்கில, தமிழ் மொழி மூல வகுப்புக்கள் 2011- அலைகள் 2010 - சடப்பொருளின் இயல்புகள் தனியாகவோ/ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0213218726

# அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டி; மே.இ. தீவுகள் அணிக்கு இன்னிங்ஸ் தோல்வி

பிரிஸ்பேன், நவ. 30

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இன்னிங்ஸ் தோல்வி அடைந்துள்ளது.

ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 480 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 2ஆவது நாள் ஆட்ட நேரம் முடிவில் முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம் 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. ஆஸ்திரேலிய வீரர்களின் அபாரப் பந்துவீச்சில், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விக்கெட்டுகள் சிறிய இடைவெளியில் சரிந்தவண்ணம் இருந்தன. இறுதியில் 228 ஓட்டங்களைப் பெற்ற வேளை அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக டவ்லின் 62 ஓட்டங்களையும், ராம்டின் 54 ஓட்டங்களையும் எடுத்தனர்.

228 ஓட்டங்களுக்குள் சுருண்டமையால் அடுத்த இன்னிங்ஸையும் ஆட வேண்டிய நிலை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஏற்பட்டது.

அதன்படி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர்கள், ஆஸ்திரேலிய வீரர்களின் சிறப்பான பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் தடுமாறினர். அணியின் விக்கெட்டுகள் வேகமாக சரிந்தன. ஒரு புறம் விக்கெட்டுகள் வீழந்தாலும் 19 வயதான அறிமுக வீரர் அட்ரியன் பரத் தனது முதல் சதம் கடந்தார். அவர் 104 ஓட்டங்களைப் பெற்ற வேளை வோட்சனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்ட மிழந்தார்.

52.1 ஓவர்களில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 187 ஓட்டங்களைப் பெற்றவேளை அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடிடைந்தது. இதனடிப்படையில் இதனால், ஆஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 15 விக்கெட்டுகளை இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் ஹில்பினாஸ் 3 விக்கெட்டுகளையும், வோட்சன், ஹவுரிட்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், பீற்றர் சிடில், ஜோன்சன், மைக் ஹஸி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகிறது.

# தொடரை வென்ற பின் கொண்டாடுவோம்

இலங்கையுடனான டெஸ்ட் தொடரை இந்தியா முழுமையாக வென்ற பின்னர் நாங்கள் விமரிசையாகக் கொண்டாடு வோம்

19 மாத கால இடைவெளிக்குப் பிறகு இந்திய அணி யில் இடம் பிடித்த வேகப் பந்து வீச்சாளரான ஸ்ரீசாந்த், கான்பூரில் நடந்த இலங்கை அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டநாயகன் விருதைப் பெற்றார். பின்னர் இவர் அவசரமாக கொச்சி திரும்பி யிருந்தார்.

மும்பையில் எதிர்வரும் 2ஆம் திகதி இலங்கையுடனான கடைசி டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் ஸ்ரீசாந்த் கூறியவை வருமாறு:-

இரண்டாவது டெஸ்ட்டில் இந்திய அணி வென்ற பின்னர் நான் கொச்சிக்குத் திரும்ப வேண்டியிருந்தமையால் வெற்றியை அதிகம் கொண்டாட முடியவில்லை.

டெஸ்ட் தொடரை இந்தியா முழுமையாக வென்ற பின்னர் நாங்கள் விமரிசையாகக் கொண்டாடுவோம். நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். கடவுளின் அருளும், மக்களின் ஆதரவுமே நான் சிறப்பாக செயற் பட உதவிகரமாக இருந்தது''- என்றார்.

**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**Day Class**

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம் :- 02.12.2009 புதன் 8.00 A.m

| | |
|---|---|
| பொருளியல் | - S. வரதராஜன் |
| கணக்கீடு | - B. முகுந்தன் |
| வணிகக்கல்வி | - V. முரளி |
| தமிழ் | - A. மீரா, N. சத்தியவேந்தன் |
| புவியியல் | - P.S.குமரன் |
| இந்து நாகரிகம் | - P. ஜோதீஸ்வரன், N.T.தரன் |
| நாடகம் | - P. கணேஷ் |
| வரலாறு | - K. சுதன் |
| அரசியல் | - S.M. ஜெனா |
| அளவையியல் | - R.P. சர்மா, R.S. சந்திரன் |
| இந்து சமயம் | - N.T.தரன் |
| கிறிஸ்தவம் | - J. வசந்தன் |
| விவசாயம் | - R. விக்கி |
| இலகு கணிதம் | - G. ஐங்கரன் |
| ஆங்கிலம் | - K.நிஷாந்தன், S.ஜைஷன் |

வர்த்தகப் பிரிவு: திங்கள் முதல் வெள்ளி வரை.

கலைப் பிரிவு: பிரிவு - I திங்கள் முதல் வெள்ளி வரை. பிரிவு - II சனி, ஞாயிறு.

(C/562810)

# ரைகர் வுட்ஸ் விபத்தில் காயம்

நியூயோர்க், நவ. 30

உலகின் முதல் நிலை வீரரான கோல்ப் டைகர் வுட்ஸ் நேற்று முன்தினம் அதிகாலை புளோரிடாவில் உள்ள தனது பண்ணை வீட்டிலிருந்து காரில் சென்றபோது திடீரென நிலை தடுமாறி அங்கிருந்த தீயணைப்புக் கருவி மீது வேகமாக மோதி, பின்னர் கார் அருகில் நின்ற மரத்தின் மீது மோதி நின்றது. இந்த விபத்தினால் டைகர் வுட்ஸ் காயமடைந்தார்.

அவரது மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தது. முகத்தில் சிராய்ப்புகள் ஏற்பட்டன. உதட்டிலும் வெட்டுக் காயம் ஏற்பட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர் லேசான காயங்களுடன் தப்பினார்.

உலகின் முதல் நிலை கோல்ப் வீரரான டைகர் வுட்ஸ், அமெரிக்காவைச் சேர்ந்த வர். உலகிலேயே மிகப்பெரிய பணக்கார வீரர்களில் ஒருவராக விளங்குகிறார். கோல்ப் விளையாட்டில் 14 பெரிய சம்பியன் பட்டங்களை வென்றிருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**உங்களுக்கு ஆர்வம் உண்டா?**



உதயனின் பிரதேச செய்தியாளர்களாகப் பணிபுரிய அரிய சந்தர்ப்பம்

வடமராட்சியில் பிரதேச செய்தியாளர்கள் பின்வரும் இடங்களில் தேவை

- பருத்தித்துறை
- உடுப்பிட்டி
- வல்வெட்டித்துறை
- அல்வாய்
- தொண்டைமானாறு
- துன்னாலை
- தும்பளை
- குடத்தனை

உங்களிடம் பின்வரும் தகுதிகள் இருப்பதாகக் கருதினால் உங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை நெல்லியடியில் உள்ள உதயன் உப பணிமனையில் 07.12.2009 இற்கு முன்னர் ஒப்படைக்கவும்.

- 21 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- நாட்டு நடப்புக்களைக் கண்டறிவதில் நாட்டம் உள்ளவர்கள்
- ஜி.சி.ஈ.உயர்தரத்தில் சித்தி அடைந்திருப்பது விரும்பத்தக்கது
- தமிழ் மொழியில் சரளமாக எழுதும் ஆற்றல் தேவை

**11ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னை மடியில் 02.02.1987

இறைவன் அடியில் 01.12.1998

**அமரர் வடிவேற்கரசு தேவசுதா (நிதியா)**

திதி: கார்த்திகை பூர்வபக்க திரயோதசி

நீடுவாழ்வாய் என்றிருந்தேன்
என் மகள்
நிதியா நீ நெடுந்தூரம்
சொன்றதெங்கே?
நிம்மதியிழந்து நிதம் நிதம்
தவிக்கின்றேன்
உன் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் அம்மா
செல்வராணி வடிவேற்கரசு
(வைத்தீஸ்வரன்).

சித்தம்பாதி, கரணவாய், கரவெட்டி.

[50974]

**மரண அறிவித்தல்**

**இராசையா அம்பிகாவதி**

(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்)

வேலணை, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா அம்பிகாவதி நேற்று (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

7 ஆம் வட்டாரம், வேலணை. தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தேர்தலில் போட்டியிட விடாமல் பொன்சேகாவை தடுக்கும் எத்தனம்

இன்னும் ஒன்பது வார காலத்தில் நடைபெறப் போகின்ற இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா களம் இறங்குவார் என்பது உறுதியாகிவிட்டது. இதை அவரே நேற்றுப் பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.

ஒருபுறம் வெற்றிலைச் சின்னத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. மறுபுறம் அன்னம் சின்னத்தில் ஜெனரல் பொன்சேகா.

'சபாஷ்! சரியான போட்டி' - என்று சொல்லும் அளவுக்கு இருதரப்பு நேரடி மோதல் இப்போதே சூடு பிடித்து விட்டது.

எனினும், ஜெனரல் பொன்சேகா தேர்தலில் போட்டியிடுவதற்கான தடை - சுருக்கு - இன்னும் நீங்கியபாடில்லை என்பதை விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றமையும் கவனிக்கத்தக்கது.

ஜெனரல் பொன்சேகா கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வரை முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி பதவியில் இருந்தவர். இப்பதவி நிலை இவருக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் முன்னர் வெளியிடப்பட்டிருந்தது. அதாவது வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டு நியமனம் பெற்ற பதவியில் இருந்தார் அவர்.

அத்தகையவர் தமது பதவியிலிருந்து விலகும்போது அதுபற்றிய வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட வேண்டும். அப்படி அவரது பதவி விலகல் அரசுத் தலைமையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் அதுபற்றிய அறிவித்தல் வெளியானால் மட்டுமே அவர் சட்டரீதியாகப் பதவி விலகியவர் என ஒப்புக்கொள்ளப்பட முடியும் என சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜெனரல் சரத் பொன்சேகாவைப் பொறுத்தவரை, அவரது பதவி விலகல் கடிதம் தொடர்பில், அவரது பதவி விலகலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்கின்றார் என்ற விடயம் எழுத்துமூலம் ஜனாதிபதியின் செயலாளரால் அவருக்கு அறிவிக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அதன் அடிப்படையிலான வர்த்தமானிப் பிரகடனம் - அதாவது முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி பதவியிலிருந்து ஜெனரல் சரத் பென்சேகா விலகுகின்றார் என்ற அறிவிப்பு - இன்னும் வெளிப்படுத்தப்படவேயில்லை. அதற்கான காரணம் என்னவென்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.

வழமையாக, முப்படைகளின் தளபதி மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி போன்ற பதவிகளில் இருப்போரின் பதவி விலகல் தொடர்பில், அவர்கள் பதவியிலிருந்து விலகும்போதே - அந்த ஓரிரு நாள்களிலேயே - அதுபற்றிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகிவிடும். அதனோடு சேர்த்து அப்பதவிக்கான புதியவரின் நியமனமும் வர்த்தமானியில் அறிவிக்கப்படும். அதுவே ஒருவரின் பதவி ஏற்புக்கும் மற்றவரின் பதவி விலகலுக்குமான சட்ட பூர்வ ஆவணமுமாகும்.

ஆனால், முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி பதவியிலிருந்து ஜெனரல் சரத் பொன்சேகா பதவி விலகி, இரண்டு வாரங்களாகியும் இன்னும், அவர் பதவி விலகியமையை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளிப்படுத்தப்படாமல் இருக்கின்றமை பலத்த சந்தே கத்தை ஏற்படுத்துவதாக இருப்பதாக நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ஜெனரல் சரத் பொன்சேகா, மேற்படி முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி பதவியில் இருந்து விலகும் கடிதத்தையே ஒப்படைத்தார். பதவியை இராஜிநாமாச் செய்யும் கடிதத்தை அல்ல என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

அப்படி அவர் தமது பதவியை இராஜிநாமாச் செய்யும் - அல்லது படைத்துறை சேவையை விட்டு இராஜிநாமாச் செய்து விலகும் - ஆவணத்தை ஜனாதிபதியிடம் ஒப்படைத்து, அந்தக் கடிதத்தை அல்லது ஆவணத்தைத் தாம் ஏற்றுக்கொள்கின்றார் என ஜனாதிபதி எழுத்து மூலம் அவருக்குப் பதிலளித்திருப்பாராயின், அத்துடன் விடயம் முற்றுப்பெற்றிருக்கும். அத்தகைய நிலையில் சரத் பொன்சேகா சட்டரீதியாக பதவியை நீங்கியவராகி விட்டிருப்பார். அவர் ஜனாதிபதித் தேர்தலிலோ, அல்லது பிற தேர்தலிகளிலோ போட்டியிடுகின்றமைக்குத் தடையாக அப்பதவி நிலை விவகாரம் வராது.

ஆனால், ஜெனரல் பொன்சேகாவோ முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி பதவியில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவருக்கு வழங்கப்பட்ட பதவிக்காலம் முடிய முன்னர், பதவி விலகி ஓய்வுபெறுவதற்கே இப்போது விண்ணப்பித்துள்ளார். இராஜிநாமாவுக்கு அல்ல. அத்தகைய சூழலில் அவரது முற்கூட்டிய ஓய்வுக்குச் சம்மதம் அளிக்கும் விதத்தில் ஜனாதிபதி சார்பில் ஜனாதிபதியின் செயலாளர் வழங்கிய ஒப்புதல் கடிதம் மட்டுமே அவரின் படைத்துறைச் சேவை விலகலை உறுதிப்படுத்தும் சட்டரீதியான ஆவணமாகிவிடாது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதனை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் பிரதியே அதற்கான உரிய ஆவணமாக இருக்கமுடியும்.

ஜெனரல் சரத் பொன்சேகா பதவி விலகி இரண்டு வாரங்களாகியும் வெளியிடப்படாமல் இழுபறிப்படும் வர்த்தமானி அறிவித்தல், அடுத்த 17 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னரும் வெளியாகாமல் போகுமானால், ஜெனரல் பொன்சேகாவின் ஜனாதிபதித் தேர்தல் கனவு, வெறும் பகல் கனவாகவே முடிந்துவிடும்.

இப்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாமல் இழுபடுவதன் பின்னால், அரசுத் தலைமையின் சூழ்ச்சித் திட்டம் ஏதும் இருக்குமோ என்பது இனித்தான் தெரியவர வேண்டும்.

## பொன்சேகாவின் பதவி விலகல் அறிவிப்பு இன்னமும் வர்த்தமானியில் வெளியாகவில்லை

நேற்று 29.11.2009 இல் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக முன்னாள் இராணுவத்தளபதியும், கூட்டுப் படைகளின் பிரதான அதிகாரியுமான ஓய்வு பெற்ற ஜெனரல் சரத் சந்திரலால் பொன்சேகா முறைப்படி நேற்று ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினார்.

ஜனவரி 26ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியும் ஜனதா விமுத்தி பெரமுனவும் சரத் பொன்சேகாவை ஆதரிக்கவிருக்கின்றன. ஆனால், இரு அமைப்புக்களும் ஒரே மேடையில் தோன்றி பிரசாரங்களை நடத்தப்போவதில்லை.

இரு அமைப்புக்களும் தமது சொந்தப் பிரசாரங்களைத் தனித்தனியே நடத்தவிருக்கின்றன.

ஊடகங்களிலும் புலனாய்வுகளிலும் தகவல்கள் ஏற்கனவே வெளியாக்கியிருந்த போதிலும் எதிர்க்கட்சிகளின் சார்பில் முன்னாள் இராணுவத் தலைவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்பதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்கள் மத்தியில் சந்தேகம் இருக்கவே செய்தது. ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியில் இறங்குவார் என்றுதான் அவர்கள் எதிர்பார்த்து வந்தார்கள்.

தாம்தான் கொன்றதாகக் குற்றச்சாட்டுக்கள் கூறப்படுகின்றன. எனது சீருடையைக் களைந்துவிட்டு இவ்வளவு கீழ்த்தரமான ஒருசெயலில் இறங்குவதற்கு பாதாள உலகக் கும்பலில் இணையும் அளவுக்கு நான் மோசமான நிலைக்குப் போபவனல்ல. விக்கிரமதுங்கவின் திருவுருவப்படம் ஒன்றுக்கு விக்கிரமசிங்க மாலை அணிவித்தபோது அவருக்கு அருகில் பொன்சேகா நின்றிருந்தார்.

அவர் அதிகாரத்துக்கு வந்தால் இராணுவத்தன்மையுடைய ஆட்சி இடம் பெறுமா என்று கேட்கப்பட்டபோது,

'ஜனாதிபதியாக நான் தெரிவு செய்யப்பட்டால் இராணுவத்தளபதியின் மட்டத்துக்கு இறங்கிவிடமாட்டேன்' என்று பதில் கூறினார்.

இராணுவப்புரட்சியொன்று ஏற்படவிருந்ததாகக் கூறப்பட்டது தொடர்பாகவும் அவரிடம் கேட்கப்பட்டது. 'சில வட்டாரங்களில் அவ்வாறு பேசப்பட்டதாக கேள்வியுற்றேன். பத்திரிகைகளில் படித்தபிறகுதான் எனக்கு அது உறைத்தது. நான் நினைத்திருந்தால் கொழும்புக்குப் படைகளை அனுப்பியிருக்க முடியும் அப்படியான யோசனையெதுவும் உள் மனதில் இருக்கவில்லை' என்று கூறினார்.

**வர்த்தமானியில் அறிவிப்பு இல்லை**

ஜெனரல் பொன்சேகா போட்டியிடுவது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டகையோடு இன்னொரு சிக்கல் தலை

மக்கள் சுதந்திர கூட்டணியினர் தெருவீதிகளில் வாகனங்களை நிறுத்தி பிரசார பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த அதேவேளையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களின் உரிமையாளர்கள், ஆசிரியர்களை அழைத்துக் கூட்டமொன்றை நடத்திக் கொண்டிருந்தார்.

தமது பதவிக்காலத்தில் இரண்டு ஆண்டுகளை தாம் கைவிடுவதாக கூறிய ஜனாதிபதி, வடக்கு, கிழக்கு மக்களிடம் தீர்வொன்றைப்பெறவில்லையென்ற குற்றச்சாட்டின் காரணமாகவே புதிதாக தேர்தலை நடத்த தாம் உத்தேசித்ததாக அவர்களிடம் கூறினார்.

நாடு சர்வாதிகாரத்தை நோக்கிச் சரிந்து செல்வதைத் தடுப்பதற்காகவே பென்சேகாவை பொது வேட்பாளராகப் போட்டியிட அழைத்தோம் என்று ஜே.வி.பியினர் நடத்திய செய்தியாளர் கூட்டமொன்றில் பேசுகையில் அனுர குமர திஸாநாயக்க தெரிவித்தார். எனினும் ஜெனரல் பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதும் காபந்து அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும்போது ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாக நியகமிக்கப்படவேண்டும் என் பதைத் தாங்கள் ஆதரிக்கவில்லையென்று அவர் குறிப்பிட்டார். ஜெனரல் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருப்பது கொழும்பு ராஜதந்திரவட்டாரங்களில் அதிக அக்கறையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வாரம் அமெரிக்கத்தூதுவர் பட்றீஷியா புட்டெனியை அவர் சந்தித்தார். அதேபோல் இந்திய உயர் ஸ்தானிகர் அஷோக் காந்துடனும் நீண்டநேரம் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

**பாதுகாப்புக் கொள்வனவும் பொன்சேகா குடும்பமும்**

பென்சேகாவின் குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவர் நடத்தியுள்ள பாதுகாப்பு பொருள் கொள்வனவுகள் குறித்து குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர் ஆய்வு நடத்தவிருப்பது தெரியவந்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர்களுக்கும் இதேகுற்றச்சாட்டுக்கள் அடங்கிய அநாமதேயக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இது எங்கிருந்து ஆரம்பித்தது என்று தெரியவில்லை. ஓர் அதிகாரி இவைகளை ராஜதந்திர தூதரங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என்ற ஆச்சரியமான தகவலும் கிடைத்துள்ளது.

இந்தக் கொள்வனவுகளில் சம்பந்தப்பட்டவர்களில் பொன்சேகாவின் மருமகனும் அடங்குவார் என்று அறிய தலைநகர் ஒன்றிலிருந்து செயற்படும் அரசு சார்ந்த இணையத்தளம் ஒன்று

## வேட்புமனுத் தாக்கலில் சட்ட ரீதியில் சிக்கல் ஏற்படும் வாய்ப்பு

விக்கிரமசிங்கவுக்கு உதவுவதற்காகவே முன்னாள் இராணுவத் தளபதி போட்டியில் இறங்குகின்றார் என்று அவர்கள் கருதி வந்தார்கள். அவ்வாறு நடக்காவிட்டால் தாம் தனது முழங்காலில் தமது அலுவலகத்திலிருந்து வெளியில் நடக்கப்போவதாக அரச வானொலியில் பிரசாரகர் ஒருவரர் சவால் விட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**அன்னப்பறவை அவரது சின்னம்**

ஜனநாயகக் கூட்டமைப்பின் சார்பில் ஜெனரல்(ஓய்வுநிலை) பொன்சேகா போட்டியிடுவார். ஐக்கிய தேசிய முன்னணிக்கு வழங்கப்பட்டிருக்கும் புதிய பெயராகும் இது. அதிகம் விளம்பரமில்லாத ஒரு சிறுகட்சியினால் இந்தப் பெயர் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்னப் பறவை பொன்சேகாவின் தேர்தல் சின்னமாக இருக்கும்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று கல்கிசையில் 'லேக் சைட்' ஹோட்டலில் நடத்திய கேள்வி பதில் நிகழ்ச்சியொன்றில் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகிறாரா என்று கேட் கப்பட்டபோது,

''நான் போட்டியிடுவது மட்டுமல்ல அதிபர் ராஜபக்ஷவைத் தோற்கடிப்பேன் என்பதிலும் நம்பிக்கையுடன் இருக்கிறேன்'' என்று அவர் விடையளித்தார்.

இந்தக் கூட்டத்தில் உணர்ச்சி மயமான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விருந்து மண்டபத்துக்குள் ஜெனரல் பொன்சேகா நுழைந்தபோது ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார். 700 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் இங்கு குழுமியிருந்தார்கள்.

**லசந்தவைக் கொன்றவர் யார்?**

பொன்சேகா அங்கு பேசுகையில், சட்டத்தரணியும், 'சண்டே லீடர்' ஆசிரியருமான லசந்த விக்கிரமசிங்கவை

தூக்கியிருக்கின்றது. அவர் ஓய்வு எடுப்பது தொடர்பாக இன்னமும் வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை என்பதே அந்தச் சிக்கல். அதாவது, இராணுவச் சேவையிலிருந்து அவர் இன்னமும் உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட வில்லை என்பதாகும்.

பதவியிலிருந்து டிசெம்பர் முதலாம் திகதியுடன் விலகிக்கொள்வதாக ஜெனரல் பொன்சேகா நவம்பர் 12ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு எழுதியிருந்தார். மூன்று நாள்கழித்து (நவம்பர் 14) கடிதத்துக்குப் பதில் வந்தது.

''....உங்கள் விருப்பப்படி மேலும் தாம திக்காமல் உடனடியாகவே ஓய்வு பெறும்படியும் ஏற்கனவே ஓய்வுபெற வேண்டிய திகதியை நான்கு வருடங்களால் தாமதித்துவிட்டடீர்கள் என்றும் தெரிவிக்கும்படி ஜனாதிபதி கூறியுள்ளார். இலங்கை இராணுவத்திலிருந்து

## அரசசார்பு இணையத்தளம் வெளியிட்டுள்ள புதிய கதை

நீங்கள் உடனடியாகவே ஓய்வு பெறுகிறீர்கள். அதேவேளை கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி பதவியிலிருந்தும் உடனடியாக விலகிக்கொள்கிறீர்கள்' என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் மனுவில் அவர் ஓய்வுபெற்றமைக்கான வர்த்தமானப் பத்திரப் பிரதி இணைக்கப்படுவது அவசியம் என்று அவரது சட்டத்தரணிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இல்லையெனில் அவரது வேட்பு மனுவை தேர்தல் ஆணையாளர் டிசெம்பர் 17ஆம் திகதி வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும்போது நிராகரித்து விடக்கூடும் என்று சட்டத்தரணிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் வரைக்கும் வர்த்தமானியில் பதவிவிலகல் தொடர்பான அறிவித்தல் வராவிடில் என்ன நிலைமை என்பதே இப்போது ஏற்பட்டிருக்கும் கவலையாகும். சட்டப்படியான பரிகாரங்கள் பற்றி இப்போது ஆராயப்பட்டு வருகின்றன.

**இருதரப்பிலும் பரப்புரை ஆரம்பம்**

அரசதரப்பினர் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுபட்டுவரும் அதேவேளையில் எதிர்த் தரப்பினரும் அதேபாணியில் தமது பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர். நீலத் தொப்பிகள் அணிந்த ஐக்கிய

தெரிவித்துள்ளது. இந்த இணையத்தளம் தொடர்ச்சியாகவே பிரிவினை எதிர்ப்புப் போரின் போது ஊழல் எதுவும் இடம்பெறவில்லையென்றும் பொது மக்கள் எவரும் கொல்லப்படவில்லையென்றும் பிரசாரம் செய்து வந்துள்ளது.

**புதிய கதை**

என்றாலும், 'அப்பாவிகளான தமிழ் மக்கள் மீது தீர்க்கப்பட்ட ஒவ்வொரு குண்டும் ஜெனரல் பொன்சேகாவின் குடும்பத்துக்கு வருமானத்தை அள்ளிக்குவித்துள்ளது' என்ற தலைப்பிலான புதிய செய்தியானது வேறு கதையொன்றை சொல்வதாகவுள்ளது.

இந்தச் செய்திக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பொன்சேகாவின் மருமகனின் கொழும்பிலுள்ள சட்டநிபுணர்கள் அந்த இணையத்தளத்திற்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர் நஷ்டஈடு கோரி மனுத்தாக்கல் செய்துள்ளனர். இந்த இணையத்தளத்தின் உரிமையாளர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முன்னாள் பத்திரிகையாளர் ஒருவர் என்று தெரியவருகிறது. இவர்மீது ஏற்கனவே பல நஷ்டஈடு மனுக்கள் இருக்கின்றன. அவரது இணையத்தளம் செயற்படும் நாட்டிலேயே அவர்மீது நீதிமன்ற நடவடிக்கையெடுப்பது பற்றி சட்டத் தரணிகள் ஆலோசித்து வருகின்றனர்.

(ப)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 15 01.12.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | பி.ப.03.31 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | பி.இ.03.39 வரை |
| சுபநேரம்: | 10.44-012.14 வரை |
| ராகுகாலம்: | 03.14-04.44 வரை |

திருக்கார்த்திகை விரதம்
சர்வாலய தீபம் (வீடுகளில் தீபம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விண்ணப்பிக்க இறுதிநாள் இன்று

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் இம்முறை நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இதுவரைக்கும் விண்ணப்பிக்காத மாணவர்கள் இன்று திங்கட்கிழமை பி.ப. 5 மணிக்கு முதல் விண்ணப்பங்களை தத்தமது கல்வி வலயங்களில் கையளிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

பின்னர் கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்றும் அவர் அறிவித்துள்ளார்.

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்களில் இம்முறை டிசெம்பர் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விவரங்கள் கல்வி வலய ரீதியாக திரட்டப்பட்டுவருகின்றன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விவரங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-9)


## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 22.10.1947 உதிர்வு 15.11.2009

கடந்த 15.11.2009 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**திருமதி பேபி கமலா கனகரத்தினம்**

அவர்களின் 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (30.11.2009) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் எமது உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(90975)

மாதனை, பருத்தித்துறை. குடும்பத்தினர்.


# மரண அறிவித்தல்கள்

## செல்லர் செல்வரத்தினம்



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் செல்வரத்தினம் நேற்று முன்தினம் (28.11.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பிலிப் - பரிமளம் தம்பதியினரின் அன்பு மருமகனும் சிறிவதியின் அன்புக் கணவரும் சிறிகாந், தாமினி, கேசவன், வசந்தமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூமணி, நாகரத்தினம், பேபி, கிளி, ராசரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (92658) தகவல்: குடும்பத்தினர்.

## வைரமுத்து பாலசிங்கம்




சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து பாலசிங்கம் நேற்று முன்தினம் (28.11.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கெங்காதேவியின் அன்புக் கணவரும் கோமதி, சுமதி, சுகிமதி, சுகிதரன், அரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோய், பாபு, சங்கர், நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு, கட்டுடை. (92654) தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஏரம்பு முருகேசு



நவாலியைப் பிறப்பிடமாகவும், மடத்தடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு முருகேசு நேற்று (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் பாசமிகு கணவரும், சாந்தி, சதீஸ்வரன்(லண்டன்), சசிகரன்(ஜேர்மனி), ஸ்ரீகரன்(லண்டன்), சுகந்தி(ஜேர்மனி), சுதர்சன்(அமரர்), ஜெயந்தி, துஷ்யந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துரைரத்தினம், சந்திரா(கொழும்பு), பரிமளா (ஜேர்மனி) வாசுகி (லண்டன்), சிவநேசன்(ஜேர்மனி), சபேசன்(ஜேர்மனி), சங்கர் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், இரத்தினம், வேலாயுதம் (அமரர்), கந்தசாமி (அமரர்), முத்துமணி, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குருசாமி(அமரர்), சிவானந்தம்,திலகவதி, ஈஸ்வரி (அமரர்), யோகம்மா, சிவசாமி ஆகியோரின் மைத்துனரும், திலக்ஷன் (பிரான்ஸ்),தனுசன், விதுசன், வெனிஸ்டா(கொழும்பு), மானுகி(ஜேர்மனி), அர்ச்சனா(ஜேர்மனி), ஹருணி (ஜேர்மனி), தர்சிகா (ஜேர்மனி), அஜித்(லண்டன்), அலக்ஸ் (லண்டன்), துளசிகா (ஜேர்மனி), தர்சிகா(ஜேர்மனி), சிவசுதர்சன் (ஜேர்மனி), சஞ்சிதா, சுவேதா, வினுஷா, சந்தோஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு, மடத்தடி, சாவகச்சேரி. (92657) தகவல்: சு.துரைரத்தினம் (மருமகன்).

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.மாநகரசபை சுகாதாரப் பகுதியினரும் வண்ணார்பண்ணை (ஜே/101) குடும்பநல உதவியாளர் பிரிவினரும் இணைந்து நடத்தும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை யாழ்.கில்னர்லேன் பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோருக்கு நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## குடத்தனை வீட்டுத்திட்ட மக்களுக்கு ஈ.பி.டி.பி உதவி

வடமராட்சி,நவ.30

குடத்தனை - மணற்காடு தொகுதி வீட்டுத்திட்டத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோருக்கு ஈ.பி.டி.பி அமைப்பினர் சமையல் பாவனைக்குத் தேவையான பொருள்களை அண்மையில் வழங்கியுள்ளனர். ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.சிறிரங்கேஸ்வரன் தலைமையிலான இக்குழுவினர் இவ் வீட்டுத்திட்டத்தில் தங்கியுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் இப்பொருள்களை வழங்கினார்கள். (1-236)

## 5 வருடங்களின் பின் இன்று முதல் வழிபாடு

யாழ்ப்பாணம், கடற்கரை வீதியிலுள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் 5 வருடங்களின் பின்னர் பூசை, வழிபாடுகள் ஆரம்பமாகின்றன. இன்று முற்பகல் 10.30 மணிக்கு தண்டாளப்பூசை அபிஷேக ஆராதனை இடம்பெறவுள்ளன.

இன்று முதல் நித்திய பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. கடந்த 5 வருடங்களாக இந்தக் கோயில் பிரதேசம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

## கணக்காய்வாளர் உப அலுவலகம் யாழ்.நகரில் திறப்பு

கணக்காய்வாளர் நாயகத்தின் உப அலுவலகம் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.செயலகத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கணக்காய்வாளர் நாயகம் கே.சுவாமி ஜோதி இந்த அலுவலகத்தை வைபவரீதியாக நேற்று மாலை திறந்து வைத்தார்.

யாழ்.அரச அதிபர் ... டனர். (ஒ-1)

## இந்தோனேஷியா முகாமில் உள்ள அகதிகளுக்கு பலவகை நோய்; ஆனால் மருத்துவ வசதி இல்லை

கொழும்பு, நவ. 30

இந்தோனேஷியாவின் 'மெறாக்' அகதி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் பலர் கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் அகதிகள் நலன் பேணும் அமைப்பான 'லான் ரண்டுல்' என்கிற அகதிகள் நலன் பேணும் கூட்டமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த அமைப்பு மேற்படி நிலைமையை விளங்கப்படுத்தி சர்வதேச அமைப்புக்கு (International Organisation of Migration) கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்தோனேஷியாவின் 'மெறாக்' அகதிமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் பலர் கடுமையான வயிற்றோட்டத்தாலும், வாந்தியாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களுக்கு அவசியமான மருத்துவ வசதிகள் முகாமில் இல்லை. இந்த அகதிகளை முகாமிலிருந்து வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லக்கூடிய வகையில் போக்குவரத்து வசதிகளும் அங்கு இல்லை. ஆனால் இந்த அகதிகளுக்கு அவசரமாக மருத்துவவசதிகள் தேவைப்படுகின்றன. இங்குள்ள அகதிகள் அனைவரும் நோய்வாய்ப்படவேண்டி ஏற்பட்டுவிட நேருமோ என்றும் அஞ்சவேண்டி உள்ளது. சிறார்கள் முகாமுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் போஷாக்கின்மைக்கு உட்பட்டு நிறை குறைவுக்கு ஆளாகியுள்ளனர். - என்று உள்ளது. (அ-சி)

## பிராணாயாமப் பயிற்சி

வாழும் கலை அறநெறி நிறுவனத்தின் ஏற்பாட்டில் பன்றிக் காய்ச்சலைத் தடுக்கும் முகமாக இலவச பிராணாயாமப் பயிற்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 6மணி வரையும் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப்பயிற்சி நெறியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204-16)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2009ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சையில் கலைப்பிரிவில் 3A விசேட சித்தியுடன், யாழ்.மாவட்டத்தில் 19 ஆவது இடத்தினையும் பெற்ற யா/இந்துமகளிர் கல்லூரி மாணவி

**சிவசுப்ரமணியம் தனுஷா**

அவர்களை மேலும் பல கலைகள் கற்று மேன்மையுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

63, பரம்பன்வை வீதி, திருநெல்வேலி. (92635) வாழ்த்துவோர்: அத்தான் - ராஜ்குமார் அக்கா, பிள்ளைகள்.

## Nottingham College Of London And UNI ICT - Campus

கணனி நிறுவனங்கள்

### யாழ் மாணவர்களுக்கு வழங்கும் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2010

எமது யாழ் மாவட்ட மாணவர்களது கணனி, ஆங்கிலம், முகாமைத்துவம்,மருத்துவம் போன்ற துறைகளின் அறிவை வளர்க்கும் நோக்குடன் கீழ்வரும் சர்வதேச கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு எமது நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. அந்த வகையில் கீழ்வரும் கற்கை நெறிகளை நீங்கள் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றின் மூலம் எமது நிறுவனத்தில் இலகுவாக கற்கமுடியும். இத்திட்டத்தின் மூலம் ஒருவர் மூன்று கற்கை நெறிகளை தெரிவு செய்து கற்க முடியும்.

**Certificate Courses :-**
- Certificate in Information Technology
- Certificate in PC Hardware Engineering
- Microsoft Office for Business Professional
- Certificate in PC Network Administration
- Certificate in English
- Certificate In Business & Communication

**Diploma Courses :-**
- Diploma in Marketing
- Diploma in Human Resource Management
- Diploma in Electronic Technology
- Diploma in Multimedia
- Diploma in IT (One Year)
- Diploma in Hardware Engineering
- Diploma in Business (With Accounting & IT)
- Diploma in Business Technology
- Professional Diploma in Marketing
- Diploma in Spoken & Practical English & IELTS

**Higher National Diploma**
- Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy)

**Degree Courses :-**
- B .A (Hons) in Business Administration
- B.Sc (Hons) in Multimedia

- Conditions for Apply -

எமது இத் திட்டத்தில் இணைய நீங்கள் செய்ய வேண்டியவை????

- எமது இப்புலமைப்பரிசிலானது பொது அறிவு மற்றும் நுண் அறிவு பரீட்சைகளை கொண்டதாகும்.
- நீங்கள் பெறும் புள்ளிகளின் ஊடாக எம்மால் உங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இன்றே கீழ்வரும் எமது முகவரிக்கு உங்களது முழுப்பெயர், வீட்டு முகவரி, நீங்கள் கற்க விரும்பும் எமது கற்கைநெறியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை தெளிவாக எழுதி கீழே தரப்பட்டுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும்.

அல்லது மேற்படி உங்கள் விபரங்களை உங்களது கைத்தொலை பேசியில் வரப்செய்து 0777 - 110 862 என்னும் எமது தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்!!!!! இவ்வாறு அனுப்பிவைக்கும் மாணவர்களுக்கு நாம் இலவசமாக எமது விண்ணப்படிவங்கள், எமது கற்கை நெறிகள் பற்றிய விபரம் மற்றும் எமது புலமைப்பரிசில் நடைபெறும் திகதி ஆகியவற்றை தபாலில் அனுப்பிவைப்போம்.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 10/12/2009

Our International Universities Affiliations:-

eie · Unitec · University of Wales, Newport

UNI & NOTTINGHAM COLLEGE OF LONDON
ICT CAMPUS
No:- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எந்தச் சண்டையிலும் தோற்றதில்லை இந்தப் போட்டியிலும் தோற்கமாட்டேன்

## ஜனாதிபதி வேட்பாளர் பொன்சேகா சொல்கிறார்

கொழும்பு,நவ.30

எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தாம் எதிர்கட்சி வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா அறிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சி ஆதரவிலான தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.


தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பேன் என்றும் அவர் கூறினார்.

எந்தச் சண்டையிலும் நான் தோற்றதில்லை. இந்தப் போட்டியிலும் தோற்கமாட்டேன் என்றும் சரத்பொன்சேகா அங்கு தெரிவித்தார்.

தாம் பதவியேற்றபின்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வதாக அளித்துள்ள வாக்குறுதியை ஒருபோதும் மீறப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

(அ-1)




# பாஷையூர் பிரதேசத்தில் 20 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் மதகு

## தொற்றுநோய் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம், நவ.30

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கும் மக்கள் குடி யிருப்பிற்கும் ஊடாகச் செல்லும் மதகு கடந்த 20 வருடங்களாகப் புனரமைப்புப் பணிகள் எதுவும் இன்றி குப்பை, குழங்கள் நிறைந்து காணப்படுகின்றது.

இதனால் கழிவு நீர் வடிந்து ஓட முடியாது தேங்கி நிற்பதினால் இப்பகுதியில் தொற்றுநோய் அபாயம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர், யாழ். மாநகர ஆணையாளர் ஆகியோருக்கு நேரில் சென்று மகஜர் கையளிக்கப்பட்ட போதும் இது வரையில் எதுவித புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படவில்லை.

இந்த மதகினை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(1-23)



# பழுதடையும் சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகள் உடனடியாகத் திருத்திக் கொடுக்கப்படும்

## ரெலிக்கொம் வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ். குடாநாட்டில் பயன் படுத்தப்படும் சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகள் பழுதடைந்தால் அதனை உடனடியாகவே திருத்திக் கொடுப்பதற்கு ரெலிக்கொம் நிறுவனம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகள் திடீரெனப் பழுதடைந்தால் அதுபற்றிய தகவல்களை உடனடியாகவே நிறுவன்த்திதுக்கு அறிவிக்க வேண்டும்

இந்த அறிவித்தல் கிடைத்ததும் ரெலிக்கொம் தொழில்நுட்பவியலாளர்கள் 24 மணிநேரத்திற்குள் குறித்த வீடுகளுக்கு விரைந்து சென்று சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகளைச் சீர்செய்துவிடுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(04-222)

# வலுக்குறைந்த மின்சாரத்தினால் அல்வாய்ப் பகுதி மக்கள் அவதி

வடமராட்சி,நவ.30

அல்வாய் கிழக்கு - புலோலி வட மேற்கு ஆகிய பகுதிகளில் வருடக் கணக்காக வலுக்குறைந்த மின்சாரமே வழங்கப்பட்டு வருகிறது.

அல்வாய் கிழக்கு தெருமூடி மடத்தடியிலிருந்து தம்பசிட்டிச் சந்திவரை செல்லும் சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் வரையான ஊரெல்லை வீதியின் கிழக்கு, மேற்கு பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு இவ்வாறு வலுக்குறைந்த மின்சாரம் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதனால் மாணவர்களும், மின்சார இலத்திரனியல் சர்தனங்களை உபயோகிப்போரும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் இப்பகுதியில் தனியான் மின்மாற்றி ஒன்று அமைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆயினும் குடாநாட்டுக்கு மீளவும் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்ட போது இப்பகுதியில் மின் மாற்றி எதுவும் நிறுவப்படவில்லை.

எனவே மக்களின் குறையினை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபையினர் மேற்கொள்ள வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(04-236)

# கிளிநொச்சி, முல்லை. அரச ஊழியருக்கு இன்று முதல் இரு பஸ்கள் சேவையில்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மாவட்டத்தில் இருந்து பணிநிமித்தம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சென்றுவரும் அரச ஊழியர்களின் நலன்கருதி மேலும் ஒரு பஸ் இன்று திங்கட்கிழமை முதல் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது.

இதற்கென நேற்று திருகோணமலை டிப்போவில் இருந்து ஒரு பஸ் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டது. வடமாகாண ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறியின் ஏற்பாட்டில் இந்தபஸ் இங்கு கொண்டுவரப்பட்டதாக யாழ். பிராந் திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் தெரிவித்தார்.

இதுவரை ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்ததால் அதில் அனைத்து உத்தியோகத்தர்களும் நெருக்கமாக, நின்று பயணிக்க வேண்டிய நிலை இருந்தது. அவர்களின் முறைப்பாட்டையடுத்தே திங்கட்கிழமை தொடக்கம் மற்றொரு பஸ்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(9-7)

# கைவிடப்பட்ட 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் யாழ்ப்பாணத்தில் மீன் பயிர்ச்செய்கை ஆரம்பம்

## இதற்கென 14 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ. 30

கைவிடப்பட்ட 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மீன் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் திட்டம் தற்போது யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கமநல சேவைகள் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அரியாலை, மறவன்புலோ, தனங்கிளப்பு, எழுதுமட்டுவாழ் வடக்கு, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி, உசன் ஆகிய பகுதிகளில் கைவிடப்பட்ட 2ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மீன் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

கமநல சேவைகள் அமைச்சினால் 14 மில்லியன் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் இருந்து உழவு நடவடிக்கைக்காக 8 மில்லியன் ரூபா நேரடியாக விவசாயிகளிடமும் 6 மில்லியன் ரூபா பெறுமதியான விதை விவசாயத் திணைக்களங்கள் ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்டும் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த நிலங்களில் பயிர்ச் செய்யும் நடவடிக்கைளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(50-14)


# ஐவர் களத்தில்

கொழும்பு, நவ.30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா உட்பட ஐவர் களம் இறங்கவிருக்கின்றனர்.

புதிய இடது சாரி முன்னணித்தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தின, சோசலிய சமத்துவக் கட்சித் தலைவர் விஜே டயஸ், புத்தபிக்குவானவண. பத்தரமுல்லை சீலாரத்ன தேரர் ஆகியோரும் போட்டியிடவிருக்கின்றனர்.

(அ-1)



காயத்திரி பப்ளிகேசனின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற புத்தகப் பெருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட [illegible] ஓங்காரமூர்த்தி நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் காயத்திரி பப்ளிகேசனின் நிர்வாக இயக்குநர் வே. [illegible] வையும் முதலிரண்டு படங்களிலும், பார்வையாளர்கள் ஆர்வத்துடன் நூல்களைப் பார்வையிடுவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: அனுஷ்மன், உமா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கணிதப் பிரிவில் பெண்களால் சாதிக்க முடியுமென நிரூபித்த
# கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி தமயந்தி



முயற்சியும் பயிற்சியும் இருந்தால் வெற்றியடையலாம் என்பதற்கு என்னுடைய பெறுபேறே நல்லதொரு எடுத்துக்காட்டு. இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார் கணிதப் பிரிவில் யாழ். மாவட்டத்தில் இரண்டாவது இடத்தையும் தேசிய ரீதியில் ஐந்தாவது இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்த கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவியான தமயந்தி சிறிபாலன்.

தன்னுடைய சாதனைப்பயணத்தின் அனுபவங்களை அவர் கூறியவற்றை உதயன் வாசகர்களுக்காக இங்கே தொகுத்து தருகின்றோம்.

ஆரம்பத்தில் நான் கிளிநொச்சியில் கல்விகற்றேன். சிறு வயதுமுதலே இயல்பாகவே கல்விமீதான ஈர்ப்பு என்னிடம் அதிகமாகவே இருந்தது. எனது கல்விக்காக அன்றில் இருந்து இன்று வரை என்னுடைய பெற்றோர் அளப்பரிய தியாகங்களைச் செய்துள்ளனர். அதனால்தான் புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியைப் பெற என்னால் முடிந்தது. அத்துடன் ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் 9ஏ, பி என்னும் சிறப்புச் சித்தியினையும் நான் பெற்றுக்கொள்வதற்கு என்னுடைய பெற்றோரே முழுமுதற் காரணமாக இருக்கிறார்கள். இப்போது உயர்தரப்பரீட்சையில் நான் பெற்றுள்ள சிறப்பான பெறுபேற்றுக்கும் அவர்களது பங்களிப்பு மிக முக்கியமானது.

பரீட்சைப் பெறுபேற்றை கைத்தொலைபேசி ஊடாக அறிந்தவுடன் பேருவகை கொண்டேன். பரீட்சை எழுதும்போதே சிறப்பான பெறுபேறுவரும் என்றும் பொறியியல் துறைக்குத் தெரிவாவேன் எனவும் எதிர்பார்த்திருந்தேன். ஆயினும் மாவட்ட ரீதியில் கணிதப்பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெறுவேன் என்றோ தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தைப் பெறுவேன் என்றோ நான் சற்றும் சிந்தித்திருக்கவில்லை.

இதனால் இப்போது கிடைத்துள்ள பெறுபேறு எனக்கு உண்மையிலேயே ஓர் இன்ப அதிர்ச்சிதான்.

பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையத்திலும் கற்பிக்கப்படும் பாட அலகுகளை தினசரி மீட்டல் பயிற்சி செய்வதுடன் அவற்றில் எழும்சந்தேகங்களை நண்பிகளுடனும் ஆசிரியர்களுடனும் கலந்துரையாடி நிவர்த்தி செய்து கொள்வேன். அத்துடன் வீட்டில் சுயமாக நானே படித்து, அவ்வாறு படித்த விடயங்களை கலந்துரையாடுவது எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் கடந்த கால வினாக்களை மீள மீளச் செய்து பார்த்தமையால் இறுதிப்பரீட்சையை எவ்வித பயமும் இன்றி உறுதியோடு எதிர்கொள்ள முடிந்தது.

எனது இந்த உயர்ச்சிக்கு என்னுடைய பாடசாலையான கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், நண்பிகள், எனக்கு சிறுவயதில் கற்பித்த பாடசாலைச் சமூகத்தினர், குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோர் மூல காரணமாக விளங்குகின்றனர். இது தவிர எமது பாடசாலையின் முன்னாள் அதிபர், முன்னாள் பிரதி அதிபர் ஆகியோரும் என்னுடைய கல்விக்கு சிறந்த அடித்தளத்தை இட்டிருந்தனர்.

இவர்கள் எல்லோரையும் இந்த மகிழ்ச்சியான தருணத்தில் மட்டுமல்லாது என்றென்றைக்கும் என் நன்றிக்குரியவர்களாகக் கொள்வேன்.

இதே வேளை என்னுடைய கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டவரும் நான் சிறப்பாகக் கற்க வேண்டும் என்பதற்காக என்னை கொக்குவில் இந்துக்கல்லூரியில் கொண்டு சென்று சேர்த்தவரும், 'வாழ்வக' விழிப்புலனற்றோர் இல்லத்தின் ஸ்தாபகருமான எனது பாட்டியான செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி இப்போது எனது பெறுபேற்றை அறிந்து சந்தோஷம் கொள்ள இப்போது உயிரோடுஇல்லையே என்பதை நினைக்கும் போது துக்கம் நெஞ்சை அடைக்கத்தான் செய்கின்றது.

பாடசாலையும் தனியார் கல்விநிறுவனங்களும் ஒன்றுக்கொன்று நிகரான வகையில் கல்வியை ஊட்டி வருகின்றன. கல்விச் சமூகத்தில் சகோதரத்துவத்தை வளர்ப்பதன் மூலம் கற்பதற்கேற்ற சூழலையும் மனநிலையையும் இலகுவாக உண்டாக்கலாம். அத்தோடு தினசரி கற்றல் வேலைகளை இதயசுத்தியோடும் ஆர்வத்தோடும் செய்து வந்தால் வெற்றி எளிதாகக் கிட்டும் என்பது என்னுடைய அனுபவத்தின் மூலம் கிடைத்த உண்மையாகும்.

எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளராக உருவாகி எனது பாடசாலைக்கும் சமூகத்துக்கும் என்னாலான சேவைகளை செய்ய வேண்டும் என எண்ணுகின்றேன்- என்றார்.

- ஔண்யன் -

# 59 இலங்கை மீனவர்கள் ஆந்திராவில் கரை சேர்ந்தனர்

சென்னை, நவ.30

வரையறுக்கப்பட்ட கடல் எல்லையைத்தாண்டி ஆந்திரப் பிரதேச கரையோரத்தினுள் 7 படகுகளுடன் நுழைந்த 59 இலங்கை மீனவர்களையும் இந்திய கரையோரப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர். சென்னையிலுள்ள இலங்கையின் பிரதித் தூதுவர் வி.கிருஷ்ணமூர்த்தி இதனை அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட மீனவர்கள் சென்னைக்கு அழைத்துவரப்படுகின்றனர் என்றும் அவர்கள் இலங்கையின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்பட வில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-7)

# ஐஸ் தொழிற்சாலை குருநகரில் சனியன்று திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.30

'ஐஸ் லான்ட்' ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை யாழ்ப்பாணம் குருநகர் மவுண்ட் கார்மேல் வீதியில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அரச அதிபர் கே.கணேஷ், மாதகல் பங்குத்தந்தை வண.பிதா ஆனந்தகுமார் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மங்களவிளக்கேற்றல் நிகழ்வைத் தொடர்ந்து அரச அதிபர் கே.கணேஷ் அவர்கள் நாடா வெட்டி தொழிற்சாலையைத் திறந்து வைத்தார்.

'ஐஸ் லான்ட்' குழுமத்தைச் சேர்ந்த எஸ்.சுரேஷ் விருந்தினர்களுக்கு 'ஐஸ்' உற்பத்தி இயந்திரங்களின் தொழில் நுட்பத் திறன்கள் குறித்து விளக்கியதைத் தொடர்ந்து, மாதகல் பங்குத்தந்தை வண. பிதா ஆனந்தகுமார் அடிகளார் இயந்திரங்களுக்கான மந்திர ஜெபம் செய்தார்.

தொடர்ந்து 'ஐஸ் லான்ட்' குழுமத்தைச் சேர்ந்த எஸ்.சுரேஷ் அரச அதிபருடன் இணைந்து 'ஐஸ்' விற்பனையை ஆரம்பித்து வைத்தார். (ஒ.14-16)


## இதய அஞ்சலி

எமது பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியை
திருமதி வளர்மதி பாலச்சந்திரன் அவர்களின் ஏகபுதல்வன்
**அமரர் பாலச்சந்திரன் மோனிசன்**
கடந்த (28.11.2009) சனிக்கிழமை திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். பாலகனின் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியுள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களின் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

யா/கொக்குவில் கிழக்கு,
நாமகள் வித்தியாலயம்.
பாடசாலைச் சமூகம்.
(92647)


# அதிபர் சேவைக்குப் பதவியுயர்வு பெற்றவர்களுக்கு ஜனவரி மாதத்தில் பாடசாலைகளில் நியமனம்

அச்சுவேலி, நவ.30

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2,II இலங்கை அதிபர் சேவை வகுப்பு-3 இல் புதிதாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு அடுத்த வருடம் பாடசாலைத் தவணைத் தொடக்கத்தில் பாடசாலைப் பொறுப்புக்களை வழங் குவதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது.

புதிதாக அதிபர் சேவைக்கு பதவி உயர்வு பெற்றவர்களின் விபரங்கள் வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாகத் திரட்டப்பட்டு அவர்களுக்கு ஜனவரி மாதமளவில் பாடசாலை பொறுப்புக்கள் கையளிக்கப்பட வுள்ளன.

இதே வேளை அதிபர் சேவையில் பதவி உயர்வு பெற்றவர்கள் அதிபர்சேவைக்கு புதிதாக நியமிக்கப்பட்டவர்களின்முழுமையான விவரம் வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகத்துக்கு உரிய முறையில் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதனால் அது தொடர்பான விவரங்கள் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாகத் திரட்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அது உரிய முறையில் கிடைத்ததும் அவர்களுக்கு அவர்களுக்கு உரிய பாடசாலைப் பொறுப்புக்களைவழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படும் என மாகாணக் கல்வி நிர்வாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (04-11)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 ★ 06 ★ 1938

மறைவு
10 ★ 12 ★ 2008

**அமரர் மீனாட்சியம்மா சந்திரசேகரம்**
(இளைப்பாறிய ஆசிரியை, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வதிரி, கரவெட்டி)

நம் குடும்ப ஒளிச் சுடரே
உடன் பிறப்பின் உயிர் ஒவியமே
உறவினர் தம் பெரு நிதியே
கல்வி உலகின் கலங்கரை விளக்கே
ஏதிலிகளின் உளம் நிறைந்த உத்தம தாயே
நீங்கள் உதிர்த்த விதைத்த பயிரான
நல்லுரைகளே எமை வாழ்விக்கின்றன
எம்மீது பொழிந்த அன்பு மழை
ஆதரவெனும் நறுந் தென்றல்
அனைவரையும் அரவணைத்தன
உங்கள் வழிகாட்டல் என்றும்
எமையெல்லாம் வழி நடத்தும்
ஒன்றல்ல ஓராயிரம் ஆண்டெனினும்
நம் மெய்சர் கண்ணீருடன் உங்கள் நிழலில்.........

சின்னாலடி,
அல்வாய்.
கணவர், சகோதரர், பிள்ளைகள், மருமக்கள் குடும்பம்.
(வி/562809)



## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டத்தில் அரச அதிபராக
சிறந்த முறையில் சேவையாற்றியவரும்,
முல்லைத்தீவு, கிளிநொச்சி
மாவட்டங்களில் அரச அதிபராக
கடமையாற்றி இளைப்பாறியவருமான
**கந்தையா பொன்னம்பலம்**
அவர்கள் காலமானதையிட்டு அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வலி. கிழக்கு, கோப்பாய்.
பிரதேச செயலரும்,
அனைத்து நலன்புரிச் சங்க
அங்கத்தவர்களும்.
(92645)



## மரண அறிவித்தல்

**தம்பிராசா துரைராசசிங்கம் (சித்தியர்)**



சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், தையிட்டிபுலத்தை வசிப்பிடமாகவும், தற்போது சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா துரைராசசிங்கம் 29.11.2009 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - தெய்வானைப்பிள்ளை, தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் சுப்பிரமணியம், நவமணி, தவமணி, ஆகியோரின் சகோதரனும், செல்வரட்ணம், காசிநாதன், அமரர் பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், சுலக்சனாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 30.11.2009 திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
தகவல்:
குடும்பத்தினர்
சுலக்சனா.
(92649)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



513ஆவது படையணியினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி இரா. வசந்தசேனன், 513ஆவது படைகளின் கட்டளைத் அதிகாரி கேணல் ரத்னாயக்கா, லெப்ரினன் கேணல் மாஹமிடோன் உட்பட ஏனைய படை அதிகாரிகளுக்கு கரப்பந்தாட்ட வீர,வீராங்கனைகளை அறிமுகம் செய்து வைக்கப்படுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## கொக்கக்கோலா அணியை வீழ்த்தி வெற்றியைச் சுவைத்தது கப்பினஸ் அணி

யாழ்ப்பாணம், நவ.30

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகம் அங்கத்துவ அணிகளுக்கு இடையே லீக் முறையில் நடத்திய உள்ளூர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் தொடர் ஆட்டமொன்றில் கப்பினஸ் அணி வெற்றிபெற்றது.

கடந்த புதன்கிழமை பி.ப 4.30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கப்பினஸ் அணியை எதிர்த்து கொக்கக்கோலா அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறுவதற்குப் பெரும் முயற்சி எடுத்து ஆடின.

இதில் கப்பினஸ் அணி வீரன் தயான் தனது அணிக்காக முதலாவது கோலினைப் பெற்றுக்கொடுத்தார். இதைத் தொடர்ந்து போட்டி சூடு பிடித்துக் கொண்டது.

எனினும் கொக்கக்கோலா அணி வீரர்கள் தங்களுக்குக் கிடைத்த கோல் அடிக்கும் சந்தர்ப்பத்தினை தவறவிட்டனர். இந்த நிலையில் முதல்பாதி ஆட்டம் 1:0 என்ற நிலையில் முடிவுற்றது.

இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் மீண்டும் ஆரம்பமானபோது:

கொக்கக்கோலா அணியினர் கோல் அடிப்பதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டனர். ஆயினும் அது பலிக்கவில்லை. இதற்கிடையில் கப்பினஸ் அணிவீரர் ஜிந்து தனது அணிக்காக அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து அசத்தினார்.

இதனால் ஆட்ட முடிவில் கப்பினஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (04-23)

## சமநிலையில் முடிவடைந்த உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.உதைபந்தாட்ட லீக், அங்கத்துவகக் கழக அணிகளுக்கு இடையே லீக் முறையில் நடத்தும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டம் ஒன்று சமநிலையில் முடிவடைந்தது.

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் 'ஏ' அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் இரண்டு அணிகளும் 2:2 என்ற கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (04-23)

## விளையாட்டு அலுவலர்கள் யாழ்ப்பாணத்துக்கு நியமனம்

வலி.வடக்கு, நவ.30

யாழ்.மாவட்டத்திற்கு இரண்டு விளையாட்டு அலுவலர்கள் வடக்கு, மாகாணக் கல்வி விளையாட்டுத் திணைக்களத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதேச, உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் விளையாட்டு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் உள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை அலுவலர் பற்றாக்குறையை நீக்கவழி செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய விளையாட்டு அலுவலர்களான எஸ்.குமார் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு அலுவலகத்திலும் கே.முகுந்தன் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். (04-86)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## பண்டத்தரிப்பு பண் மகளை வீழ்த்தி பன்னாலை கணேசன் கேடயம் சுவீகரித்தது

வலி.வடக்கு, நவ. 30

513ஆவது படையணியினர் நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டச்சுற்று போட்டியில் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பண்மகள் விளையாட்டுக் கழகமும், பன்னாலை கணேசா விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காது மோதிக்கொண்டன. ஒவ்வொரு சுற்றுத்தொடக்கத்திலும் பண்மகள் விளையாட்டுக் கழகம் புள்ளிகளை முன்னணியில் பெற்றுச்சென்ற போதிலும் இறுதி நேரத்தில் சரியாக விளையாட முடியாது தடுமாறியது. இது எதிரணியினருக்கு சாதகமாகக் காணப்பட்டது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இறுதிப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் இறுதி நேரத்தில் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் தனதாக்கிக்கொண்டது.

இதனால் பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம் முதல் இரண்டு சுற்றுக்களையும் முறையே 25:22, 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் பண்டத்தரிப்பு பண்மகள் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று 513வது படையணியினரின் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (04-86)

## மின்சார ஊழியர்களுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டி முடிவுகளில் சில

இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம் இணைந்து மின்சார சபையின் ஊழியர்களுக்கு இடையே மூன்று பிரிவுகளாக நடத்திய விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றோரின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன் ஒரு பகுதி ஏற்கனவே உதயனில் பிரசுரமாகியிருந்தது. இன்னொரு பகுதி வருமாறு:

★ மெதுவான சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்)

முதலாம் இடம்-பாலசுப்பிரமணியம் ஜெய்ப்பிரகாஸ், 2ஆம் இடம்-அன்னராசசிங்கம் றெக்னோ, 3ஆம் இடம்-மார்க்கண்டு சசிகரன்.

★ மெதுவான சைக்கிள் ஓட்டம் (பெண்கள்)

முதலாம் இடம்-திருமதி பவானி வெற்றிவேல், 2ஆம் இடம்-திருமதி ஜெயராணி மதியோகநாதன்.

★ சங்கீதக் கதிரை (பெண்கள்)

முதலாம் இடம்-செல்வி விஜயந்தி சந்திரபாலன், 2ஆம் இடம்-செல்வி விஜிதா குகதாசன், 3ஆம் இடம்-திருமதி லிங்கரூபன் கிருஸ்ணவேணி.

★ தடை தாண்டல் (தம்பதிகள்)

முதலாம் இடம்-திரு.திருமதி செபஸ்ரியம்பிள்ளை, 2ஆம் இடம்-திரு.திருமதி பீற்றர், 3ஆம் இடம்-திரு.திருமதி லிங்கரூபன்.

அங்கத்தவர்களின் பிள்ளைகள்

★ தேசிக்காய்க் கரண்டி ஓட்டம் 10 வயதிற்குட்பட்டவர்கள் (ஆண்கள்)

முதலாம் இடம்-யோகேந்திரன் யதுசன், 2ஆம் இடம்-பிரபாகரன் நிரேஸ்தேவ், 3ஆம் இடம்-அன்னராசசிங்கம் றொஷான்.

★ தேசிக்காய்க் கரண்டி ஓட்டம் 10 வயதிற்குட்பட்டவர்கள் (பெண்கள்)

முதலாம் இடம்-தயானந்தன் சம்ஷாஜினி, 2ஆம் இடம்-ரவீந்திரன் துசீபா, 3ஆம் இடம்-தில்லைமணி பானுப்பிரியா.

★ 50 மீற்றர் ஓட்டம் 10-13 வயதிற்குட்பட்டவர்கள் (ஆண்கள்)

முதலாம் இடம்- தர்மதாசன் ஹரிதாஸ், 2ஆம் இடம்-காண்டீபன் கருணராஜா, 3ஆம் இடம்-பார்த்தீபன் கஜேந்திரன்.

★ 50 மீற்றர் ஓட்டம் 10 வயதிற்குட்பட்டவர்கள் (ஆண்கள்)

முதலாம் இடம்- லோகேந்திரன் யதுர்ஷன், 2ஆம் இடம்-தயானந்தன் ரதீபன், 3ஆம் இடம்-சிறிரவிகுலன் பிரணவன்.

★ 50 மீற்றர் ஓட்டம் 10-13 வயதிற்குட்பட்டவர்கள் (பெண்கள்)

முதலாம் இடம்-இராஜசிவம் பகீரதி,, 2ஆம் இடம்-தில்லைமணி ஜோயினி, 3ஆம் இடம்-சிறிமுரளிதர் லவீனா.

★ 50 மீற்றர் ஓட்டம் 10 வயதிற்குட்பட்டவர்கள் (பெண்கள்)

முதலாம் இடம்- பார்த்தீபன் தரங்கினி, 2ஆம் இடம்-குணராசா டிலக்சினி, 3ஆம் இடம்-தயானந்தன் கம்சாஜினி. (வளரும்)




மாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய யாழ். மத்திய கல்லூரி வீரர்கள், அதிபர் எல். ஓங்காரமூர்த்தி விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் எடிசன், பயிற்றுநர்களான சுரேஸ் மோகன், சுகிர்தராஜ் ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- எ.தமிழினியன்)

## தாச்சிச் சுற்றுப்போட்டி ஆட்டத்தில் காளி அம்பாள் வி.க. வெற்றி!

யாழ்ப்பாணம்,நவ.30


யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டி ஆட்டமொன்றில் காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

சுதுமலை யுவசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இப்போட்டியில் காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணியை 8:3 என்ற புள்ளிகளைப் பெற்று வெற்றிகொண்டது. (04-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். மாவட்ட பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர்கள், கிராமிய விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர் ஆகியோருடனான கலந்துரையாடல் கடந்த பத்தாம் திகதி யாழ். மாவட்ட செயலக வடவலய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி மகாராணி ராசரட்ணம் தலைமையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
வடவலய உதவிப் பதிவாளர் நாயகம் கருத்துரை வழங்குவதனையும், யாழ். மாவட்ட செயலக காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் பரஞ்சோதி பிரபாகர், மற்றும் பதிவாளர்கள் அமர்ந்திருப்பதனையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: உமா)

# வெளிநாட்டுக்கு வேலை தேடிச் செல்பவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி வரும் நிலை உருவாகவேண்டும்

## விஞ்ஞான அமைச்சின் ஆலோசகர் கூறுகிறார்

நல்லூர், நவ. 30

தொழில் வாய்ப்புகளைத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் மக்கள் வேலை வாய்ப்புக்களைப்பெற யாழ். பிரதேசத்தை நாடும் காலம் உருவாக வேண்டும். கல்வி வளமும் மண் வளமும் நிறைந்த முன்னைய நிலை மீண்டும் ஏற்பட வேண்டும்.

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் வங்கிக்கான நிதி ஆலோசகர் சிறிசேனா ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர் ''விதாதா''வள நிலையத்தின் வெதுப்பகப் பயிற்சி நெறிகள் நல்லூர் உதவி பிரதேச செயலர் ஏ. சோதிநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் ஆலோசகர் சிறிசேனா ராஜபக்ஷ தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

நீண்ட காலத்தின் பின்னர் பலதரப்பட்ட தொழில் பயிற்சிகளை இங்குள்ளவர்கள் பெறக்கூடியதான வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. ''விதாதா''வள நிலையத்தின் மூலம் தற்சமயம் பயிற்சிகள் இடம் பெறுகின்றன.

தொழில், விவசாயத்துறைகளில் மட்டுமன்றி கல்வியிலும் உயர்ந்த நிலையில் இருந்துள்ள இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சி சூழ்நிலை காரணமாக தடங்கல்களுக்கு உள்ளாகியது கவலைக்குரியது.

இங்குள்ள ''விதாதா'' வளநிலையக் குடும்பம் உன்னதமான நிலையையும் உயர்ந்த வருமானத்தையும் எட்டக்கூடியதாக இந்த இளம் தலைமுறைக்குத் தொழில்நுட்ப அறிவுகளினூடாக தொழிற்பயிற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்பது அமைச்சர் திஸ்ஸவிதாரணவின் கருத்தாகும்.

அதற்கிணங்க இந்த நிலையத்தினூடாகப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் இங்கே பயிற்சி பெற்றவர்கள் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்க உதவியாக வங்கிக் கடன்களை வழங்குவற்கும் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வர்த்தக தொழில் முயற்சிகளுக்கு நிதி அவசியம் என்பதால் இது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இங்கு பயிற்சிபெறும் அனைவரும் பெரிய கைத்தொழில் முயற்சியாளர்களாக வரவேண்டும். வேலை வாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சிப்பவர்களின் பார்வை யாழ்ப்பாணத்துக்குத் திரும்பக் கூடியதாக தொழில் துறைகள் விரிவடையவேண்டும் என விரும்புகிறேன் - என்றார்.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் பேசும்போது கூறியதாவது:

எமது பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த நிலையத்தினூடாக நீங்கள் பெறும் பயிற்சி வெறுமனே ஒரு பயிற்சி என்றில்லாமல் இந்தப்பகுதி மக்களின் பொருளாதார வளத்தின் முக்கியத்துவமானதாக விளங்க வேண்டும். ஏற்கனவே பயிற்சி பெற்ற பலரின் குடும்பங்கள் நல்ல பயனைப் பெற்றுள்ளதாக அறியும்போது, எமது எதிர்காலம் எப்படியோ எனக் கவலைப்படும் போக்கைக் கைவிட்டு இந்த நிலையத்தினூடாக வழங்கப்படும் பயிற்சிகளில் இணைந்துகொண்டு நல்ல எதிர்காலத்தை நோக்கிச் செல்ல முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்- என்றார். (1-111)

# ஏ-9 வீதியூடாகக் காட்டு மரங்கள் பெருமளவில் எடுத்துவரப்படுகின்றன

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். குடாநாட்டுக்குத் தென்பகுதியில் இருந்து காட்டு மரங்கள் எடுத்துவரப்படுகின்றன.

இந்தக் காட்டுமரங்கள் எ-9 வீதியூடாகக் கனரக வாகனங்கள் மூலம் கொண்டுவரப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த காட்டு மரங்களுக்கு குடாநாட்டில் கிராக்கி நிலவுகின்றது. காட்டுமரங்களின் இறக்குமதி மூலம் கட்டடப்பணிகளுக்கான மரத்தேவை பெருமளவில் நிவர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

குடாநாட்டில் மக்கள் தமது தேவைக்கு தற்போது வேம்பு போன்ற பயன்தரு மரங்களையே பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

(09-224)

**PHYSICS**
அனுபவம் மிகுந்த ஆசிரியரினால் தனியாகவோ/குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
(92616) தொடர்புகளுக்கு: 0773405973

## அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் இலங்கை வங்கியில் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்கும் கடந்த 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

இந்த ஏலவிற்பனை எதிர்வரும் 5 ஆம், 6ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் அதி மேற்றரக் கிளையில் இடம்பெறும்.

நகைகள் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத இலங்கை வங்கிக் கிளைகளின் விவரம் வருமாறு:-

யாழ். மேற்றரக்கிளை, யாழ்.2 ஆம் மேற்றரக்கிளை, திருநெல்வேலிக் கிளை (கோப்பாய் விரிவாக்கல் கிளை உட்பட), காரைநகர் கிளை, சுன்னாகம் கிளை, மானிப்பாய் கிளை (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட), காங்கேசன்துறைக் கிளை, நெல்லியடிக் கிளை, ஊர்காவற்றுறைக் கிளை (ஊர்காவற்றுறை விரிவாக்கல் கிளை உட்பட), பருத்தித்துறைக் கிளை, சாவகச்சேரிக் கிளை, அச்சுவேலிக் கிளை.

(ஒ-201)

## துண்டி ஐயனார் கோயிலில் வழிபட பொதுமக்களுக்குப் படையினர் அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 30

கொழும்புத்துறை துண்டி ஐயனார் கோயிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபடுகின்ற மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்தபல வருடங்களாக மேற்படி ஆலயத்திற்குச் செல்லும் துண்டிவீதி மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

தற்போது இந்த ஆலயத்திற்குச் சென்று பூஜை வழிபாடுகளில் மக்கள் ஈடுபடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்த அனுமதியை அடுத்து மேற்படி ஆலயத்தை மக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருகின்றனர். (04-224)

**கோழிக் குஞ்சு விற்பனைக்கு**
BAHIRA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA பேட்டுக் குஞ்சுகள் 30.11.2009 மாலை விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
ராஜின் கால்நடைத் தீவன விற்பனை நிலையம்
ஆனைக்கோட்டைச் சந்தி.
T.P.No: 0212222867 (92624)

## கண்ணீர் அஞ்சலி



வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மூத்தவிநாயகர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்டவருமான

**கிட்டினர் நவரட்ணம்**

கடந்த (22.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருவையாறு, கிளிநொச்சி. இராசேந்திரம் (அதிபர்) குடும்பத்தினர்.

(92604)

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
34 ஆவது வருட சேவை
**கலைப் பிரிவு**
**A/L Day Class**
ஆரம்பம் 04.12.2009
Eco. திரு. B. கஜீதரன் | TAM. திரு. குழந்தை
LOG. திரு. S.S. சந்திரன் | H/C. திரு.N.T.தரன்
Geo. திரு. சுரேன் | HIN. திரு.N.T.தரன்
Hist திரு. S.S. தாஸ் | P/SC. திரு.ஸ்ரீரங்கநாத்
Chri. திரு.யூட் | Drama. திரு.மயூரன்
**வர்த்தகப் பிரிவு**
**A/L Day Class**
Eco. திரு. B. கஜீதரன் | Acc. திரு. பகீரதன்
B.ST. திரு. யசோ
ஆரம்பம்: 04.12.2009
(C/562779)

## திருக்கார்த்திகை விரதம் நாளை ஆலயங்களில்

திருக்கார்த்திகை விரதம் குமராலய தீபம், சர்வாலய தீபம், வீடுகளில் தீபம் ஏற்றுதல் ஆகியவை நாளை செவ்வாய் கிழமை நடைபெறவுள்ளன.

ஒரே நாளில் தீபம் ஏற்றும் நிகழ்வுகள் எங்கும் நடைபெறவுள்ளன. அன்று முருகன் ஆலயங்களில் கந்தபுராண வள்ளியம்மன் படலம் படித்து மாவிளக்கு ஏற்றுதலும் நடைபெறும். அன்று சகல ஆலயங்களிலும் மாலை சொக்கப் பானை நிகழ்வும் நடைபெறும்.

### நிஷாப் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 9 ஆயிரம் புசல் விதை நெல்

நிஷாப் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 9438 புசல்விதை நெல் இலவசமாக யாழ். மாவட்ட கமநல சேவைகள் நிலையத்தினால்வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலகத்திற்குட்பட்ட விவசாயிகள் நன்மையடைந்திருக்கின்றார்கள். (1-14)

## முதலாம் ஆண்டு நினைவுத்துளிகள்

மண்ணில் மகிழ்வு 08.06.1961 | விண்ணில் சங்கமம் 10.12.2008



அமரர்
**கந்தையா யோகரத்தினம் (சின்னத்தம்பி)**

ஆண்டொன்று ஓடி அணைத்தபோது மாண்டீரென எம் மனம் என்றும் ஏங்கவில்லை நீண்ட நெருங்கதிராய் எம் இதய வானில் மீண்டும் மீண்டும் ஒளி வீசி வழிகாட்டுகின்றீர் வேண்டும் எமக்கென்றும் உம்மாசி நல்லாசி என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்.

நெஞ்சம் கனத்த நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு. (சி/562803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிக ளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படி யுங்கள்.



## சன்சிகா சிவகாந்தன்
### உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
### புள்ளிகள் - 165

நான் ஆரம்பத்திலிருந்தே உடுப்பிட்டி மகளிர் கல்லூரி யில் கற்று வருகிறேன். வினாத்தாள்களை அதிக நேரமெ டுத்து பயிற்சி செய்து பார்ப்பேன். அத்துடன் பத்திரிகைக ளில் வெளியிடப்படுகின்ற வினாத்தாள்களையும் செய்து பார்ப்பேன்.

எனது இத்தகைய பெறுபேறுக்கு கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் முழுமையான பங்களிப்பினை நல்கினார்கள். அத்துடன் தனி யார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் எனது வெற்றிக்கு தூண்டுதல்களாக இருந்துள் ளனர்.

இவர்களுக்கு இந்தச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கி றேன். கல்வியில் உயர் சாதனைகளைப் பெற்று சமூகத்தில் நற்பிரஜையாக மிளிர வேண்டுமென்பதே எனது எதிர்கால இலட்சியமாகும்.



## சைந்தவி இராமச்சந்திரன்
### உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
### புள்ளிகள் - 154

தரம் ஒன்றிலிருந்து புலமைப்பரிசில் வகுப்பு வரை உடுப் பிட்டி மகளிர் கல்லூரியில் கற்றுவருகிறேன்.

எனது, இத்தகைய வெற்றிக்கு பெற்றோர் நிறைவான பங்க ளிப்பினை வழங்கினார்கள். அத்துடன் எனது பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் முழுமையான பங்களிப்பினை நல்கினார்கள்.

குறிப்பாக திருமதி சாந்தினி புலேந்திரன் ஆசிரியை விடு முறைக் காலங்களிலும் தனது சிரமத்தையும் எதிர்பாராது மேலதிக வகுப்புக்களை எடுத்து எனது உயர்புள்ளிகளுக்கு வழி சமைத்தார். இவர்களுடன் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் எனது வெற்றிக்கு வழிசமைத்தனர். இவர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப் பத்தில் நன்றி கூறுகிறேன்.

சந்திப்பு : மூர்த்தி.



## டர்மி குகதாஸ்
### உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
### புள்ளிகள் - 153

எனது பெற்றோர்கள் ஆசிரியராகக் கடமையாற்றுகின் றனர். அவர்கள் எனது கல்விக்கு ஊக்குவித்தார்கள். எனது பாட சாலை ஆசிரியர்கள் திருமதி அருந்தவச்செல்வி செல்வராசா, ஆங்கில ஆசிரியர் செல்வி த.சிவாந்தி, தரம் ஒன்றில் இருந்து நான்குவரை கற்பித்த திருமதி நகுலேஸ்வரி தயானந்தன் ஆகியோரின் வழிகாட்டல் என்னை இந்த நிலைக்கு கொண்டுவந்தது.

மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் திருமதி சாந்தினி புலேந்திரன், மு.சுபந்திரா ஆகியோரின் வழிகாட்டலும் எனக்கு உதவியது. அதனால் எனது ஆசிரி யர்களுக்கு நன்றி கூறிகின்றேன். எனது அம்மா தனது வீட்டு வேலையை விட்டு விட்டு எனக்காக அயராது பாடுபட்டார். எனது சகோதரனின் ஒத்துழைப்பும் என்னை சித்தியடைய வைத்தது.

நான் பல்வேறு வினாத்தாள்களை நாள்தோறும் செய்துவந்தேன். பல்வேறு போட்டிகளில் பங்குபற்றுவேன். கல்வியை எனது செல்வமாகக் கருதுகிறேன்.

நான் இன்னும் படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நினைக்கி றேன்.

என்னுடைய வெற்றிக்கு எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், எனது நண்பர்கள், எனது சகோதரன், உறவினர்கள் ஆகியோர் பெரும்பங்காற் றியுள்ளனர். அவர்களுக்கு நன்றி கூறுவதில் நான் மகிழ்வடைகிறேன்.



## கருணாநிதி அன்ஸியா ஜொய்ஸி
### கிளி/முரசுமோட்டை மகாவித்தியாலயம்
### புள்ளிகள் - 140

கிளிநொச்சியில் வசித்து வரும்வேளை தொடர்ச்சியான இடம் பெயர்வுக்கும் மத்தியிலும் நான் புலமைப்பரிசில் பரீட் சைக்குத் தோற்றுவேனா? என்ற சந்தேகத்துடன் இருந்த போதும் வவுனியா செட்டிகுளம் இராமநாதன் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தபோதும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்று கின்ற வாய்ப்புக் கிடைத்தது.

அத்தகைய வாய்ப்பின்போது நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடை வதற்கு எனது பெற்றோரும், ஆசிரியர்களான திருமதி சு.இளமதி, சி.அம்பிகை பாலன், அ.பிலிப்அன்ரனி ஆகியோரும் தமது முழுமையான பங்களிப்பினை நல் கினார்கள். இவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

# ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை; மேலும் சில முடிவுகள்

யாழ்ப்பாணம்.நவ.30

கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 2009 ஆம் ஆண்டுக்குரிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மேலும் சில முடிவுகளை பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பிவைத்துள்ளனர். அவற்றின் விவரம் வருமாறு!

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**

பி.சுமதி-3ஏ, ரினுஷா-3ஏ, எஸ்.துஷியங்கா-3ஏ, எம்.ஜனனி-2ஏபி, எம். சௌதினி யோஸ்-ஏ2பி, எல். ஜெசிந்தா-ஏ2பி, என்.அனுஷா - ஏ2பி, ரி.கார்த்திகா-ஏ2பி, எஸ்.கஜேந்தினி-ஏ2பி, எல்.கார்த்திகா- ஏ2பி, ஜெ.மேரியனற்- ஏபிசி, ஜே. நிறோ ஜினி- ஏபிசி, எஸ்.விஜயசோபனா-ஏபிசி, ஜீ.டான்சியா- ஏபிசி, ஏ.கம்ஷா - ஏபிசி, ரி.சசிரேகா-ஏபிசி, ரி.கிறிஸ்ஜோ-ஏபிசி, டிஷா லினி-ஏபிசி, சி.சத்தியப்பிரியா-ஏபிசி, வை. முகுந்தினி -ஏ2சி, அஜந்தா -3பி, எஸ்.சுஜிதா-3பி, கே.சுபாஜினி-3பி.

**விஞ்ஞானப் பிரிவு**

எஸ்.கீர்த்தினி-3சி, எஸ்.அனுஷா-3சி, ஜே.அகிலரூபி-2சிஎஸ்.

**கணிதப் பிரிவு**

என்.சாமினி-பி2சி.

**வர்த்தகப் பிரிவு**

பி.துஷ்யந்தினி-2பிசி, கே.எழிலரசி -2பிசி

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

**உயிரியல் பிரிவு**

எஸ்.தனுசன்-பி2சி, எஸ்.சுகிர்தரூபன் 3சி, எஸ்.சரண்யா-பிசிஎஸ், எஸ்.ரகுசாந்த்-2சிஎஸ்.

**கலைப் பிரிவு**

ஆர். நிரோகரன் 3ஏ, எம்.தர்சிகா-3ஏ, பி.மயூரிகா-2ஏபி, ஜே.நந்தினிதேவி -2ஏபி, ரி.ஜனனி-2ஏபி, எஸ். உசாந்தினி- 2ஏபி, எஸ். தர்மராஜ் ஏ2பி, வி.ரம்யா-ஏ2பி, கே.பிரியா -2ஏசி, என்.தனஞ்செனி-ஏபிசி, ஜி.கென்ஷூட் - ஏபிசி, பி.பிரதீபன்-ஏபிசி, ஆர். கெவிஸ்ரா- ஏபிசி, ஏ.மேரி கொலஸ்ரீனா-ஏபிசி, எஸ்.யசோதா-ஏபிசி, கே.நிரோசா-ஏபிசி, ரி.அஜித் குமார்-ஏபிசி, கே.குகதர்சினி 3பி.

**யாழ்.மத்திய கல்லூரி**

**கலை**

எம்.ஜெபமயூரன்-3ஏ, ரி.லலிதசங்கர்-3ஏ, வி.சுசீந்திரன்-3ஏ, எஸ்.திலக்ஷன்-3ஏ, பி.நிரோஜன்-3ஏ, எஸ்.பிரதீபன்-2ஏபி, எஸ். ஜெராட்டினேஸ்-2ஏபி, எஸ்.அரவிந்தன் -2ஏபி, எஸ்.ஏ.நிலோஜன்-2ஏபி ஜி.யோக நிரூபன் 3பி.

**வர்த்தகம்**

ஏ.கயுந்தன்-3ஏ, கே.நரேஸ்-2ஏபி, ரி.சிவரூபன்-2ஏபி, என்.தர்மசேகர்-2ஏபி, ஏ.தானியேல்-ஏ2பி, எஸ்.நிரோசன் ஏ2பி, கே.தேவகாந்-ஏ2பி, ரி.நக்கீரன்-ஏ2பி, எஸ்.சிவராம்-ஏபிசி.

**கணிதம்**

இ.ஜீவகாந்தன்-ஏ2பி, எம்.சுதாகர் - ஏ2பி, எஸ்.துவாரகன்-ஏபிசி, கே. கஜீபன்-பி2சி, ரி.சுகந்தன்-2சிஎஸ், வி.தர்சிலிஸ்-2சிஎஸ்.

**விஞ்ஞானம்**

எஸ்.பிரதீபன்-2பிசி, என்.திவ்வியராஜ் - 2பிசி, ரி.சகிக்காந்-3பி.

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

**வணிகத்துறை**

தே.சுதர்சன்-3ஏ (மா.நிலை 9), நா.லக்சனா-3ஏ (மா.நிலை 7), ஸ்ரீ.பவகணேஸ்-2ஏபி, நா.கீர்த்திகா-ஏ2பி, கு.பிரசன்னா-2பிசி, பா.லோசிதகுமார்-2பிசி, சி.அபிராஜ் - பி2சி, து.கிரீசன்-பி2சி, த.தஜீந்தா - ஏபிசி.

**கலைத்துறை**

ஸ்ரீ.சோபிகா-3ஏ, க.சிவகௌரிநாயகி-2ஏபி, க.சோபனா-2ஏபி, சி.சிந்தியா-ஏ2பி, த.பிரதீபா-ஏ2பி, க. சபிதா -3பி, ம. அபி ராமி - ஏ2பி, இ. டேவிகா- ஏபிசி, த.கிருபா - ஏபிசி, கி. ராஜேந்- ஏபிசி, தி.உவர்ணா-ஏபிசி, எஸ்.வினோதினி- ஏபிசி, த.அபிதா - பி2சி, சி.றஜந்தா-2பிசி, லோ.தர்சினி-பி2சி, ஜீ.சரணிகா-2பிசி, ந.சிவரூபி- பி2சி, க.சுதர்சன்-பி2சி, ஜே.தயானுஜன் பி2சி.

**கணிதத்துறை**

ஜெ.பிரதாபன்-3சி, அ. சஜந்தன்-3சி, சி.சகிலா- 3சி.

**உயிரியல் துறை**

ம.மகிலன்-3பி, ச.ராதிகா-ஏ2சி, ந. நிரோஷ்- 3சி, கா.வக்கிரன்-3சி

**வசாவிளான் மத்தியமகா வித்தியாலயம்**

**கணிதம்/விஞ்ஞானம்**

பா.விஜேந்திரன்-பி2சி, தெ.இந்துஜா-ஏ2சி, த.சுரேக்கா-3சி, [illegible], ம.துஷிந்தன்-2சிஎஸ், கு.சன்யூலன் 3சி.

**வர்த்தகம்**

ந.விஜிதரன்-3ஏ, ர.துன்சியா-3ஏ, யோ.தபீசன்-2ஏபி, ஸ்ரீ.கஜீபன்-3பி.

**கலை**

பி.யூடிற்றா-3ஏ, ம.யசோதா-3ஏ, இ. நிலக்ஷன்-2ஏபி, மு.துவாரகா-2ஏபி, தி. மதன்ராஜ்- 2ஏபி, ஜெ.ஜெசிவதனா-2ஏபி, ஆ.கலைப் பிரியா-2ஏசி, சி.சரிதா-2ஏபி, ச.மயூரி- 2ஏபி, கை.சுகிந்தன்-2ஏபி, த. திசாந்தன்- 2ஏபி, ப.கிருஷ்ணகுமார்-ஏ2பி, ச.ராகினி- ஏ2பி, யோ.ஆஷா-ஏ2பி, ம.மங்களதாஸ்- ஏ2பி, வி.குகலினி - ஏ2பி, ம.மேகலா- ஏ2பி, சு.ரஜிதா-ஏ2பி, ம.செறின் டெலினா- 2ஏசி, யோ.நிசாந்தி-ஏபிசி.

**அருணோதயாக் கல்லூரி**

நா.மதுரா-ஏ2பி, கு.யஸ்மின்கிறிஸ்ரெலா- ஏ2பி, உ.லக்சனா ஏ2பி, ச. கோபிகா -ஏபிசி, ச.நிரோசா-ஏபிசி, செ.சகாயராக்கினி-ஏ2சி, பூ.பிரசாந்தி-3பி.

**இணுவில் மத்திய கல்லூரி**

**கலை**

தி.தரணிகா-3ஏ, த.நாரணி-2ஏபி, அ.நேதிகா- 2ஏபி, உ.உசாந்தினி-2ஏபி, நி.நிசாந்தி- ஏ2பி, த.கல்யாணி-ஏபிசி, பா.மயூரி- ஏபிசி, பா.கலைவாணி-ஏபிசி, சி.லாவண்யா -ஏபிசி, ம.நிரோஜன்-ஏபிசி, க.நகுலன்- 3பி, பா.யசோதா- 3பி, வி. சுதாயினி-ஏ2சி, ப.அபிராமி-ஏ2சி, செ. கோவேந்தன்- 2பிசி, நா.நிறஞ்சலா -2பிசி, சி.தாரணி-2பிசி, பா.கவிதா-2பிசி, கோ. கிருசாந்தி-2பிசி, க.நிகேதினி-2பிசி.

**புனித பத்திரிசியார் கல்லூரி**

**கணிதம்**

எஸ்.லடிஸ்லோஸ் - 3ஏ, எம்.அசோக் கிளைன் - 3ஏ, ஜி.ஷேளிபப்ரிஸ்ற்-2ஏபி; கே.நிஷாந்தன்- பி2எஸ், சஜீவன்-சி2எஸ், டென்சில் பேனாட்-பி2எஸ், ஏ.நிராகரன் -2சிஎஸ்,

**உயிரியல்**

ஏ.எஸ்.பிரசாந்த்-2ஏபி (மா.நிலை 3), எம்.ஏ.மரீன்குமார் - 2ஏபி. ஜே.ஜோண்ஷெல்ரன்-ஏ2பி, ஆர்.அகல்யன் - 3பி. வி.செறோன் -பி2சி, ஏ.ஆர்.சாள்ரன் - பி2சி.

**வணிகம்**

ஏ.பேபியன் - 2ஏசி, எஸ்.எமர்சன் - 2ஏபி, ஏ.[illegible] - ஏபிசி, ஜே.ஏ.ஜேசுதாஸ்-ஏபிசி, வி.சுரேந்திரன்-3பி, எஸ்.ரைற்றஸ் ஜெபராஜ் - ஏ2சி, பி.லோகநாத் - ஏபிசி.

**கலை**

ஆர்.றொனால்ட் - ஏ2பி, எஸ்.டனியன் சன்- ஏபிசி, ஏ.றொஷாந்தன் - ஏ2பி, ஆர். ஆர்.ஜெனீன் - ஏ2சி, எஸ்.ரமணன் - ஏபிஎஸ், கே.ஏ.ஆர்.அரவிந் - ஏ2எஸ், சி.ஏ.டினோ சன் - ஏ2எஸ், எஸ்.அமலஜீனு - ஏ2சி, எஸ். கலிஸ்ரர் - ஏசிஎஸ், வி.ரட்ணராஜ் - ஏசிஎஸ், ரி.பி.ஜோன்சன் - ஏசிஎஸ், எல்.றொசான் - ஏசிஎஸ், எஸ்.றாஜ்குமார் - ஏ2சி, ஜி.நிமல் சன் - ஏசிஎஸ், ஏ.கிளாசன் - 2ஏசி, பி.கஜானன் - ஏபிசி, எம்.ஆர்.டிலான் - ஏசிஎஸ், சி.எ.டினோசன் - ஏ2எஸ்.

**புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்**

**கலை**

எ.ஜே.ஜொபித்தா-2ஏபி, யோ.மேரி சிபோ தினி-2ஏபி, ஆ.டிலேக்கா-2ஏபி, கி.சாள்ஸ் அன்ரன்-2ஏசி, கொ.வேஜினியா -ஏ2பி, அ.டிலிசியா-ஏ2பி, அ.மேரிஅனுசியா- ஏ2பி, ம.யானியா-ஏபிசி, அ.டியூலா செறின்-ஏபிசி, வி.அமல்ராஜ்-ஏபிசி, அ.அன்ரன் மரியதாஸ் குறூஸ்-ஏ2சி, கோ.எடின் பரோ-3பி, ச.மேரிசிந்துஷா- ஏ2சி, ஜெ. நிரோசன்-2ஏசி.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

**வர்த்தகம்**

தெ.சோபிதா-3ஏ, வி.அர்ச்சனா-2ஏபி, சோ.வாகினி-2ஏசி, ச.சிவகாமி-ஏ2பி.

**விஞ்ஞானம்**

கி.நிரோஜினி-பி2சி, சி.கோபிதா-பி2சி.

**கலை**

பொ.பாரதி-2ஏபி, ர.ரம்யா-ஏபிசி, ந.அபி நயா-ஏ2சி, இ.சாளினி-ஏ2சி, சி.சுரேக்கா- 2ஏபி.

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**விஞ்ஞானப்பிரிவு**

பா.தர்மினி-பி2சி, த.லட்சுமிபாமா - பி2சி, வி.கிருஸ்ணாளினி-பி2சி, சி.பூங்குழலி- 3சி, தி.தாரணி-3சி, ந.நிருஸ்ணி -2சிஎஸ்.

**கணிதப்பிரிவு**

எஸ்.சிந்துஜா-சி2எஸ்.

**வர்த்தகப்பிரிவு**

த.பிரவீணா-ஏ2பி, சி.சிவவானதி -2பிசி, சு.பிரதீபா-2பிசி, சோ.பிருந்தா-பி2சி.

**கலைப்பிரிவு**

சா.பிரசாந்தினி-3ஏ, சி.மதுரா-3ஏ, ஆ.நிஜிதா- 3ஏ, தெ.சுரேகா-2ஏபி, வி. நிறோஜினி- 2ஏசி, மா.கோசிகா-2ஏசி, கி. சோபியா - ஏ2பி, பா.யாழினி - ஏ2பி, தி. திவ்வியா - ஏ2பி, தி.ரினிதா - ஏ2பி, ந. சிந்துஜா - 2ஏசி, ச.பகீரதி - ஏபிசி, வே.வினோதினி-ஏ2சி, கு.ஜெனனி-ஏபிசி, ர.ரூபினி -ஏ2சி, வ.நதியா-ஏசிஎஸ், தி.வாசுகி- ஏசிஎஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதி மாதிரி வினாத்தாள்கள் - தொகுதி I

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

★ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. பெரும் செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல...... இதில் நல்கூர்ந்தார் என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்,
1) செல்வர். 2) ஏழை. 3) எளியவர். 4) மறவர்.

02. திருக்குறள் எவருக்கும் ஓதுதற்கு எளியது. இதில் எளியது என்பதன் எதிர் கருத்துச்சொல்,
1) அரியது. 2) இலகு. 3) தெளிவு. 4) இனியது.

03. தோயும் திரைகள் அலைப்ப ................இங்கு திரைகள் என்பதன் ஒத் தக்கருத்துச் சொல்,
1) அலைகள். 2) மரங்கள். 3) மரைகள். 4) ஆடைகள்.

04. வரையாது பொருள் வழங்கும் வள்ளல். இதில் வள்ளல் என்பதன் எதிர் கருத்துச் சொல்,
1) புரவலன். 2) பிரம்மா. 3) உலோபி. 4) பாடகன்.

05. வெள்ளத்தால் அழியாது. வெந்தழலால் வேகாது. இதில் தழல் என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்,
1) வெயில். 2) சூரியன். 3) நெருப்பு. 4) அறிவு.

★ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்பு வதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

06. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றின் தொகைப் பெயர் ............ ஆகும்.
1) ஐம்புலன். 2) ஐம்பொறி. 3) ஐம்பூதம். 4) ஐந்நிலம்.

07. இன்றைய உலகு வெகுசன ................................... மிகவும் சுருங்கி விட்டது.
1) கருவிகளால். 2) பொறிகளால்.
3) ஊடகங்களால். 4) கணினிகளால்.

08. மருந்துப்பொருள் மோசடியில் நடைபெற்ற ஊழல்களை விசாரிக்க ஜனா திபதி ...................... நியமித்தார்.
1) ஆய்வுக்குழு. 2) ஆணைக்குழு. 3) நீதியரசர். 4) உபகுழு.

09. அன்பு, நாண், கண்ணோட்டம், ஒப்புரவு, வாய்மை முதலிய குணங்கள் சேர்ந்த பண்பு .......................... எனப்படும்.
1) மேன்மை. 2) ஆண்மை. 3) சால்பு. 4) பெருமை.

10. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை ............................ஆகும்.
1) நாற்குணம். 2) நாற்பொருள்.
3) நால்வகைப்பருவம். 4) நானிலம்.

★ பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

11. W.W.W என்பதற்குரிய சரியான தமிழ் வடிவம்,
1) உலக தன்னார்வக்குழு. 2) வையக விரிவு வலை.
3) உலக ஊடக வழி. 4) உலக தகவல் ஊழி.

12. அப்பசரி நேரமாவுது போய் வருகிறேன். என்பதில் "நேரமாவது" என்ப தன் திருத்தமான வடிவம்,
1) நேரமாகிது. 2) நேரம்மாவுது.
3) நேரமாகிறது. 4) நேரம்மாகிறது.

13. பின்வருவனவற்றுள் பொது மொழியாக வந்துள்ள சொல்,
1) மாமரை. 2) தாமரை. 3) தாரகை. 4) மங்கை.

14. அறுபதாம் ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா,
1) பவளவிழா. 2) மணிவிழா.
3) வெள்ளிவிழா. 4) பொன்விழா.

15. வெண்பா, விருத்தம் என்பன,
1) இலக்கிய வடிவங்கள். 2) கவிதை வடிவங்கள்.
3) இலக்கண வடிவங்கள். 4) யாப்பு வடிவங்கள்.

★ பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.

16. பன்மை விகுதி பெற்று வழங்கி வர முடியாத சொல்,
1) சந்தர்ப்பம். 2) உணவு. 3) வேலை. 4) மகிழ்ச்சி.

17. பின்வருவனவற்றுள் ஓரெழுத்துச் சொற்களின் கூட்டம் கொண்டது,
1) பு, வே, மு. 2) பி, சை, வா
3) தே, கே, நே. 4) கா, மை, தா.

18. துன்பம், பாதை, காற்று என்பவற்றின் பொருளை ஒழுங்கு முறைப்படி கூறும் விடை,
1) வலி, வளி, வழி. 2) வழி, வலி, வளி.
3) வலி, வழி, வளி. 4) வளி, வலி, வழி.

19. பின்வருவனவற்றுள் இலக்கண வழுவற்ற வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
1) போட்டியில் வெற்றிபெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் பரிசு கிடைத்தன.
2) போட்டியில் வெற்றிபெற்ற ஒவ்வொரு மாணவனுக்கும் பரிசு கிடைத்தது.
3) போட்டியில் வெற்றிபெற்ற ஒவ்வொரு மாணவர்களுக்கும் பரிசு கிடைத்தது.
4) போட்டியில் வெற்றிபெற்ற ஒவ்வொரு மாணவர்களுக்கும் பரிசு கிடைத்தன.

20. பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
1) தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்கினர்.
2) தொழிட்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்கினர்.
3) தொழிச்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்கினர்.
4) தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்கினர்.

★ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

21. பனையின் இளையது நுங்கு எனப்படுவது போல பலாவின் பிஞ்சு,
1) வடு. 2) குரும்பை. 3) மூசு. 4) கச்சல்.

22. சொல்லாமற் செய்வர் பெரியர். இதில் "பெரியர்" என்பது,
1) தெரிநிலை வினைமுற்று. 2) குறிப்பு வினைமுற்று.
3) எதிர்மறை வினைமுற்று. 4) முன்னிலை வினைமுற்று.

23. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலங்காட்டுவன,
1) நின்றான், ஓடினான். 2) உண்டான், படித்தான்.
3) வீழ்க, வளர்க. 4) புக்கான், விட்டான்.

24. பின்வருவனவற்றுள் நிகழ்கால பெயரெச்சமாக அமைவது,
1) செய்த. 2) செய்யும். 3) செய்கின்ற. 4) செய்வார்.

25. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயராக வருவது,
1) விட்டு. 2) கட்டுரை. 3) வந்தான். 4) எழும்பு.

26. பின்வருவனவற்றுள் "ஆல்" உருபு கருவிப்பொருளில் வரும் தொடர்,
1) நாவினால் சுட்ட வடு. 2) குளிரால் நடுங்கினேன்.
3) மாணவர்களால் எழுதிய கவிதை. 4) மரத்தால் செய்த மேசை.

27. நச்சுப்பாம்பினை நல்லப்பாம்பு என்பது,
1) குழுஉக்குறி. 2) சொற்போலி. 3) மரூஉ. 4) மங்கலம்.

28. மொழிக்கு முதலில் அமைந்து வராத வினா எழுத்து?
1) ஏ. 2) எ. 3) யா. 4) ஓ.

29. மூலைமுடுக்கு என்பதற்குப் பொருத்தமான பிறிதொரு இணைமொழி,
1) சந்துபொந்து. 2) அக்கம்பக்கம்.
3) அந்திசந்தி. 4) கிட்டத்தட்ட.

30. பின்வருவனவற்றுள் பிரான்சிய மொழிகொண்ட தொகுதி,
1) குசினி, துருப்பு. 2) வசூல், இலாகா.
3) சுமார், சால்வை. 4) பென்சில், சினிமா.

★ பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

31. அளவுக்கணக்கின்றிச் செலவு செய்தல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்,
1) அள்ளிக்குவித்தல். 2) அல்லும் பகலும்.
3) அள்ளி இறைத்தல். 4) ஆறப்போடுதல்.

32. "ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு" எனும் பழமொழியின் கருத்து,
1) ஆற்றுக்கு அணைக்கட்டும்போது அளந்து கட்ட வேண்டும்.
2) எத்தகைய செலவு செய்வதானாலும் அவதானமாகச் செய்ய வேண்டும்.
3) ஆற்றிலே போட்டால் வீட்டிலே பெருகும்.
4) இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

33. அவன் காற்றிலும் வேகமாகப் பறந்து சென்றான். இதிலுள்ள அணி,
1) உவமை. 2) உருவகம்.
3) தன்மை. 4) உயர்வுநவிற்சி.

34. தன்னந்தனியாக முன்பின் தெரியாத ஓர் இடத்தை அடைந்த நிலையை உணர்த்தப் பொருத்தமான உவமைத் தொடர்,
1) வலையில் சிக்கிய மான் போல.
2) சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போல.
3) சிறகிழந்த பறவை போல.
4) கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல.

★ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

35. வன்செயலும் யுத்தமும் இலங்கையின் இன ஒற்றுமைக்கு,
1) உகந்தனவன்று. 2) உகந்தவையல்
3) உகந்ததன்று. 4) உகந்தவையன்று.

36. ஆலயத் திருவிழாவிற்கு பக்தர் கூட்டம் விரைந்து,
1) வந்தார்கள். 2) வந்தனர். 3) வந்தது. 4) வந்தன.

★ பின்வரும் பாடலைப்படித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

வானஞ் சிவக்கவே வாரிய லைசிவக்க
தானு மலைந்தலைந்து தாள் சிவக்க - ஞானவுணர்
வின்றி மதுவருந்து மீனரைப்போற் கண்சிவக்க
குன்றிற் சரிந்தான் பொற்கோ.

37. இப்பாடலில் ஆசிரியர் புலப்படுத்தும் காட்சி,
1) சூரியோதயம். 2) சூரியஸ்தமனம்.
3) சந்திரோதயம். 4) சந்திரஸ்தமனம்.

11ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழியும் இலக்கியமும் I - தொடர்ச்சி.....

38. உணர்வின்றி மது அருந்துவோர்,
   1) பொற்கோ. 2) ஞானி. 3) மீனவர். 4) ஈனர்.

39. வாரி என்பதன் பொருள்,
   1) வானம். 2) மேகம். 3) கடல். 4) வரி.

40. கீழே காணப்படும் வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.
   அ - அவ்விரு பொருள்களுக்குள்ளே உவமானமும் உவமேயமும் உள்ளன.
   ஆ - அதற்கு இயைபுடையதாகக் காட்டப்படும் பொருள் மற்றொன்று.
   இ - எடுத்துக் கூறப்படும் அதாவது, அதிகாரப்பட்டு நிற்கும் பொருள் ஒன்று.
   ஈ - உவமையணியில் இரு பகுதிகள் உள்ளன.
   உ - உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் உள்ள தொடர்பை உவமை உருபுகள் காட்டிநிற்கின்றன.
   1) ஈ, இ, ஆ, அ, உ. 2) ஈ, இ, அ, ஆ, உ.
   3) உ, அ, ஆ, இ, ஈ. 4) உ, ஆ, அ, இ, ஈ.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II 22-T-II

01. சுருக்கமான விடை எழுதுக.
   01) கா, காண் ஆகிய பகுதிகளைக் கொண்ட வினைமுற்றுக்கள் அமைக்குக.
   02) ஆக்கப் பெயர் விகுதிகள் இரண்டு தருக.
   03) இடக்கரடக்கல் என்றால் என்ன?
   04) பகுபத உறுப்புக்கள் இரண்டு தருக.
   05) சுருக்கம் எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.
   06) தோடம்பழம், மாம்பழம் என்பவற்றைப் பிரித்து எழுதுக.
   07) தம்பி விரைவாக நடந்தான். இதில் வரும் நடந்தான் என்பதை பிற வினையாக மாற்றுக.
   08) சால,தவ என்பவற்றைக் கொண்டு ஒவ்வொரு வாக்கியம் அமைக்குக.
   09) பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக. தம்பி நீ எங்கே போனாய் உடனே வருக.
   10) அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டு போய்........ இத் தொடரைச் சந்திப்பிரித்து எழுதுக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத்தெரிவுசெய்து 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. அதற்கு தலைப்பும் இடுக.
   அ. புவி வெப்பமடைதல் என்பது இன்று உலகம் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினையாகும். இயற்கை மீது மனிதனுக்குப் பற்று இல்லாமையாலும், வியாபார நோக்கங்கள் அதிகரித்தமையாலும் இது ஏற்படுகின்றது என்கின்றனர். இயற்கையை பாதுகாக்க நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும் எனும் கருத்தில் அமைந்த சொற்பொழிவு.
   ஆ. புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது. இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் என்பதையும், இன ஒற்றுமைக்கு இளைஞர்களின் பங்கு முக்கியம் என்பதையும் வலியுறுத்தும் கட்டுரை.
   இ. மாணவர்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதில் கூடிய பங்கு வகிப்பவர்கள் குடும்பத்தவர் என நினைப்பவருக்கும் பாடசாலைதான் என நினைப்பவருக்கும் இடையிலான உரையாடல்.
   ஈ. ''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'' என்னும் கருத்தை புலப்படுத்தும் சிறுகதை ஒன்று.

03. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையுமாறு சுருக்கி எழுதுக.
கலைகள் மனதிற்கு இன்பத்தையும் அமைதியையும் அளிப்பன. இசை, நடனம், சித்திரம், கவிதை, நாடகம் போன்ற கலைகள் மனித வரலாற்றுடன் பின்னிப்பிணைந்து வளர்ந்து வந்தனவாகும். இவற்றைப் பொழுதுபோக்காக கொள்வோரும், வாழ்க்கைத் தொழிலாக கொண்டு வாழும் கலைஞர்களும் இவ்வுலகில் உள்ளனர். இதுபோலவே விளையாட்டுகள் உடல்நலத்தை பேணுவதுடன் நற்குணப்பண்புகளை வளர்த்தெடுக்கவும் உதவுகின்றன. அதனாலேயே அன்றுதொட்டு இன்றுவரை மக்கள் பல் வேறுபட்ட விளையாட்டுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆனால், இன்று எதிர்பார்க்கப்படும் நன்மைகளை விட தீயப்பண்புகளை சிலவற்றை வளர்ப்பனவாகவும் விளையாட்டுப் போட்டிகள் மாறி வருகின்றன. எனினும், இவை வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும்மனப்பாங்கு, பொருள், புகழ் என்பவற்றை சேர்ப்பதாக உள்ளன. இன்றைய உலகில் உடல், உள ஆரோக்கியங்களுக்காக பல் வேறு வகையான விளையாட்டுகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.
மேண்மைக் கலைகளில் ஒன்றான யோகக்கலை விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கும் போராயுதக் கண்டுபிடிப்புகளுக்கும் மெத்த வளர்ந்துள்ள மேற்குலகிலே அருமையுடனும் பெருமையுடனும் சரியான பொருத்தமான விளக்கங்களுடனும் இன்று கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. உடல், உயிர், பிணி மூன்றையும் பற்றியது மட்டுமல்ல யோகக்கலை, நடைமுறையில் அன்றாடம் நல்லுணர்ச்சிகளையும், புத்துணர்ச்சிகளையும் தந்து ஞான ஒளி பாய்ச்சுவது யோகக்கலையே. சுவாசத்தின் சரியான இயக்கமே ''மூச்சுப்பயிற்சி'' என்ற நிலையில் யோகக்கலை உயிரைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள உதவுகிறது எனலாம். ''ஆசனம்'' என்னும் வடசொல் ''இருத்தல்'' என்னும் பொருளிலும் விளக்கம் தருகின்றது. வாழ்க்கையிலே ஒழுங்குமுறைமையில்லை என்றால் பயனில்லை. மனிதகுல வரலாறுகளும் விழுமியங்களும், இலக்கியத்தின் போதனைகளும், சமயதத்துவ நூற்போதனைகளும், அறநூல்கள் காவியங்களின் போதனைகளும், எல்லாமே ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றன.
   1) யோகக்கலை எவ்வுலகிலே இன்று கைக்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது?
   2) உடல், உயிர், பிணி மூன்றையும் பற்றிய யோகக்கலை எவ்வெவ் உணர்ச்சிகளைத் தருகிறது?
   3) சுவாசத்தின் சரியான இயக்கம் எது என கூறப்படுகின்றது?
   4) ''ஆசனம்'' என்னும் வடச்சொல்லின் கருத்து என்ன?
   5) இலக்கியம், அறநூல்கள், காவியங்கள் எல்லாம் எவற்றை வலியுறுத்துகின்றன?

05. உங்கள் கிராமத்தில் அல்லது நகரத்தில் பொது நூலகம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான கட்டட வசதியை ஏற்படுத்தித் தருமாறும், அதற்குரிய நூல்கள், தளபாடங்கள் பற்றிய தேவைக்குறித்தும் பிரதேச செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III 22-T-III

01. 01) சொல்லுக சொல்லைப் பிரிது ஓர் சொல்
அச் சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து.
இக்குறளின் பொருளை தற்கால மொழிநடையில் எழுதுக.
   02) வாக்குண்டாம் என்ற இலக்கியத்தைப் படைத்த புலவரின் பெயர் என்ன?
   03) பார்வைகள் என்ற சிறுகதை யாரால் எழுதப்பட்டது?
   04) குமாரப்புலவர் என்ற பாத்திரம் இடம்பெறும் இலக்கியம் எது?
   05) மல்லல், மறுகு ஆகிய சொற்கள் உணர்த்தும் பொருள் என்ன?
   06) நந்திக் கலம்பகத்தின் பாட்டுடை தலைவரின் பெயர் என்ன?
   07) அம்மம்மோய் இதை கவிச்சக்கரவர்த்தி கேட்டால் உமது தலை தப்புமா என்ன? இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
   08) நான்மணிக்கடிகை என்றால் என்ன?
   09) நல்ல மரமும், நச்சு மரமும் என்ற கட்டுரையில் நல்லமரம், நச்சு மரம் எனக் கூறப்படுபவை எவை?
   10) ''வெண்ணிலாவேயிந்த வேகமுகனக்கா காதே .......'' இத்தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

02. பின்வரும் செய்யுட் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக. இவை ஒவ்வொன்றினதும் நீர் நயந்த பகுதியை விளக்குக.
   அ. ஓடுகிற மேகங்காள்! ஓடாத தேரில் வெறும்
   கூடு வருகுதென்று கூறுங்கள் -நாடியே
   நந்திச் சீராமனுடை நல் நகரில் நல்நுதலைச்
   சந்திச்சீர் ஆமாகில் தான்.

   ஆ. மடல் பெரிது தாழை மகிழ்இனிது கந்தம்
   உடல் சிறியார் என்றிருக்க வேண்டா- கடல் பெரிது.
   மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
   உண்ணீரும் ஆகி விடும்.

* பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது நடையில் எழுதுக. அடிக்கோடிட்ட தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.
   இ. துக்கத்தில் தலையெடுக்கும் தைரியம்போலத் தொலை இருளில் அந்த ஒளித்தொடர் விரைந்து சென்றுகொண்டிருந்தது. சென்னை போய்ச் சேரும்போது எங்கள் கலையும் அந்த இருளைப்போலப் பின்தங்கி விடாதா? நிம்மதி காலையைப் போல அங்கே வந்தடையாதா?
   ஈ. அப்பொய்கையில் இலக்கிய அழகிய மலர்கள் முகமலர்ந்து இருவரையும் அருகே அழைப்பன போல் அசைந்தன. அவ்வாறாயின் தண்மையும் செம்மையும் கண்ட இருவரும் தாய்முகம் கண்ட சேய்போல் மனம் களித்து அந்நன்னீரைக் கண்டு மகிழ்ந்தார்கள். தாகத்தால் வருந்திய இருவருக்கும் தண்ணீரை எடுத்துவழங்கும் தன்மை போல் அடுக்கடுக்காக அலைகள் கரையருயேக வந்துசேர்ந்தன.

03. முத்தொள்ளாயிரம் என்ற பாடப்பகுதியில்,
   அ. சேரமன்னனின் சிறப்பும் அவனது யானையின் வீரமும்.
   ஆ. இப்பகுதியில் காணப்படும் உவமை அணிகளை விளக்குக.

04. நாட்டார் பாடல்கள் என்ற பகுதியில்,
   அ. மலையக நாட்டார் பாடல்கள் உணர்த்தும் தொழில்முறைகள்.
   ஆ. மலையக மண்வாசனை பற்றியக் கருத்துக்கள்.

* 5 - 7 வரையான வினாக்களுள் ஏதாவது ஒன்றுக்கு விடை எழுதுக.

05. அ. பயனில்லா சொற்கள் பற்றிய வள்ளுவர் கூறிய கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
   ஆ. மோட்டெருமை வாவிபுக முட்டு வரால் ....... என்னும் தனிப் பாடலில் சிறந்து நிற்கும் நயத்தினை விளக்குக.

06. அ. நட்சத்திரக்குழந்தைகள் என்ற சிறுகதையின் தலைப்பு, கருப்பொருள், பாத்திரங்கள் என்பவற்றின் பொருத்தப்பாட்டை விளக்குக.
   ஆ. அதில் உன்னைக் கவர்ந்த பாத்திரம் எது? ஏன்?

07. நல்ல மரமும் நச்சுமரமும் என்ற கட்டுரையில் நல்ல மரத்தின் தன்மைகள் பற்றியும், நச்சுமரத்தின் தன்மைகள் பற்றியும் கூறியுள்ளவற்றை விளக்குக

-நிறைவுற்றது-

ஆசிரியர்: திரு.S.நாகராசா B.A.PGDE,
உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்),
பட்டிருப்பு கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
**30-11-2009**



**திருமதி ஆறுமுகம் குஞ்சம்மா**

**மலர்வு: 24.11.1935**
**உதிர்வு: 10.12.2008**
திதி: துதியை

அன்பின் அரவணைப்பு
பண்பின் பரிவூட்டல்
கண்களாய் காத்த தாயே!
நின் பிரிவால் உன் கண்மணிகள்
கலங்கி கண்ணீர்பூக்களால்
ஓராண்டாய் அர்ச்சிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

நாவற்குழி தெற்கு,
கைதடி. (92516)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 09 . 10 . 1930



மறைவு 30 . 11 . 2006

**திருமதி ஹணி பாலசுந்தரம்**

மூன்று ஆண்டுகள் சென்றாலும்
முத்தி அடைந்த உங்களை
என்றும் மறவோம் அக்கா!
உங்கள் புன்சிரிப்பு இனி
இவ்வுலகில் எமக்கு
எங்கும் உண்டோ அக்கா!

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!!

3, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

ஐ.பவளம். (92501)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1143 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 13 26 29 46

**27-11-2009**

ஜக்பொட் பரிசு ரூபா. 4,903,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 218,244 | 20/- | 4,364,880/- |
| 2 இலக்கங்கள் | 19,769 | 40/- | 790,760/- |
| 1 இல. + லக்கினம் | 19,792 | 60/- | 1,187,520/- |
| 2 இல. + லக்கினம் | 1,793 | 200/- | 358,600/- |
| 3 இலக்கங்கள் | 524 | 1000/- | 524,000/- |
| 3 இல. + லக்கினம் | 49 | 10,000/- | 490,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,903,750/- | - |
| மொத்தம் | 5 | | 8,315,760/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 260,179 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 8,815,760/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,885,000/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் ரீ.ராஜ்குமார் கொழும்பு 13

கைத்தொலைபேசி வெற்றியாளர் சஞ்சலா மல்காந்தி

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

2009 டிசெம்பர் 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 500749021-3-32 |
| ஹம்பாந்தோட்டை | 500741070-2-17 |
| பதுளை | 500742895-4-40 |
| மட்டக்களப்பு | 500738380-0-06 |
| கொழும்பு | 500755402-6-26 |


# திஸநாயகத்தை விடுவிக்க வலியுறுத்தி மஹிந்தவுக்கு பராக் ஒபாமா கடிதம்

கொழும்பு, நவ. 30

இருபது வருட சிறைத்தண்டனையின் கீழ் காவலில் வைக்கப்பட்டிருக்கும் பத்திரிகையாளர் திஸநாயகத்தை விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தும் விதத்தில் அமைந்த கடிதம் ஒன்றை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் என சில வட்டாரங்களில் செய்தி கசிந்திருக்கின்றது.

ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை சர்வதேச ரீதியில் பலத்த அதிருப்திக்கு உள்ளாகியிருப்பதால், இது விடயத்தில் உரிய நடவடிக்கை கோரி, பல தரப்புகளிலிருந்தும் தமக்கு அழுத்தங்கள் வருவதாக இக்கடிதத்தில் கோடி காட்டியுள்ள அமெரிக்க ஜனாதிபதி, எனவே ஊடக சுதந்திரத்துக்கு உரிய மதிப்பு வழங்கும் விதத்தில் திஸநாயகத்தை இயலுமான வழிகளில் விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஜனாதிபதியை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

அதேசமயம், இக்கடிதத்தை ஒட்டித் தமது பதிலை இலங்கை ஜனாதிபதி விரைவில் அமெரிக்க ஜனதிபதிக்கு அனுப்பி வைப்பார் என்றும் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

திஸநாயகம் தொடர்பான விவகாரம் இன்னும் நீதிமன்றப் பரிசீலனையிலேயே உள்ளது. மேல்நீதிமன்றம் தனக்கு எதிராக வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து திஸநாயகம் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுச் செய்துள்ளார். நீதிமன்றின் பரிசீலனையில் உள்ள விடயத்தில் தாம் தலையிடுவதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டவை என்பதை இலங்கை ஜனாதிபதி, அமெரிக்க ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளார் எனக் கூறப்பட்டது.

எனினும், அமெரிக்க ஜனாதிபதி கவலை தெரிவித்துள்ள இவ்விடயத்தை ஒட்டி, நிலைமையைச் சீர்செய்வதற்குத் தம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் தாம் எடுப்பார் என்பதை இலங்கை ஜனாதிபதி உறுதியாக அமெரிக்க ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவார் என்றும் கூறப்பட்டது. (சி)

## வலி.மேற்கில் நெற்பயிர் நடுகை மும்முரம்

சுழிபுரம், நவ.30

சுழிபுரம் பகுதியில் நெற்பயிர்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக நெற்பயிர்கள் நடுவதால் அதிக பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர் கமக்காரர்கள்.

அதிக விலை கொடுத்து நெற்பயிர்களை வாங்கி நடுகை செய்கின்றனர்.

சுழிபுரம் பூராகவும் உள்ள வயல்களிலும் பொன்னாலைப் பகுதியிலுள்ள வயல்களிலும் நெற்பயிர் நடுகை, உரம் போடுதல் ஆகியன காலை முதல் மாலை வரை நடைபெற்று வருகின்றன.

பலநூற்றுக் கணக்கான ஆண், பெண் தொழிலாளர் வேலையில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது.

சனநடமாட்டம் நிறைந்த இடமாக வயல்கள் விளங்குகின்றது. சுழிபுரம் பறாளைக் குளத்தில் சிறு மீன்கள், நண்டுகள் பிடிப்போரும் நிறைந்துள்ளனர். (1-28)

## மல்லாகத்தில் இன்று செலான் வங்கிக் கிளை திறக்கப்படும்

சங்கானை, நவ.30

சங்கானை பிரதான வீதி, மல்லாகம் சந்திக்கருகாமையில் இன்று திங்கட்கிழமை பி.ப .4.10 மணியளவில் செலான் வங்கியின் விரிவாக்கப்பட்ட அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் கட்டடத் திறப்பு விழாவில் செலான் வங்கியின் தலைவர் எஸ்மன் நாரங்கொடாவும், பொது முகாமையாளர் அஜித்தா பாஸ்குவலும் பங்குபற்றித் திறந்து வைக்கவுள்ளனர்.

ஏற்கனவே இக்கட்ட மேல் மாடியில் செலான் வங்கி காப்புறுதிக்கிளை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (1-29)

## தென்மராட்சி மூத்த பிரஜைகளுக்கான நலன்பேண் உதவித் திட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.30

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆதரவற்ற நிலையில் வாழ்ந்துவரும் மூத்த பிரஜைகளுக்கு அறவழிப் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் நலன்பேண் உதவித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி அறவழி வளாகத்தில் வைத்து யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் சம்மேளன ஆலோசகர் வி. ஸ்ரீசக்திவேல் தலைமையில் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி எஸ்.வரதபாஸ்கரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.இராஜராமும், கௌரவ விருந்தினராகப் பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் க.நடராஜாவும் கலந்து கொள்வர். (204)


வீட்டுக்கு
மற்றும்
ஹோட்டலுக்கு



2439422


## நெஞ்சைவிட்டகலா 3ஆம் ஆண்டு நினைவு

**அமரர் கியூபேர்ட் ஆனந்தராஜன் B.A.**
கிராம உத்தியோகத்தர் J/70

மனம் மகிழ 06.07.1964
மனம்கதற 30.11.2006



வீழ்ந்த பிணம் மிதித்து பிறர்
வெளிநாடு போகையிலே,
வீழ்ந்தாலும் உன் மண்ணில்
வீழ்வதற்கோ நின்றிருந்தாய்
தேசத்தை உயிராய் நேசித்ததாலோ
தெருவினில் உன் உயிர் பிரிந்தது
நாம் உன்னை இழந்து, பொன்
இழந்து, பொருள் இழந்து,
நிம்மதியைத் தொலைத்து
ஆண்டு மூன்றாகியதோ.

என்றும் உம் நினைவில்:
அக்கா, அத்தான்,
மருமகள், பேரன்

இல.18, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(92616)

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 14 . 12 . 1935



இறப்பு 07 . 11 . 2002

**அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி**
(ஆசிரியர்)
திதி: திரயோதசி (30.11.2009)

ஆண்டேழு ஆனாலும் அழிந்திடுமோ எம் துயரம்
ஆசை காட்டி அரவணைத்த ஐயாவே!
ஆழ் மனதில் பதிந்துவிட்ட அன்பு முகம் மாறிடுமோ.

ஏழாவது வருட ஈரவிழிகளுடன்:
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

4 ஆம் குறுக்குத் தெரு,
நச்சாய் வீதி, சாவகச்சேரி.
(92501)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 10 . 1947



மறைவு 18 . 11 . 2006

**அமரர் மாணிக்கம் சுந்தரலிங்கம்**
(மயிலிட்டி வைத்தியசாலை ஊழியர்)
திதி :சதுர்த்தசி (30.11.2009)

அன்புடனே எம்மை வளர்த்து அறிவூட்டி
பண்புடனே எம்மைப் பார் புகழ வாழவைத்து
இன்பமுடன் நாம் இருக்க எம்மைவிட்டு
இறைவன் அடி சென்றதேனோ?
மூன்றாண்டுகள் சென்றாலும் முடிவுறாது உங்கள் அன்பு
எங்கள் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

'உதயதாரகை',
அஜந்தா வீதி, மானிப்பாய். (சி/562801)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுவயல் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 400 பேருக்கு பயறுச் செய்கைக்கு உதவி

வலி.வடக்கு,நவ.30

மறுவயல் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் யாழ்.குடாநாட்டில் உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக உலக உணவு விவசாய நிறுவனமும், விவசாயத் திணைக் களமும் இணைந்து குடாநாட்டில் 400 பயனாளிகளுக்கு பயறுச் செய்கையில் ஊக்குவிப்பு வழங்கவிருக்கின்றன.

பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு, விவசாய போதனாசிரியர்கள் பிரிவு ஆகியன ஊடாக பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு உள்ளீடுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலாளர், பிரிவில் - சிறுப்பிட்டி கிழக்கு 10, சிறுப்பிட்டி மேற்கு 10, ஆவரங்கால் கிழக்கு 20, அச்சுவேலி மேற்கு 20 பயனாளிகளுமாக 60 பயனாளிகளுக்கும்

உரும்பிராய் வடக்கு 10, உரும்பிராய் தெற்கு 10, கோப்பாய் வடக்கு 20, நீர்வேலி தெற்கு 10 பயனாளிகளுமாக மொத்தம் 110 பயனாளிகளும்

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் கைதடி தென்கிழக்கு 25, கைதடி வடக்கு 25, எழுதுமட்டுவாழ் 20 பயனாளிகளுமாக 70 பயனாளிகளுக்கும்

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் அளவெட்டி மத்தி 10, மல்லாகம் 10, அளவெட்டி வடக்கு 10, துர்க்காபுரம் 10, தெல்லிப்பழை கிழக்கு 10, பயனாளிகள் என 50 பேருக்கும்

வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் புளியங்கூடல் 10, சுருவில் 10, புங்குடுதீவு தெற்கு 05, நயினாதீவு தெற்கு 05 பயனாளிகளுமாக மொத்தம் 30 பயனாளிகளுக்கும்

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பிரான்பற்று 20, பெரியவிளான் 10 ஆக மொத்தம் 30 பயனாளிகளுக்கும் கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் நெல்லியடி கிழக்கு 25, கரணவாய் மேற்கு 25ஆக மொத்தம் 50 பயனாளிகளுக்கும்-

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் தொண்டைமானாறு தெற்கு 10, கெருடாவில் வடக்கு 10, கெருடாவில் கிழக்கு 10 ஆக மொத்தம் 30 பயனாளிகளுக்கும்

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் ஏழாலை வடக்கில் 20 பயனாளிகளுக்கும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 10 பயனாளிகளுக்கும் உள்ளீடு கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு பயனாளிக்கு 3 கிலோகிராம் விதை பயறு, 5கிலோ கிராம் யூரியா, 10 கிலோ கிராம் ரி.எஸ்.என், 05 கிலோ கிராம் எம்.ஓ.பி. பசளை ஆகியன வழங்கப்பட்டுள்ளன. (1-86)

## தகவல் தொழில் நுட்பப் பரீட்சை டிசெ.20இல்

யாழ்ப்பாணம், நவ.30

ஜி.சீ.ஈ உயர்தர (2010) மாணவர்களுக்கான பொது தகவல் தொழில்நுட்ப (G.I.T) பரீட்சைகள் எதிர்வரும் டிசெம்பர்மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ளன.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

வன்னிப் பாடசாலைகளில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வலிகாமம் வலயப் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள், அந்தந்தப் பாடசாலை அதிபர்களூடாக எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (1-16)

# புத்தகச் சுமையுடன் மட்டும் நில்லாது மாணவர்கள் கலைச்சுமையையும் எற்கவேண்டும்

## மாகாண உதவிப் பணிப்பாளர் ஸ்ரீதேவி ஆலோசனை



நல்லூர், நவ.30

மாணவர்களாகிய நீங்கள் புத்தகச்சுமையுடன் மட்டும் நில்லாது கலைச்சுமையையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் 'தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்காக'' என்று கருப்பொருளில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்வுக்குத் தலைமை வகித்துப் பேசிய திருமதி ஸ்ரீதேவி தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

கம்பன், புலமைப்பித்தன் என்று அவர்களது ஆக்கங்களுடன் முற்றுப் புள்ளியிடாது நீங்களும் அவர்களைப் போன்று வரவேண்டும். கல்வியுடன் கலைத்துறையுடன் சங்கமமாக வேண்டும். கலையினூடாக எல்லாவற்றையும் சாதிக்க முடியும். எமது மனச்சுமைகள் குறையும். சாதனைகளை நிறைவேற்ற முடியும். யாழ்ப்பாணத்தின் பண்டிதமணி கலாசாரத்துடன் கலைத்துறையையும் இணைத்துத் தொடர்ந்தால் நல்ல ஆளுமைமிக்க சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதை மாணவர்களாகிய நீங்கள் நினைவில் கொள்வது அவசியம்.

தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்காக என்ற இந்தப் போட்டியில் கலந்து கொண்ட உங்களது ஆக்கங்கள் அனைத்துமே அற்புதமானவை. யதார்த்தங்கள் நாம் வாழும் காலத்தின் பிரச்சினைகள் என உங்களது ஆக்கங்கள் காணப்பட்டது. கவிஞர் வரிசையில் வாலியும் வைரமுத்துவும்தான் என்ற நிலையில் இருந்து விடுபட்டு எமது இளைஞர்கள் மத்தியில் எத்தனையோ சிறந்த கவிஞர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

எமக்கு போட்டிக்கெனக் கிடைத்த கவிதைகளை எல்லாம் உடன் வெளியிடக் கூடியதாக இல்லை. எனினும் அந்தப் படைப்புக்களை நூலாக வெளிக்கொணர முயற்சிகள் மேற்கொள்வோம். பரிசு பெறாதவைகள் கதையாகவோ கவிதையாகவோ ஆகிவிடாது என்பது கருத்தல்ல. எனவே நீங்கள் சோர்ந்து விடாது உங்கள் ஆக்கங்களை முன்னெடுக்க வேண்டும். கலைஞனுக்கு முதிர்ச்சி இருக்கிறது. முதுமை இல்லை. அவன் என்றும் இளைஞனே. நீங்கள் சாதிக்க வேண்டியவை நிறைய இருக்கின்றன. எங்களோடு இணைந்து உங்கள் திறமைகளை நிலைநாட்டுங்கள் இவ்வாறு அவர் கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் -

இங்கு இதுபோன்ற நிகழ்வுகளை நடத்த இருந்த கஷ்டங்கள் காரணமாக வவுனியா, திருகோணமலை பிரதேசங்களில் நடைபெற்ற நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்திலும் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளது. கலாசார சீரழிவுகளுக்குக் காரணமான போதைப் பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற ஆதங்கம் மாணவர்களிடையே வேரூன்ற இது போன்ற போட்டிகள் தேவையானது. இந்த விழிப்புணர்வின் தேவை குறித்து மாணவர் தனது உரையிலே குறிப்பிட்டது மகிழ்ச்சியாக இருக்கிறது. யாழ்ப்பாண மக்கள் நல்ல பண்பாடு கலாசார விழுமியங்களுடன் வாழ்பவர்கள் என்ற பெயர் யுத்த சூழ்நிலையால் மாறி விட்டது.

போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு இந்தப் போட்டிகளினூடாக ஏற்படலாம். இது ஒரு பலமான அத்திபாரம். மாணவர்கள் மத்தியில் இருந்து இது வெளிப்பட்டால் இந்த மண்ணில் கலாசார சீரழிவு என்ற பேச்சுக்கே இடமிருக்காது - என்றார். (1-111)




# வலிகாமத்தில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு தனியான பரீட்சை நிலையம் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.30

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சிப் பிரதேசப் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு தனியான பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இத்தகவலை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். இவர்கள் தாம் கல்வி பயிலும் பாடசாலைகளூடாக பரீட்சை எழுதுவதன் மூலம் பல எதிர்கால வாய்ப்புக்களை இழக்க நேரிடலாம். இதனைக் கருத்திற்கொண்டு மேற்படி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

வலிகாமம், வடமராட்சிப் பிரதேசத்தில் புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாக 537 மாணவர்களும், பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாக 44 மாணவர்களும் விசேட கணிதபாடப் பரீட்சைக்கு 144 மாணவர்களும் இம்முறை ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-16)

# இடம்பெயர்ந்தோருக்கான ஒக்ரோபர்மாத இலவச உலர் உணவு நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.30

உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஒக்ரோபர் மாதத்திற்கான உலர் உணவு நிவாரணத்தினை உடனடியாக வழங்குமாறு அரச அதிபர் கே.கணேஷ் பணித்துள்ளார்.

மேற்படி விநியோகத்திற்குரிய வழங்கற் கட்டளைகளை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்திலிருந்து உடனடியாகப் பெற்று பொருள்களை களஞ்சியங்களில் இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

நிவாரண விநியோக நடவடிக்கைகளை பின்வரும் அட்டவணையின் பிரகாரம் வழங்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (9-224)

| பொருள்கள் | விலை | 01 அங்க | 02 அங்க | 03 அங்க | 04 அங்க | 05அங்க |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 63.97 | 2.725 | 3.275 | 6.825 | 7.750 | 9.325 |
| மா | 66.61 | 1.000 | 2.500 | 2.500 | 3.500 | 4.000 |
| சீனி | 83.75 | 0.800 | 2.100 | 2.000 | 2.500 | 3.500 |
| பருப்பு | 138.00 | 0.200 | 0.250 | 0.500 | 0.500 | 0.750 |

# கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு 'நிக்கொட்' அம்புலன்ஸ் வழங்குகிறது

யாழ்ப்பாணம், நவ.30

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் 'அம்புலன்ஸ்' வண்டி வழங்கப்படவுள்ளது.

இத்தகவலை 'நிக்கொட்' நிறுவனத்தின் யாழ்.மாவட்ட திட்டப்பணிப்பாளர் ஆர்.சிவரூபன் தெரிவித்தார்.

சுமார் 6 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள இந்த அம்புலன்ஸ் வண்டி கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது.

இக்கையளிப்பு நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, சித்த ஆயுள்வேதத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்தே ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் நிர்வாகத்தினர் ''நிக்கொட்'' நிறுவனத்திடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்த அம்புலன்ஸ் வண்டி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (1-9)




திருமறைக் கலா மன்றத்தினரால் நடத்தப்படுகின்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை கலைத்தூது கலையகத்தில் நடைபெற்ற போது கல்லூரி அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அருள்பணி ஜெறோ செல்வநாயகம், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சுகந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட 'ஐஸ்லாண்ட்' டின் வெற்றிக்கு மக்கள் பங்களிக்க வேண்டும்

**குடாநாட்டில் நிலவும் ஐஸ்கட்டித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கோடு அண்மையில் 'ஐஸ்லாண்ட்' தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. முற்றுமுழுதாகத் தனியாரின் முயற்சியால் அமைக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலையின் செயற்பாடுகள் பற்றி நிறுவனத்தின் பங்காளர்களில் ஒருவரான ஜீ.சுரேஸ் உதயன் வாசகர்களுக்கு இந்த நேர்காணல் வழியாக விவக்குகிறார்.**

**கேள்வி: 'ஐஸ்லாண்ட்' தொழிற்சாலை நிறுவப்பட்டதன் நோக்கம் என்ன?**



ஜீ.சுரேஷ்

பதில்: குடாநாட்டு மக்களின் பிரதான தொழில்களில் கடற்றொழிலும் ஒன்று. எனினும் அதிகளவில் பிடிக்கப்படும்கடலுணவுகளைப் பாதுகாத்துச் சந்தைப் படுத்துவதற்கு 'ஐஸ் கட்டி' யின் தேவை அவசியமாக இருக்கிறது. யாழ். மக்கள் தமக்குத் தேவையான ஐஸ் கட்டியினை யாழ் மண்ணிலிருந்தே பெறக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க விரும்பினோம். அந்த நோக்கத்தை நிறைவு செய்வதாகவே யாழ்ப்பாணத்தில் எமது 'ஐஸ் லாண்ட்' ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையினை நிறுவியிருக் கிறோம்.

இத் தொழிற்சாலை தனி ஒருமனிதனால் ஆரம்பிக்கப்பட்டதன்று; அது ஐஸ்லாண்ட் குழுமத்தினால் நிறுவப்பட்ட கூட்டு முயற்சியாகவே அமைகிறது.

பத்து மில்லியன் ரூபாவை ஆரம்ப முதலாகக் கொண்டு இந்தத் தொழிற்சாலையினை ஆரம்பித்திருக்கிறோம். ஜேர்மன், இந்தியா, சீனா போன்ற நாடுகளின் தொழில் நுட்பங்களின் சேர்க்கையினால் அதி நவீன ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள் வடிவமைக்கப்பட்டி ருக்கின்றன.

18 மெற்றிக்தொன் ஐஸ் கட்டிகளை தினமும் உற்பத்தி செய்யக்கூடியவையாக இந்த இயந்திரங்கள் உள்ளன. இதற்கு 20 ஆயிரம் லீற்றர் தண்ணீர் தினமும் தேவையாக இருக்கிறது. இதற்கு எமது தொழிற்சாலை காணியிலுள்ள கிணற்றைப் பயன்படுத்தி வருகின்றோம்.

28 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்ட இந்த பாரிய இயந்திரத்தின் மூலம் முதன் முதலில் தனியார் 'ஐஸ் கட்டி' தொழிற்சாலையை நாம் யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்திருக்கிறோம்.

***கே:* தங்கள் நிறுவனத்தின் தற்போதைய செயற்பாடுகள் பற்றியும், எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் கூற முடியுமா?**

*ப:* எமது தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் ஐஸ் உற்பத்தியினை யாழ். மாவட்டம் முழுவதும் விநியோகிக்கத் தயாராக இருக்கிறோம்.

மக்களின் தேவைக்கேற்ப எமது உற்பத்தி அளவுகளில் மாற்றம் செய்ய வேண்டியிருக்கும்.

பருத்தித்துறை, மாதகல், பொன்னாலை,




காரைநகர், தீவுப்பகுதி உள்ளிட்ட யாழ். மாவட்டத்தின் கரையோரப்பகுதிகள் யாவற்றுக்கும் எமது உற்பத்தியை வழங்கவிருக்கிறோம். மக்கள் வசிக்கும் இடங்களுக்கு எமது வாகனங்களில் உற்பத்திகளை கொண்டு சென்று விநியோகிக்க ஆரம்பத்தில் முயற்சிப்போம். பின்னர் மக்களின் தேவைக்கேற்ப அவர்களின் இடங்களிலே சிறிய இயந்திர உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் திட்டமிட்டிருக்கின்றோம். பருத்தித்துறையில் வெகு விரைவில் எமது கிளை நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறோம்.

ஒரு கிலோ ஐஸ் கட்டியினை எட்டு ரூபாவிற்கு மக்களுக்கு வழங்குகிறோம். இது யாழ். மாவட்டத்திலே மிகக் குறைந்த விலையாக இருக்கும் என நினைக்கிறேன்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் எமது உற்பத்தியினை 24 மணிநேரமும் பெற்றுக்கொள்ள முடியும். மொத்தமாக கொள்வனவு செய்து கொள்ள விரும்புவர்கள் முற்பதிவினை மேற்கொண்டு ஐஸ் கட்டியைப் பெற முடியும், வாகனவசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இதே போல் வீட்டுத் தேவைகளுக்கும் நாம் எமது உற்பத்தியை வழங்க இருக்கின்றோம்.

எமது குழுமத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக, யாழ். மாவட்டத்தில் பிடிக்கப்படும் கடலுணவுகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம். எம்மிடமுள்ள 'கூலர்' வாகனங்களின் உதவியுடன் கடலுணவுகளை தென் பகுதிக்கு அனுப்பி சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதும் எமது சேவைத் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றிருக் கிறது.

***கே:* பெரிய தொழிற்சாலைகளால் சுற்றுச் சூழல் பாதிப்படைகின்றது எனக் கூறப்படுகின்றது. அது பற்றி......?**

*ப:* சுற்று சூழலுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் எமது உற்பத்தி நடவடிக்கைகள் அமையும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல முறை எமது குழுமத்தினர் கலந்து ரையாடலை மேற் கொண்டு, அவர்களின் ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றவும் நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

நவீன தொழில் நுட் பங்களைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட எமது உற்பத்தி இயந்திரங்களின் மூலம் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை விளைவிக்கக்கூடிய குளோரோ புளோரோ காபன் வாயு உள்ளிட்ட எதுவும் வெளிவருவதில்லை. மோட்டார் இயங்கும் போது கூட சிறியளவு சத்தமே வெளியே கேட்கும்.

***கே:* 'ஐஸ்லாண்டில்' தற்போது எத்தனை பேர் பணி புரிகிறார்கள்?**

*ப:* எமது தொழிற்சாலையில் ஆரம்பத்தில் நான்கு பணியாளர்களை கொண்ட ஐஸ் உற்பத்தியை மேற்கொள்ள திட்டமிட்டிருக்கிறோம். இந்த நான்கு தொழிலாளர்களுக்கும் இது தொடர்பான பயிற்சிகளை வழங்கியிருக்கிறோம்.

**செவ்வி: உமா**

எனினும் எமது உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு பத்து தொழிலாளர்கள் தேவையாக இருக்கும். இது தவிர யாழ். மாவட்டத்தில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளுக்கும் ஐஸ் உற்பத்தி தொடர்பான தொழில் பயிற்சியையும் வழங்கவும் எமது குழுமம் திட்டமிட்டிருக்கிறது.

***கே:* குடாநாட்டு மக்களிடமிருந்து தங்கள் நிறுவனம் எத்தகைய பங்களிப்பினை எதிர்பார்க்கின்றது?**

*ப:* காலத்தின் தேவை கருதி யாழ். மக்களுக்கு சேவை வழங்க முன்வந்த எமக்கு மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது. மக்களை நம்பியே பெரும் தொகையினை முதலிட்டுள்ளோம்.

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும், அவர்களின் உற்பத்திகளுக்கும் அரச அதிகாரிகள் முதல் பொதுமக்கள் வரைக் கும் பூரண ஆதரவினை வழங்குவதன் மூலம் உள்ளூர் மக்களே நேரடியாகவும் மறைமுகமாகவும் பயனடைய வேண்டும் என்பதே ஐஸ்லாண்ட் குழுமத்தின் வேண்டுதலாகும். ✱

# குடாநாட்டில் பிரதேச செயலகங்களுக்கு 75 பட்டதாரிகள் தற்காலிக நியமனம்

வண்ணை,நவ.30

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் 75 பேர்களுக்கு தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள 15 பிரதேச செயலகங்களுக்கும் 5 பேர்கள் வீதம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

அந்த வகையில் யாழ்ப்பாணம், நல்லூர் , கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் வேலணை, நெடுந்தீவு, தெல்லிப்பழை, கரவெட்டி சாவகச்சேரி , பருத்தித்துறை, வலி.வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்காலிக இந்நியமனங்கள் காலகெதியில் நிரந்தரமாக்கப்பட இருப்பதாக மேற்படி செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-160)


# 15 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர், கனகா- பத்திரிகை விற்பனை நிலையம், திருநெல்வேலி)



எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்காய் திகழ்ந்த
எங்கள் அன்புத் தந்தையே!
எம்மை மீளாத் துயரில்
ஆழ்த்தி
இறையடிசேர்ந்ததேனோ?
நீங்கள் இம்மண்ணை
விட்டுச் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு நீங்காது.

மலர்வு: 27.11.1949
உதிர்வு: 17.11.1994
திதி : திரயோதசி

நிரந்தர முகவரி:
"கனக இல்லம்",
கைதடி கிழக்கு.

தற்காலிக முகவரி:
இல.60, பலாலி வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(92642)


# உலக ஈரநில தினத்தை ஒட்டிய போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், நவ.30

அகில இலங்கை ஓவியப் போட்டி 2010 ஆம் வருட உலக ஈரநில தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓவியப்போட்டியின் மாவட்ட மட்டத் தெரிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கீழ்வரும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**சிரேஸ்ட பிரிவு**

வை.அரவிந்தன்-இணுவில் மத்திய கல்லூரி, ரி.பவிராஜ்- இணுவில் மத்திய கல்லூரி, ஜா.தாரிணி- யாழ். இந்து மகளிர் கல்லூரி, சா.அபிராமி- யாழ். இந்து மகளிர் கல்லூரி, ப.தர்சிக்கா- யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஜெ.திவ்வியா- யாழ். இந்து மகளிர் கல்லூரி, க.ஜனனி- யாழ். இந்து மகளிர் கல்லூரி, போ.டேமினியன்ராஜ்- கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி, வி.சந்திர ராஜ் விமல்- மானிப்பாய் இந்துக் கல்லூரி, என்.கார்திக்- வைத்தீஸ்வராக் கல்லூரி.

**கனிஷ்ட பிரிவு**

பா.பிரியந்தினி- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சா.நிரோஷா-சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, வி.வினுஜா- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,து.ஷறோன் திவ்வியா- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,யே.பிறசில்லா-சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, அ.ஜெயசீலன்- மாதகல் புனித யோசப் மகா வித்தியாலயம், ர.யாசர் - வண்ணை நாவலர் வித்தியாலயம், யெ.ஜனுஜா- யாழ். இந்து மகளிர் கல்லூரி, கி.பிரியந்தி- யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம், க.கயூரன்- இணுவில் மத்திய கல்லூரி.

இம் மாணவர்களிற்கான மாகாண மட்ட போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதால் மேற்குறிப்பிட்ட மாணவர்கள் அன்றைய தினம் காலை 7.45 மணிக்கு கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபை வடமாகாண அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட் டுள்ளனர். (1)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதத்தையெட்டி இலட்சார்ச்சனை நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தினமும் பிற்பகல் 2 மணிக்கு இலட்சார்ச்சனை ஆரம்பமாகும்.

இந்த இலட்சார்ச்சனை நிகழ்வில் கலந்து கொள்ளும் அடியார்கள் தமது பெயர், நட்சத்திரங்களை ஆலயத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,நவ.30

கைதடி ஸ்ரீ மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் காயத்ரீமஹா யக்ஞப் பெரு விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் கணபதி ஆராதனை, காயத்ரீ மந்திர கோச ஜப ஹோம வழிபாடு, அபிஷேகம் என்பனவும் நடைபெறும்.

## சுவரொட்டிப் போட்டிக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.30

சேவலங்கா நிறுவனம் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து நடத்திய சுவரொட்டி சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தீவகவலயத்திலிருந்து பங்குபற்றிய பின்வரும் மாணவர்களும் பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

முதலாம் இடம் சுந்தரசேகரன் தனராஜ் (யாழ்ற்ரன் கல்லூரி), 2 ஆம் இடம் நடேசமூர்த்தி கவிதரன் (வேலணை மத்திய கல்லூரி), 3 ஆம் இடம் தியாகராசா சுயிஸ்கரன் (நயினாதீவு ம.வி) மேலும் 14 மாணவர்கள் சான்றிதழ் பெறவுள்ளனர். இவர்களை இந்த நிகழ்வில் கலந்து பரிசில்களையும் , சான்றிதழ்களையும் பெறுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (50-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஜனாதிபதி யார்? ஒரு கேள்வியும் ஏராளமான பதில்களும்



நிறையக் குழப்பங்களுக்குப் பின்னர் - ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலை இவ்வாறு முந்திக் கொண்டு முதலில் நடத்துவதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கலாம் என கடந்த வாரக் கட்டுரையில் நாம் பார்த்திருந்தோம். அவைகள்

ஒன்று: நாட்கள் செல்லச் செல்ல ஜனாதிபதி மஹிந்தவுக்கான எதிர்ப்புணர்வு நாட்டில் அதிகரிக்கலாம் என்கிற பீதி.

இரண்டு: சுதந்திரக் கட்சி மாநாட்டின் போது ஆதரவாளர்கள் ஜனாதிபதித் தேர்தலையே நடத்துமாறு கோரியமை.

ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதற்கான முடிவை மஹிந்த எடுப்பதற்கு மேலுள்ள இரண்டு காரணங்களும் ஏதோவொரு வகையில் அவருக்கு அழுத்தத்தைக் கொடுத்திருக்கலாம்! ஆனால், ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு இன்னும் சில காரணங்களும் இருக்கின்றன.

அவைகள் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தினால், இப்போதுள்ள ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரையும் தனது தேர்தலுக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற நம்பிக்கை.

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்படுத்தி நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தினால், ஆளுந்தரப்பில் அதிருப்தியுடன் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்மார்களும் - எதிர்க்கட்சிக்குத் தாவி விடலாம் என்கிற சந்தேகம்.

அடித்துப் பிடித்துக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலை மஹிந்த இப்படி முதலில் நடத்துவதற்கு மேற்சொன்ன காரணங்களும் முக்கியமானவை!

சரி, ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் என்று அறிவித்தாயிற்று. ஆனால், அதை முகம் கொள்வதென்பது மகிந்த ராஜபக்ஷவுக்கு அத்தனை லேசுப்பட்ட காரியமாக இராது என்பதுதான் அரசியல் தெரிந்தவர்களின் கருத்தாக இருக்கின்றது.

ஏன் அப்படி?

யுத்தத்தை வெற்றி கொண்ட தலைவன் நான்தான் என்கிற கோஷத்தை முதலீடாக வைத்துக் கொண்டுதான் இந்தத் தேர்தலில் மஹிந்த வலம் வரப்போகிறார் என்பது சிறுபிள்ளையும் அறிந்த விடயம்! இந்தக் கோஷமானது சிங்கள மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும். ஆனால், இந்த உரிமை கோரலைப் பங்கிடக் கூடிய ஒருவரான ஜெனரல் சரத் பொன்சேகா எதிரணியில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவதென்பதுதான் மஹிந்தவுக்கு மிகவும் சவாலானதொரு விடயமாகும்!

அடுத்து, மஹிந்தவை இம்முறை வீட்டுக்கு அனுப்பி விட்டுத்தான் மறு வேலை என்கிற முடிவோடு ஜே.வி.பி. - கச்சை கட்டிக் கொண்டு களத்தில் குதித்திருப்பதும் மஹிந்தவுக்கு மற்றுமொரு சவாலாகும். ராஜபக்ஷவை கடந்த முறை ஜனாதிபதியாக்கியதில் பெரும் பங்கு ஜே.வி.பியினருக்கானது. இன்னும்

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஜெனரல் சரத் பொன்சேகா ஒழிப்பாரா?

சொன்னால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. கைகொடுக்கவில்லையென்றால் - மஹிந்த அவ்வளவுதான்!

இவ்வாறான சவால்கள் இருக்கையில், இவைகளை மஹிந்த எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பதையும், அவருக்கான சவால்களிலுள்ள ஓட்டைகள் பற்றியும் கொஞ்சம் நாம் பார்க்க வேண்டியுள்ளது.

கடந்த முறை மஹிந்தவின் வெற்றிக்குக் காரணமாக இருந்த ஜே.வி.பி.யின் கட்டமைப்பில் இப்போது பாரிய உடைவு ஏற்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட ஜே.வி.பி. இரண்டாகியிருக்கின்றது. அதேவேளை, உடைத்துக் கொண்டு போன விமல் அணியினர் இப்போது ஜனாதிபதியின் அணியில் கைகோர்த்து வேறு நிற்கின்றார்கள். இது மஹிந்தவுக்கு ஏதோவொரு வகையில் ஆறுதலான விடயம்தான்! ஆனால், விமல் வீரவன்ஸ தரப்பு மஹிந்தவுக்கு பெற்றுக் கொடுக்கப் போகும் வாக்குகள் ஜே.வி.பியின் எதிர்ப்பை ஈடு செய்யுமா என்பது சந்தேகம்தான்!

மஹிந்தவுக்கான மற்றுமொரு சவால் - மு.காங்கிரஸ் காட்டிவரும் எதிர்ப்பு! ஐ.தே.முன்னணியுடனான தமது கூட்டானது பொதுத் தேர்தலொன்றை மையப்படுத்தியது என்றும், ஜனாதிபதித் தேர்தலொன்றின் போது, குறிப்பட்ட வேட்பாளர்களுடன் பேசிய பின்னர் மு.காங்கிரஸ் சுயாதீனமானதொரு முடிவினை எடுக்கும் என்றும் அந்தக் கட்சியின் தலைகள் கூறிக் கொண்டிருந்தாலும், ஐ.தே.முன்னணிக் கூட்டை விட்டு வெளியில் வந்து, மஹிந்தவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆதரவை ஒரு போதும் வழங்காது என்பதே அரசியல் அனுமானமாக இருக்கிறது. இந்த அனுமானம் பலிக்குமாயின், ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு இது மற்றொரு தலைவலிதான்.

மு.கா.வின் எதிர்ப்பை மஹிந்த எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பது இங்கு பாரியதொரு கேள்வியாகும்! மு.கா.விலிருந்து அரசுப் பக்கமாகத் தாவி அமைச்சர்களாகியுள்ள றிசாத், அமீர் அலி, ஹுசைன் பைலா, நஜீப், பாயிஸ், நிஜாமுத்தீன் போன்ற வகையறாக்கள் மு.கா.வின் வாக்கு வங்கியை உடைத்து - அதில் கணிசமானதொரு பகுதியை மஹிந்தவின் பக்கமாக திருப்பிவிட முடியும்தானே என்பது மேலுள்ள கேள்விக்கு - சிலரின் பதிலாக அமைகிறது! ஆனால், இந்தப் பதிலிலுள்ள கோமாளித்தனங்கள் குறித்து பதிலளிப்போர் உள்ளிட்ட பலருக்கு புரிந்தேயிருக்கும்!

இந்த நிலையில், சரத்பொன்சேகாதான் தமக்கான பொது வேட்பாளர் என்று எதிரணியினர் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டார்கள். இனி, நாம் எதிர்பார்த்ததும், பார்க்காததுமான கூத்துக்களெல்லாம் மிக ஆரவாரங்களுடன் அரங்கேறத் தொடங்கும். கடந்த யுத்தத்தின் கடைசிக் கட்டங்களில் நிகழ்ந்த மர்மங்களின் பல முடிச்சுகள் பொது மேடைகளில் அவிழ்த்தெறியப்படும். சேறுகள் வாரி வாரி இறைக்கப்படும். ஒவ்வொரு வேட்பாளரும் தம்மைத் தாமே புனிதர்களாகப் பிரகடனம் செய்து கொள்வார்கள்!

சரி, சரத்பொன்சேகா மட்டும் வெற்றி பெற்று விட்டால், இந்த நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடத் தொடங்கிவிடுமா என்பது பற்றியும் இங்கு யோசிக்க வேண்டியுள்ளது. பொன்சேகா ஜனாதிபதியாக வெற்றி பெற்று ஆறு மாதங்களில் தனது அதிகாரங்களையெல்லாம் நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்து விட்டு அவர் ஒரு 'டம்மி' ஜனாதிபதியாக மாறிவிடுவார் என்பது எதிரணியினர் கூறுகின்ற கதையாகும்! ஆனால், அது அவ்வாறு நிகழுமா? அவ்வாறு நிகழாவிட்டால் நிலையென்ன என்பது பற்றியும் நாம் யோசிக்க வேண்டியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியானது மாயாஜாலங்கள் நிறைந்தது. அந்தப் பதவிக் கதிரையில் உட்கார்ந்த எவரும் அதைத் துறப்பதற்கோ, இழப்பதற்கோ நினைத்ததேயில்லை. அவ்வாறு நினைப்பதற்கு அந்தப் பதவி கொடுக்கும் ஜம்பங்கள் இடமும் கொடாது. சந்திரிகா குமாரதுங்கவும், மஹிந்தவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகச் சொல்லி ஆட்சியேறியவர்கள்தான். ஆனால், அது நடக்கவில்லை. நடப்பதும் கடினம்தான்! இப்படிப் பார்க்கையில், சரத்பொன்சேகா மட்டும் ஜனாதிபதியான கையுடன், அச்சாப் பிள்ளை மாதிரி தனது பதவியின் அதிகாரங்களைக் கையிழப்பார் என்று எப்படி நாம் நம்புவது?

அடிப்படையில் சரத்பொன்சேகா ஓர் இராணுவ அதிகாரி. உத்தரவு கொடுத்தே பழக்கப்பட்டவர். சவால்களை போதுமென்றளவுக்கு சந்தித்துப் பார்த்தவர். அந்த மனிதரை அச்சப்படுத்திக் காரியம் சாதிப்பதென்பது அத்தனை எளிதல்ல! இவ்வாறான ஒருவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியானவுடன் - எதிரணியினர் சொல்வது போல, அதிகாரங்களை இழப்பதற்கு மறுத்தால், அவரை என்னதான் செய்ய முடியும்? இதற்கான பதில் குறித்து ஐ.தே.முன்னணி யினரோ, ஜே.வி.பியினரோ அல்லது பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஏனையோரோ இன்னும் வாயே திறக்கவில்லை. அப்படிச் சொன்னாலும், அது சாத்தியங்கள் கொண்டதாக இருக்கப் போவதுமில்லை!

இலங்கையின் கடந்த 30 ஆண்டு கால அரசியலானது - இராணுவத் தன்மையுடையதாக மாறிப்போய் விட்டதாகவும், சரத்பொன்சேகா ஜனாதிபதியானால் இலங்கை அரசியல் முழுமையாக இராணுவ மயப்பட்டு விடும் எனவும் மு.காங்கிரஸின் தவிசாளர்



பசீர் சேகுதாவூத் அண்மையில் வழங்கிய நேர்காணலொன்றில் தெரிவித்திருந்த கருத்து - இந்த

**மப்றூக்**

இடத்தில் மிகவும் கவனிப்புக்குரியதொன்றாகும்!


சரத்பொன்சேகா ஜனாதிபதியாக வெற்றிபெற்றால், அவர் - தனது நிறைவேற்று அதிகாரங்களை நாடாளுமன்றுக் கொடுத்து விட்டு, ஒரு கனவானாக நடந்து கொள்வார் என்பது எதிரணியினரின் நம்பிக்கை. இப்போதைக்கு அதை நம்புவதை விட, அவர்களுக்கு வேறு வழிகளுமில்லைத்தான்!

அதற்காக, நம்பக் கூடாது என்று நாம் கூறவில்லை. ஆனால், அப்படி நம்புவதில் எந்தப் பலனும் இருக்கப் போவதுமில்லை!

இந்த இடத்தில் - நம்பிக்கைதானே வாழ்க்கை. அப்படி நம்பினால்தான் என்ன என்று - இந்தக் கட்டுரையைப் படிக்கும் உங்களில் யாரேனும் கேட்க நினைக்கலாம்.

நம்பிலாம்தான். ஆனால், எந்த நம்பிக்கையில் நம்புவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் தமிழ் மொழித்தின விழா அண்மையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, அவரது பாரியார் திருமதி மா.கௌரியம்பாள் மற்றும் விருந்தினர் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும், மாணவிகளின் நடன நிகழ்வை இரண்டாவது படத்திலும், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். *(படம்:- நந்தன்)*


## பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்



யா/கல்வயல்
ஸ்ரீ சண்முகானந்த
வித்தியாலயத்தில் 2003ஆம்
ஆண்டில் இருந்து
தொண்டர் ஆசிரியராகவும்,
பகுதிநேர ஆங்கில
ஆசிரியராகவும்
அரும்பெரும்
சேவையாற்றியதுடன், உயர்
தேசிய ஆங்கில டிப்ளோமா
(HNDE) பட்டம் பெற்று
ஆங்கில ஆசிரிய உதவியாளராக நியமனம் பெற்று
எமது பாடசாலையில் கடமையேற்றிருக்கும்

**செல்வி ஞானசேகரம் கிரிஜா**

அவர்களை வளம் பல கண்டு, நலம் மிக உயர்ந்து
எல்லாத்துறைகளிலும் தரணி போற்ற வாழ பாராட்டி
வாழ்த்தி வரவேற்கிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்,
சாவகச்சேரி. (சி/562807)


# திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள்

## நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது

யாழ்ப்பாணம்,நவ.30

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

துவிச்சக்கரவண்டி தரிப்பிடப்பகுதியில் போடப்பட்டிருக்கும் உடைத்த கொங்கிறீற் கற்கள் நீண்ட காலமாக மட்டப்படுத்தப்பட்டு சீர்செய்யப்படாதுள்ளதனால், சந்தையில் விற்பனை மற்றும் நுகர்வு நடவடிக்கையில் ஈடுபடவரும் துவிச்சக்கர வண்டி, மோட்டார், சைக்கிள் பாவனையாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

சந்தைப் பகுதியிலிருந்தும் அதன் சுற்றாடலில் உள்ள வியாபார நிலையங்களிலிருந்தும் வீதி ஓரங்களில் வீசப்படும் சேதன, அசேதனப் பொருள்கள் உரிய நேரத்தில் அவ்விடத்திலிருந்து அகற்றப்படாமல் இருக்கிறது.

அது மட்டுமன்றி, அங்குள்ள வடிகால்களில் சேரும் கழிவுப் பொருள்களால் கழிவு நீர் ஓடுவதற்கு வாய்ப்பின்றி தேங்கிவிடுகிறது.

இதனால் அப்பகுதியில் டெங்கு, மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயமிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புக்கான கட்டணமாக நான்கு ரூபா அறவிடப்படும் எனப் பிரதேச சபையால் அறி[illegible]டிருந்த போதிலும், அங்கு கடமையிலிருப்பவர்கள் [illegible]ந்து ரூபா அறவிட்டு வருவதாகவும் பொதுமக்கள் மேலும் அதிரு[illegible]தி தெரிவிக்கின்றனர்.

விற்பனை மற்றும் நுகர்வு நடவடிக்[illegible]கயில் ஈடுபடுவதற்கு ஏற்ற சூழலை திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (1-14)

# முன்னாள் அரச அதிபர் க.பொன்னம்பலத்தின் மறைவுக்கு அரச அதிபர் அனுதாபம்

யாழ்ப்பாணம்,நவ.30

முன்னாள் அரச அதிபர் கந்தையா பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ்.அரச அதிபர் க.கணேஷ் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச நிர்வாகத்தின் மணிமகுடமாய், அதன் பல்வேறு களங்களையும் கண்டு, அதன் பட்டறிவின் முதிர்ச்சியினால் உருவான ஆளுமைத் திறன், அறிவுநுட்பம் என்பவற்றினால், மிகச் சிறந்த கண்ணியமான, பண்பு மிக்க, சேவையாற்றிப் பார்ப்பதற்கு எளிமையாய், பழகுவதற்கு இனிமையான நற்பண்புமிக்க, அர்ப்பணிப்பு மிக்க சேவையாளர் கந்தையா பொன்னம்பலம் மறைந்த செய்தி எம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவர் இலங்கையின் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளில் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற தாரக மந்திரத்தோடு அரசஅதிபராகக் கடமையாற்றியுள்ளார். அவரது நிர்வாகத்தின் கீழ், மாவட்டங்கள் பல்வேறு சவால்களைச் சமாளித்து தமது நிலைகள் தளராது நின்றன. அந்த வகையில் யாழ்.மாவட்டமும் அதன் பயனை அனுபவித்து மகிழ்ந்தது.

தன் வாழ்நாளின் பெரும் பகுதியை அரச சேவைக்காக அர்ப்பணித்து அதனால் ஆத்மதிருப்தியடைந்த சேவையாளருக்கு, எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். - என்றுள்ளது. (ஒ)


## நெஞ்சை நெகிழ்த்தும் நினைவுகளோடு

மீள முடியா ஒன்பதாண்டில் | பரிதவித்த பதின்மூன்றில்



**அமரர் இராசு செல்வரட்ணம்**
*(உரிமையாளர் - அம்பாள் மரக்காலை)*



**செல்வி செல்வரட்ணம் ரஜனி**
[A/L1995 வர்த்தகப் பிரிவு மாணவி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி]

மண்ணுலகில்: 03.08.1942
விண்ணுலகில்: 30.11.2000

புவித்தாய்: 19.10.1976
மறைத்தாய்: 21.08.1996

ஊர்போற்ற வாழ்ந்த பெருமக்களே!
உமை இழந்து காலங்கள் பலவாயினும்
ஈரவிழிகளாய் செய்வதறியாமல் உம் நினைவில் நாம்
அன்பினால் பெற்ற செல்வப்பேறே பெரும் செல்வப்பேறு
என்பதை எமக்கு வாழ்ந்து காட்டினீர்கள்
இலமென வந்தோர்க்கு உளதென வாழ்ந்தீர்களே
கருணை சூர்ந்த உம் திருமுகத்தைக்காண
தவியாய் தவித்து நிற்கின்றோம்
என்றென்றும் உங்கள் சிந்தனையோடு நாம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'செல்வபதி',
இல.256, நாவலர் வீதி,இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம். (92643) [illegible]



25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

**உதயன்**

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வார காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இன்று சனிக்கிழமையுடன் முடிவடைய இருந்த இந்தப் போட்டி எதிர்வரும் *டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி* வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் விடைத்தாள்களைப் பாடசாலைகள் மற்றும் உதயன் முகவர் நிலையங்களில் அமைக்கப் பட்டுள்ள விசேட பெட்டிகளில் சேர்ப்பித்து உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யுங்கள்.



## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி றோஸ் முருகேசுபிள்ளை தி.கு.

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி றோஸ் முருகேசுபிள்ளை 28.11.2009 அன்று சனிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அவரது இறுதி நல்லடக்க ஆராதனைத் திருப்பலி இன்று (30.11.2009) திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் சிற்றாலயத்தில் நடைபெறும். பின்னர் இவரது பூதவுடல் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

*தகவல்:*
அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ்
மாகாணத்தலைவி.

*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்* (92644)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பேருடன் பயணித்த கப்பல் மூழ்கியதில் 49 பேர் பலி; 100 இற்கும் மேற்பட்டோர் மாயம்

## தென் பங்களாதேஷில் துயரச் சம்பவம்

டாக்கா, நவ. 30

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற பயணக் கப்பலொன்று தென் பங்களாதேஷில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் 49 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமற் போய்உள்ளனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

எவ்.வி.கொகோ - 4 என்னும் இக்கப்பல் போலா தீவிலுள்ள லால்மோஹன் நகரை அண்மித்துக்கொண்டிருந்தசமயம், நீரில் மூழ்கத் தொடங்கியது. பளு காரணமாகக் கப்பலின் ஒரு பகுதி முதலில் மூழ்கியுள்ளது என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது.

இதுவரை 49 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் நீரில் மூழ்கியுள்ள கப்பலின் அடித்தளத்தில் சிக்குண்டிருக்கலாம் என பொலிஸ் அதிகாரியொருவர் அச்சம் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் மூன்று தட்டுக்களைக் கொண்டது. நீரில் மூழ்கியுள்ள அடித்தளத்தில் சிக்குண்டவர்கள் பிழைத்திருப்பார்கள் என கூறுவதற்கில்லை. மீட்புப் பணிகளில் சுழியோடிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என அவசரகாலச்சேவைப் பிரிவின் மாவட்ட நிர்வாகி மெஜ்பஹுல் இஸ்லாம் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''கப்பலின் ஒரு தளத்தில் சிக்குண்டிருந்த ஐம்பதுக்கு மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டனர். அத்தளத்தின் அறைகள் வெட்டித் திறக்கப்பட்டு, இவர்கள் மீட்கப்பட்டுள்ளார்கள். இதில் பயணித்துள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட பயணிகளில் பெண்களும், பிள்ளைகளும் அடங்குவர்'' என்றும் அவர் விவரித்தார்.

''பங்களாதேஷின் தலைநகரான டாக்காவிலிருந்து போலா தீவை நோக்கி இந்தக் கப்பல் புறப்பட்டது. பயணித்தவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம் பெருநாளான ஈத்-அல்-அத்ஹாவைக் கொண்டாடுவதற்காக, வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தவர்களாவர்'' என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

''எம்.வி. கொகோ - 4 என்னும் கப்பல், தீவுகளுக்கான பங்களாதேஷின் பாரிய கப்பல்களில் ஒன்றாகும். இந்தக் கப்பலில் பயணித்த பயணிகள் தொடர்பான விவரப் பட்டியல் கிடையாது. அதனால், அதில் பய ணித்தவர்களில் இதுவரை காணாமற் போனோரின் எண்ணிக்கையை சரியாகக் கணிப்பீடு செய்ய முடியாதுள்ளது'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

## இந்தோனேஷியா அருகே நிலநடுக்கம்

ஜகர்த்தா, நவ. 30

இந்தோனேஷியா அருகே நேற்று ஞாயிற்றுக்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. சேதாரங்கள் ஏற்படவில்லை. ஆழிப் பேரலை அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரிச்டர் அளவில் இதன் தாக்கம் 6.2 புள்ளிகளாகப் பதிவானது. இந்நிலநடுக்கம், இந்தோனேஷியாவின் கிழக்கே நுசா டெங்காரா மாகாணத்தில் பகல் 1.04 மணியளவில் பரவலாக உணரப்பட்டுள்ளது.

டெங்காரா மாகாணத்தின் வெயங்கபு நகரிலிருந்து 195 கிலோ மீற்றர் தொலைவில் 30 கி.மீ. ஆழத்தில் இது மையம் கொண்டிருந்தது என பூகம்ப ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக அரங்கில்

## கொங்கோவில் படகு விபத்து: 73 பேர் வாவியில் மூழ்கிப் பலி!

கின்ஷவா, நவ. 30

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் மேற்குப் பகுதியிலுள்ள ஏரியொன்றில் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 73 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். 270 பேர் உயிர் தப்பியுள்ளனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

மாய் - தொம்பே என்னும் இந்த ஏரி 120 கிலோ மீற்றர் நீளமும், 50 கிலோ மீற்றர் அகலமும் கொண்டது. கடும் மழை, புயல் ஆகிய இயற்கை சீற்றங்களால் இந்தப் படகு கவிழ்ந்து நீரில் மூழ்கியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''இந்த விபத்தில் அநேகர் காணாமற் போயுள்ளனர். அவர்கள் கவிழ்ந்து மூழ்கிய படகுக்குள் சிக்குண்டிருக்கலாம். 73 பேரின் சடலங்கள் ஏரிக் கரையில் மீட்கப்பட்டுள்ளன. 270 பேர் உயிர் தப்பியுள்ளனர்'' என கொங்கோ செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டொமினிக் கியூ லுடுவா, வானொலிச் சேவைக்குத் தெரிவித்தார்.

மாய்-தொம்பே ஏரி பண்டுண்டு மாகாணத்தில் கொங்கோவின் தலைநகரான கின்ஸசாவிற்குக் கிழக்கே ஏறத்தாழ 400 கிலோ மீற்றர் (250 மைல்) தொலைவில் அமைந்துள்ளது. சிக்குண்டோரை மீட்கும் பணியில் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களும் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொங்கோ குடியரசில் நதிப் பயணங்களுக்காக படகுச்சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒழுங்காகப் பராமரிக்கப்படாத படகுகள், அளவுக்கு மிஞ்சிய பயணிகளை அனுமதித்தல் ஆகியவற்றால் அடிக்கடி விபத்துகள் நேர்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## சவூதியில் வெள்ளப்பெருக்குக்கு பலியானோர் 106 ஆக அதிகரிப்பு

சவூதி அரேபியாவில் திடீர் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி இறந்தோரின் எண்ணிக்கை 106 ஆக உயர்ந்துள்ளது. 1400 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

ஜெட்டா, மெக்கா நகர்களில கடந்த சில நாள்களாக கனமழை பெய்துவருகிறது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஆங்காங்கே பாலங்கள், வீடுகள் இடிந்து விழுந்த நிலையில் உள்ளன. பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இடிபாடுகளிலும், மழை வெள்ளத்திலும் சிக்கி இதுவரை 106 பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தண்ணீரிலும், கட்டடங்களிலும் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணியில் பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மெக்கா செல்லும் நெடுஞ்சாலையில் சேதம் ஏற்பட்டதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. பலியானவர்களில் ஹஜ் பயணிகளும் கணிசமான அளவில் இருந்தனர் எனத் தெரிகிறது.பலியானோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. ஆங்காங்கே மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மழை வெள்ளத்தால் டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளன என ஜிட்டா சுகாதாரத் துறை செய்தித் தொடர்பாளர் சமி பதாவுத் தெரிவித்தார்.

## குண்டுவெடிப்பில் சிக்கியது ரயில்; ரஷ்யாவில் 26 பேர் பரிதாபப் பலி!

மாஸ்கோ, நவ. 30

ரஷ்ய 'நெவ்ஸ்கி கடுகதி' ரயில் தண்டவாளத்தில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பில் சிக்கி விபத்துக்குள்ளானது. இதில் 26 பேர் கொல்லப்பட்டனர். மூன்று ரயில் பெட்டிகள் தூக்கி வீசப்பட்டன. பல பயணிகள் படுகாயமடைந்தனர் என புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஏறத்தாழ 700 பயணிகளுடன் விரைந்த 'நெவ்ஸ்கி கடுகதி' ரயில், தலைநகரான மாஸ்கோவிற்கும், இரண்டாவது பெரும் நகரான சென் பீட்டர்ஸ்பேர்க்குங்கு மிடையில் விபத்துக்குள்ளானது. தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு அதி பயங்கரமாக வெடித்ததால், ரயிலின் கடைசி மூன்று பெட்டிகளும் தூக்கி வீசப்பட்டன என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது. அரசு ஊழியர்களும், வர்த்தகப் பிரமுகர்களும் இந்த ரயில் வண்டியிலேயே பயணிப்பார்கள். இந்தக் கடுகதி, மணிக்கு 200 கிலோ மீற்றர் (130 மைல்) வேகத்தில் விரைந்துகொண்டிருந்தபோது, இதிலிருந்த 14 பெட்டிகளில் கடைசி மூன்று பெட்டிகளும் தூக்கி வீசப்பட்டுள்ளன என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

''குண்டுகளைச் செயலிழக்க வைக்கும் நிபுணர்கள், வெடித்த குண்டின் எடை 7 கிலோ (15 இறாத்தல்) இருக்கலாமென மதிப்பீடு செய்துள்ளார்கள்'' என ரஷ்ய உள்துறை புலனாய்வு சேவைப் பிரிவின் தலைவர் அலக்ஸாண்டர் போர்ட்னிகோவ் தெரிவித்துள்ளார்.

''ரஷ்யாவின் வட காகாசுஸ் பிராந்திய தீவிரவாதிகள், தேசிய தீவிரவாதிகள் நாசி இயக்க ஆதரவாளர்கள் ஆகியோரில் ஏதோ ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் இக்குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என புலனாய்வாளர்கள் சந்தேகிக்கிறார்கள்'' என ரஷ்ய நோவேயா வர்த்தமானி பாதுகாப்பு சம்பந்தப்பட்ட நிருபர் பெவல் பெல்ஜென் ஹுர் தெரிவித்தார்.

## நம் நாட்டுத் தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் நுழையலாம்

### பாக். உள்துறை அமைச்சர் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், நவ. 30

''தற்போது பாகிஸ்தானில் இருந்து நாச வேலையில் ஈடுபட்டிருக்கும் தலிபான் தீவிரவாதிகள் இந்தியாவுக்குள்ளும் புகுந்து தீவிரவாதச் செயல்களில் ஈடுபடும் வாய்ப்பு உள்ளது. எனவே, அவர்களை அழிக்க இந்தியா எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்'' என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தொலைக்காட்சியொன்றுக்குத் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

''மும்பைத் தாக்குதலில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் பாகிஸ்தான் நேர்மையுடன் செயற்படுகிறது. மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர் இ-தொய்பா தலைவர் ஜாகீர் ரஹ்மான் லக்வி உள்ளிட்ட 7 பேர் மீது ராவல்பிண்டி தீவிரவாதத் தடுப்பு நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது'' என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

''தாக்குதலுக்கு இரகசியமாகத் திட்டமிட்ட லக்வி உட்பட 7 பேரையும் தெளிவான ஆதாரத்துடன் கைது செய்துள்ளோம். இருந்தும் இந்தியா மேலும் நடவடிக்கை எடுக்கும்படி எங்களை வலியுறுத்துவது ஆச் சரியமாக உள்ளது. இந்த விடயத்தில் இந்தி யாவுடன் வேறு நாடுகளும் உத்தரவிடு வதை ஏற்றுக்கொள்ள முடியாது'' என்றும் அவர் கூறியுள்ளார்.

## பாக். குழப்பங்களுக்கு முஷாரப்பே காரணம்!

### முன்னாள் பிரதமர் தெரிவிப்பு

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இன்றைய குழப்பங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்தான் காரணம் என்று முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சியின் தலைவருமான நவாஸ் ஷெரிப் குற்றம்சாட்டினார்.

பெஷாவரில் தீவிரவாதிகள் தாக்குதலில் பதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறவந்த நவாஸ் ஷெரிப், ''ஒரு சர்வாதிகாரியின் சட்டவிரோதமான அரசியல் அமைப்புக்கு எதிரான ஆட்சி நடந்தபோது, மக்கள் பிரதிநிதிகளுக்கு எந்த வேலையும் இல்லாமல் போய்விட்டது'' என்று கூடியிருந்த மக்கள் மத்தியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''முஷாரப்பின் 10 ஆண்டுகால முறையற்ற ஆட்சிதான் இப்போது பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்குக் காரணம். தேசிய விவகாரங்களிலும் நாட்டின் கொள்கைகளிலும் மாற்றத்தைக் கொண்டுவந்தது அந்த இராணுவ ஆட்சிதான்'' என்றும் அவர் சாடினார்.

## செவ்வாய்க்கிரகத்தில் உயிரினம் இருந்ததற்கான ஆதாரம் உண்டு

### நாசா ஆய்வு மையம் தகவல்

செவ்வாயில் உயிரினங்கள் இருந்திருக்கலாம். வறண்டு சிவந்த பாலைவனம் போல இப்போது காட்சியளிக்கும் செவ்வாய்க் கிரகம், ஒருகாலத்தில் பெருங்கடலும், பசுமையும் கலந்த பிரதேசமாக இருந்திருக்கலாம். செவ்வாய் கிரகவாசிகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பூமிக்கு வந்திருக்கக் கூடும் என நாசாவின் ஆய்வில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மனிதர்களாக இல்லையென்றாலும், கிருமிகளின் வடிவத்திலாவது பூமிக்கு அங்கிருந்து உயிரினங்கள் வந்திருக்கக்கூடும். இவை வெறும் அறிவியல் புனைக் கதைக்கான கற்பனைகள் அல்ல. இவற்றை நம்புவதற்கு வலுவான அடிப்படை ஆதாரங்கள் உள்ளன என சமீபத்திய நாசாவின் ஆய்வில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

''13 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாயிலிருந்து பூமியில் வந்துவிழுந்த விண்கல் பாறையாக, கடந்த 1996 ஆம் ஆண்டில் ஒரு பகுதி அன்டார்க்டிக் கடல் பகுதியில் அடையாளம் காணப்பட்டது. 'அலென் ஹில்ஸ் 84001' என்று இதற்கு விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். அப்போது அந்த பாறையின் மீது உயிரித்தன்மை கொண்ட படிமத் துகள்கள் இருந்தன. அவை செவ்வாயில் இருந்து வந்திருக்கக்கூடும்'' என்றும் நாசா கூறியது.

எனினும், விண்கல்லிலிருந்து பூமியில் மோதியதாலும், அன்டார்க்டிக் கடலின் அ[illegible]கள், பூஞ்சைகள் பல்லாண்டுகளாகப் பாறையில் படிந்ததாலும் உருவானவையே அவை என்று கூறி அப்போது பெரும்பாலான விஞ்ஞானிகள் நாசாவின் இக்கருத்தை நிராகரித்திருந்தார்கள்.

ஆனால், அந்த பாறையில் படிந்துள்ளவை செவ்வாய்க்கிரகத்திலிருந்து வந்தவைதான் என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன என இப்போது நாசா விஞ்ஞானிகள் உறுதிபட தெரிவிக்கின்றார்கள். இதைத் தங்களால் நிரூபிக்க முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

நாசாவில், கேத்தி தோமஸ்-கெர்டா ஆகியோர் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இந்த செவ்வாய் பாறையில் உள்ள படிமங்களை நுணுக்கமாக ஆராய்ந்துள்ளது. அதில் கா[illegible] மக்னீஸிய உலோகப் படிகங்களை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர். பாறையில் பரவலாகக் காணப்படும் உலோக படிமங்கள் வழக்கத்துக்கு மாறான இரசாயன மற்றும் இயற்பியல் தன்மைகளைக்கொண்டவை. அவற்றின் அமைப்புகள் புவியியல் சார்ந்தவை அல்ல. அவை உயிர்த் தன்மையை ஒத்துள்ளன. அதுமட்டுமன்றி, பூமியில் உள்ள காந்தக் கிருமிகளின் சாயல் அவற்றில் வெகுவாக உள்ளது என நாசா குறிப்பிட்டுள்ளது.

இவை நிச்சயம் 13 ஆயிரம் ஆண்டுகளில் உருவானவை அல்ல. 350 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தண்ணீருக்கும், செவ்வாய்க் கிரகத்துக்கும் என்ன தொடர்பு என்பதை விசாரிக்கவே இவை ஆதாரமாக உள்ளன என்ற முடிவிற்கு நாசா ஆய்வுக் குழு வந்துள்ளது. இதுகுறித்து, விரைவில் நாசா தனது அதிகார பூர்வமான அறிவிப்பை வெளியிட உள்ளது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

பிரிட்டிஷ் 'அஸ்ட்ரானமி நவ்' இதழின் துணையாசிரியர் எமிலி பால்ட்வின் இது பற்றி கூறும்போது, ''விண்கல் பாறையில் படிந்துள்ளவை பூமியில் உருவானவை அல்ல என்று நிரூபிக்கப்பட்டால், நம்முடைய சூரிய குடும்பத்தின் கிரகங்களில் உயிர்கள் எப்போது, எப்படி தோன்றின என்பது குறித்த புரிதல் மேலும் அதிகமாகும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் மீனவர் மீது இலங்கைப்படை தாக்குதல்?

இராமேஸ்வரம், நவ. 30

இலங்கைக் கடற்படையினரால் இராமேஸ்வரம் மீனவர்கள் மீண்டும் தாக்கப்பட்டனர். அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் கொள்ளையடித்து சென்றனர்.

இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தி விரட்டியடிப்பதுடன் அவர்கள் பிடித்து வைத்திருக்கும் மீன்களை கொள்ளையடித்து செல்வது வாடிக்கையாக இருந்து வருகிறது.

இராமேஸ்வரம், சங்குமால் ஓலைக்குடா துறைமுகப்பகுதியில் இருந்து நேற்றுமுன்தினமும் அதற்கு முதல் நாளும் நூறுக்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகளில் மீனவர்கள் வழக்கம் போல் மீன்பிடிக் கச் சென்றனர்.

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அவர்களது நாட்டுப்படகுகளை நோக்கி 2 பெரிய ரோந்துக் கப்பல்களில் இலங்கைக் கடற்படையினர் வந்தனர். அவர்களுடன் சீனக் கடற்படையினரும் துப்பாக்கிகளுடன் வந்துள்ளனர்.

மீனவர்களின் நாட்டுப்படகுகள் மீது மோதுவது போல் கப்பல்களில் வேகமாக வந்த அவர்கள் மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் அங்கிருந்து விரட்டியடித்தனர்.

இதனால் பயந்துபோன மீனவர்கள் அங்கிருந்து படகுகளை ஓட்டிச்செல்ல முயன்றனர். அப்போது ரோந்து கப்பல்களில் இருந்து நாட்டுப்படகுகளில் இறங்கி மீனவர்கள் பிடித்து வைத்திருந்த சீலா, மாவுலா உள்ளிட்ட விலை உயர்ந்த மீன்களையும் பறித்துக் கொண்டனர்.

மேலும் இடுப்புப் பட்டிகளால் சுழற்றி அடித்து மீனவர்களை இலங்கை கடற்படையினர் அங்கிருந்து தப்பி ஓடுமாறு கூறி தாக்கினர். இதன்காரணமாக குறைந்த அளவு மீன்களுடன் நாட்டுப்படகு மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை கரை திரும்பினர்.



இந்தியக் கடலில் வைத்து கைதுசெய்யப்பட்ட 68 இலங்கை மீனவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் காசிமேடு துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டபோது...

## 35 இலங்கை மீனவர் நாளை விடுதலை

கடந்த மாதம் இந்தியக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட 35 இலங்கை மீனவர்கள் நாளை முதலாம் திகதி 7 படகுகளில் காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து இலங்கை செல்கின்றனர்.

கடந்த மாதம் 35 இலங்கை மீனவர்கள் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். இந்தியக் கடலோர காவல்படையினர் மீனவர்களையும், அவர்கள் வந்த படகுகளையும் கைப்பற்றி, காசிமேடு மீன்பிடித் துறைமுக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறையிலிருந்த 35 இலங்கை மீனவரை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன்படி இவர்கள் அனைவரும் நாளை முதலாம் திகதி 7 படகுகளில் காசிமேடு மீன்பிடித் துறைமுகத் தில் இருந்து இலங்கைக்கு செல்கின்றனர்.

## முகாமில் புலிக்கொடி; 3 பேர் கைது; வட்டாட்சியர் அலுவலகம் முற்றுகை!

கும்மிடிப்பூண்டி, நவ. 30

கும்மிடிப்பூண்டி இலங்கை அகதிகள் முகாமில் புலிக்கொடி ஏற்றினர் எனக் கூறி, முகாமைச் சேர்ந்த மூவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர். இதைக் கண்டித்து, வட்டாட்சியர் அலுவலகத்தை இலங்கை அகதிகள் முற்றுகையிட்டனர்.

மாவீரர் தினத்தையொட்டி, கும்மிடிப்பூண்டியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் உள்ள ஆலமரத்தில் விடுதலைப் புலிகளின் புலிக்கொடி வெள்ளிக்கிழமை ஏற்றப்பட்டதுடன், தீபங்கள் ஏற்றியும் விடுதலைப்புலிகள் அனுஷ்டிக்கும் மாவீரர் நாள் குறித்த வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டன எனக் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக முகாமைச் சேர்ந்த பரமநாதனின் மகன் சிவகுமார் என்ற கண்ணன் (30), செல்லையாவின் மகன் நிஷாந்தன் (34), செல்வராசாவின் மகன் செல்வா என்ற செல்வகுமார் (35) ஆகியோரை பொலிஸார் கும்மிடிப்பூண்டி சிப்காட் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணைக்குப் பின்னர் இந்திய இறையாண்மைக்கு எதிராக தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்தனர் என வழக்குப் பதிந்து, மூவரையும் கைது செய்த பொலிஸார் பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இச் சம்பவத்துக்கு தொடர்பே இல்லாத அப்பாவிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனக் கூறி, அதைக் கண்டித்து முகாம் மக்கள் கும்மிடிப்பூண்டி வட்டாட் சியர் அலுவலகத்தை திடீரென முற்றுகை யிட்டனர்.

தகவலறிந்ததும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று முகாம் மக்களை சமாதானம் செய்ய முயன்றும் முகாம் மக்கள் கலையவில்லை. அதைத்தொடர்ந்து, அங்கு வந்த கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் பாலசுப்பிரம ணியம் முகாம் மக்களுடன் பேச்சில் ஈடு பட்டார்.

இதுகுறித்து உயர் அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என வட்டாட்சியர் உறுதியளித்தார். இதையேற்றுக் கொண்ட முகாம் மக்கள் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து கலைந்துச் சென்றனர்.

## தமிழக மீனவர் 18 பேரை விடுவித்தது இலங்கை

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட 18 புதுக்கோட்டை மீனவர்கள், தனுஷ்கோடி அருகே நேற்றுமுன்தினம் இந்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் 18 பேர், 5 படகுகளில் சர்வதேச கடல் பகுதியில் கடந்த வாரம் மீன் பிடித்துக் கொண்டு இருந்தனர். அவர்களை இலங்கைக் கடற்படையினர் பிடித்து, இலங்கைக்கு கொண்டுசென்றனர். அங்கு அவர்கள் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். மீனவர்களிடம் விசாரணை நடத்திய நீதிபதி, அவர்களை இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

இதைத்தொடர்ந்து 18 மீனவர்களும் தனுஷ்கோடி அருகே நேற்றுமுன்தினம் இந்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர். புதுக்கோட்டை மீன்வளத்துறை அதிகாரி, 18 மீனவர்களையும் ஏற்றிக்கொண்டு, அவர்களை புதுக்கோட்டைக்கு அழைத்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நவ.27 மாவீரர்நாள் கூட்டங்களில் நிபந்தனை மீறல்; 12 பேர் கைது

### டி.ஜி.பி. ஜெயின் அறிவிப்பு

சென்னை, நவ. 30

மாவீரர் தினத்தை முன்னிட்டு பொதுக் கூட்டத்தில் பொலிஸாரின் நிபந்தனைகளை மீறினர் என வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக டி.ஜி.பி. ஜெயின் சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு வருமாறு -

இலங்கையில் தமிழ் ஈழ விடுதலைக்கான போரில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை விடுதலைப் புலிகள் இலங்கையில் கடைப்பிடிப்பது வழக்கம்.இந்த ஆண்டு மாவீரர் தினத்தை முன்னிட்டு பொதுக் கூட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்த பல்வேறு அமைப்புகள் பொலிஸ் துறையின் அனுமதியைக் கோரியிருந்தன. சில நிபந்தனைகளுடன் அந்தந்தப் பகுதி பொலிஸார் இதற்கான அனுமதியை வழங்கி இருந்தனர்.

ஆனால் ஈரோடு நகரில் மூலப்பட்டறை, திருநகர் காலனி, ராஜகோபால் தோட்டம், சூரம்பட்டி ஆகிய இடங்களில் நிபந்தனைகளை மீறி பேனர்கள் வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதுதொடர்பாக, 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, பெரியார் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் குமரகுருபரன், சண்முகம், தமிழ் தேசிய விடுதலை இயக்க மாவட்டச் செயலாளர் மோகன் ராஜ், சிவகுமார், உமாபதி, வடிவேல், ஜாதி ஒழிப்பு பொதுவுடைமை முன்னணியின் சிவகங்கை மாவட்ட அமைப்பாளர் புலி பாண்டியன், நாம் தமிழர் அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன், ஜபருல்லா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இதேபோன்று திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் உள்ள அகதிகள் முகாமில் விடுதலைப் புலிகளின் கொடியைப் பறக்க விட்டமை மற்றும் விடுதலைப் புலிகள் ஆதரவு வாசகங்கள் அடங்கிய தட்டிகள் வைத்தமை தொடர்பாக சிலர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதுதொடர்பாக அகதிகள் முகாமைச் சேர்ந்த கண்ணா (எ) சிவகுமார், நிசாந்தன், செல்வம் (எ) செல்வகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர் - என்றுள்ளது.

## புலி இயக்க ஆதரவாளர் மீது கடும் நடவடிக்கை அவசியம்

### மத்திய அமைச்சர் வாசன் வலியுறுத்து



மதுரை, நவ. 30

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக செயற்படுவோர் மீது தமிழகப் பொலிஸார் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று மத்திய அமைச்சர்ஜிகே.வாசன்கூறினார்.

இதுகுறித்து மதுரையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

ராஜீவ் காந்தியை படுகொலை செய்த - தடைசெய்யப்பட்ட இயக்கத்தினரை சமீப நாள்களாக தமிழகத்தில் ஆதரித்தும், வாழ்த்தியும் படங்கள் ஒட்டுவதும், புகழ்பாடுவதும் கண்டிக்கத்தக்கது. இதில் தமிழகப் பொலிஸார் தீவிரமாக கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

சென்னையில் முன்னாள் மத்திய அமைச்சர் இளங்கோவன் வீட்டு முன்பு வெடிகுண்டு வீசியவர்களை உடனடியாக கைதுசெய்து, நடவடிக்கை எடுக்க வேண்டும். இது போன்ற மிரட்டல்களுக்கு காங்கிரஸ் அஞ்சாது. மேலும், இது போன்ற சம்பவங்கள் தொடராமல் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை தமிழக அரசும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

திருச்செந்தூர், வந்தவாசி இடைத் தேர்தலில் கடந்த மக்களவை தேர்தலை போலவே மத்திய, மாநில அரசுகளின் சாதனைகளுக்கு மக்கள் ஆதரவு அளிப்பார்கள். தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை அமோக வெற்றி பெறச் செய்வார்கள் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

## மீன்பிடி ஒழுங்கு முறைச் சட்டம் குறித்து பிரதமர் மன்மோகனிடம் விவாதிப்போம்

### அமைச்சர் வயலார் ரவி தெரிவிப்பு

சென்னை, நவ. 30

மத்திய அரசு கொண்டுவந்துள்ள மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம் குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குடன் விவாதிக்க உள்ளோம் - என்று மத்திய வெளிநாடு வாழ் இந்தியர்கள் விவகாரத் துறை அமைச்சர் வயலார் ரவி தெரிவித்தார்.

தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல்வர் கருணாநிதியை சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

மத்திய அரசு கொண்டுவந்துள்ள மீன்பிடி ஒழுங்கு முறைச் சட்டத்துக்கு மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. மீனவர்கள் மீன்பிடிக்க மட்டுமே கடலுக்குச் செல்கின்றனர்.

வெளிநாடு சென்றுள்ள பிரதமர் மன்மோகன் சிங் நாடு திரும்பியதும் இது குறித்து விவாதிக்க உள்ளேன்.

டுபாயில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அங்குள்ள இந்தியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அதனால் இந்தியப் பங்குச் சந்தையின் வர்த்தகம் பாதிக்கப்பட வாய்ப்பு இல்லை. எனவே இந்தியர்கள் அச்சப்படத் தேவையில்லை.

வளைகுடா நாடுகள் உள்பட வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியர்கள் போலி முகவர்களால் பாதிக்கப்படாமல் இருக்க விரைவில் தனிச்சட்டம் கொண்டு வரப்படும். இதன் மூலம் போலி முகவர்கள் கட்டுப்படுத்தப்படுவார்கள்.

## தனுஷ், ஐஸ்வர்யா உட்பட 72 பேருக்கு கலைமாமணி விருது

சென்னை, நவ. 30

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் 2007ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது வழங்கும் விழா, கலைவாணர் அரங்கில் நேற்றுமுன்தினம் மாலை கோலாகலமாக நடந்தது.

நடிகர்கள் பரத், தனுஷ், வினித், சுந்தர் சி, பசுபதி, வையாபுரி, நடிகை அசின், ஐஸ்வர்யா ரஜினிகாந்த், அபிராமி ராமநாதன் உள்ளிட்ட 72 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா விருதுகளை வழங்கினார். முதல்வர் கருணா நிதி தங்கப் பதக்கம் அணிவித்து, வாழ்த்துக் கூறினார்.

விழாவில் ஆளுநர் பர்னாலா பேசியவை வருமாறு -

முதல்வர் கருணாநிதி மிகச் சிறந்த கலைஞர். இலக்கியம், கவிதை, திரைப்படம் என்று பல ஆற்றல் கொண்டவர். தமிழை செம்மொழியாக்க பாடுபட்டவர். திறமையான கலைஞர்களுக்கு இங்கே விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இது அவர்களுக்கு நிச்சயம் ஊக்கம் அளிக்கும். தமிழ் கலாசாரம் மிக சிறந்தது, தொன்மையானது. மாறுபட்ட கலாசாரங்களை கொண்டதுதான் நம் நாடு. சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்றவை தமிழின் தொன்மையையும், உயர்வையும் விளக்குகின்றன.

இசை, நடனம், கலை இல்லாமல் நாகரிகம் இல்லை. தென்னிந்திய கலைகளின் தாயகமாக தமிழகம் விளங்குகிறது. இந்த கலாசார பரிவர்த்தனை மேலும் மேலும் பெருக வேண்டும். அப்போதுதான் நம் கலைகளின் பெருமை பரவும் - என்றார்.

விழாவில் முதல்வர் கருணாநிதி பேசியவை வருமாறு -

சங்கீத நாடக மன்றம் என்று அழைக்கப்பட்ட இந்த மன்றம், இயல் இசை நாடக மன்றமாக மாற்றப்பட்டு, சிறந்த கலைஞர்கள், புலவர்கள், இசை அறிஞர்களுக்கு கலைமாமணி விருதுகள் வழங்கப்படுகின்றன. நானும் கலைமாமணி விருது பெற்றவன் தான். அண்ணா எனக்கு விருது வழங்கினார்.

கலைமாமணி விருது உலக விருது, தேச விருதுகளை விடச் சிறந்தது. அந்த விருதுகள் நமக்கு ஆசி, பாராட்டு வழங்கி தரும் விரு துகள். தமிழக அரசின் சார்பில் தரும் இந்த விருது தாயின் முத்தம் போன்றது. விருது பெற்ற அனைவரையும் நான் வாழ்த்துகிறேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தக் குற்ற விசாரணைகளை எதிர்க்கமாட்டாராம் பொன்சேகா

## சர்வாதிகாரிகளிடமிருந்து நாட்டை மீட்கவே ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்குகிறேன்

கொழும்பு, நவ. 30

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது இடம் பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்படுவதைத் தாம் எதிர்க்கவில்லை என்று பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றார் முன்னாள் இராணுவத் தளபதியும் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா.

''சர்வாதிகாரிகளிடமிருந்து நாட்டை மீட்பதற்காக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் வேட்பாளராகக் களமிறங்குகின்றேன்'' என்று சரத் பொன்சேகா நேற்று உத்தியோபூர்வமாக ஊடகவியலாளர்களுக்கு அறிவித்தார்.

தாம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றமை தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டை நேற்றுக் கொழும்பில் நடத்தினார் பொன்சேகா.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளமை, ஊழல், ஊடக அடக்குமுறை, அகதிகள் நடத்தப்படுகின்ற விதம் ஆகிய இன்னோரன்ன பல விடயங்கள் தொடர்பாகத் தமது ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அவர், அங்கு மேலும் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

கடந்த பல வாரங்களாக நீங்கள் தொடர்ச்சியாகக் கேட்ட கேள்விகளுக்கு இன்று நான் பதிலளிக்கிறேன்.

ஆம், நான் அரசியலில் ஈடுபடுகிறேன். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

ஜனநாயகமும், வாழ்க்கைத்தரமும், ஊடக சுதந்திரமும் சீரழிவதையும் அதே வேளை, விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டபின் ஒரேயொரு குடும்பம் மாத்திரம் தளைத்து வளர்வதையும் வேடிக்கை பார்க்க முடியாமலேயே தயக்கத்துடன் அரசியலில் நுழைந்துள்ளேன்.

நான் குப்பையை சுத்தம் செய்வதற்கு வந்துள்ளேன். எனது கரங்களைப் பயன்படுத்தியே இதனைச் செய்ய வேண்டும்.

இராணுவ வீரர்களை ஒழுக்க நெறிகளுக்கு மாறாக என்மீது சேற்றை அள்ளி வீசுவதற்குப் பயன்படுத்துகின்றனர். இது முன்னர் ஒருபோதும் இடம்பெறவில்லை.

இவ்வாறான சட்ட விரோத காடைத்தனத்துக்கு யார் காரணம் என்பது எமக்குத் தெரியும். என்னை நோக்கி குற்றச்சாட்டைச் சுமத்துவதன் மூலம் இராணுவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயல் கின்றனர்.

எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளின்படி அவர்களுடைய வேட்பாளராக ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித் துள்ளேன்.

**அன்னம் சின்னத்தில் போட்டியிடுவேன்**

நான் அன்னம் சின்னத்தில் போட்டியிடுவேன். அன்னத்துக்கு பாலிலிருந்து நீரைப் பிரித்தெடுப்பதற்கான திறன் உள்ளது. புதிதாகப் பதிவு செய்யப்பட்ட கட்சி யொன்றின் கீழ் போட்டியிடுவேன்.

ஜனாதிபதியாக நான் தெரிவு செய்யப் பட்டால் ஆறு மாதங்களுக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பேன். அரசமைப்பு கவுன்ஸிலை உருவாக்கி 17 ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்துவேன்.

மேலும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவேன். ஜனநாயகம், சமூகநீதி, ஊடக சுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்யும் புதிய அரசமைப்பை உருவாக்குவேன்.

இலங்கை நீண்டகாலமாகப் பயங்கரவாதிகளின் கரங்களின் கீழ் வன் முறையை அனுபவித்துள்ளது.

**சர்வாதிகாரியின் கையில் நாட்டை விட முடியாது**

நாங்கள் தற்போது பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டிவிட்டோம். இனி நாட்டை சர்வாதிகாரியொருவரின் கைகளில் விடமுடியாது. நாங்கள் நல்லாட்சியை உறுதி செய்யவேண்டும். நான் அரசியலைத் தயக்கத்துடனேயே தெரிவு செய்துள் ளேன். ஜனநாயகம் நிலை நாட்டப்ப டுவதை உறுதி செய்வேன்.

யுத்தத்தின் போது இராணுவத்துக்குத் தலைமை தாங்கிய வேளை வாக்குறுதிகளை நிறைவேற்றியமை போன்று எதிர்காலத்திலும் நிறைவேற்றுவேன்.

யுத்த வெற்றிக்கான முழுப் பெருமையையும் நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நாடு சர்வாதிகாரத்தை நோக்கி இழுக்கப்படுவதைத் தடுப்பதற்கே நான் முயல்கிறேன்.

நான் யுத்தக் குற்றங்கள் குறித்த விசாரணைகளை எதிர்க்கவில்லை. சந்தேகங்கள் இருந்தால் அதனைத் தீர்ப்பது நல்லது.

விசாரணைகள் வெறும் குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து இடம் பெறக் கூடாது. தெளிவான சாட்சியங்களின் அடிப்படையில் இடம்பெறவேண்டும்.

**குற்ற விசாரணையை ஆதரிக்கிறேன்**

மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தில் இராணுவத் தளபதியாக இருந்தவன் என்ற வகையில் நான் விசாரணையை ஆதரிக்கிறேன்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசியல் தலைமை முக்கிய பங்காற்றியது.

எனினும், அரசு இராணுவத்தைத் தனது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துகின்றது.

யுத்த வெற்றி என்பது ஒரு குடும்பத்துக்கு மாத்திரம் உரியதல்ல. எனது தலைமைத்துவத்துக்கும் படையினருக்கும் வெற்றிக்கான பெருமையின் பெரும்பகுதி கிடைக்கவேண்டும். சிறிதளவு பெருமையே அரசியல் தலைமைத்துவத்துக்குச் செல்ல வேண்டும். இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை எதிர் பார்க்கிறேன். இராணுவ அதிகாரி என்ற வகையில் அந்த நாட்டுடன் நெருக் கமான உறவுகளைப் பேணிவந்துள்ளேன் - என்றார். (சி)

# கணித பாட விசேட பரீட்சை எழுதாத வன்னி மாணவர்களின் கதி என்ன?

யாழ்ப்பாணம், நவ.30

கடந்த வருடம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணித பாட விசேட பரீட்சைக்குத் தோற்றாத இடம்பெயர்ந்த விசேட பரீட்சையான கணித பாடப் பரீட்சை நடைபெறுமா? அல்லது இந்த வருடம் நடைபெறும் பரீட்சையில்தான் கணிதப் பாடத் துக்குத் தோற்ற வேண்டுமா? எனத் தெளிவுபடுத்தப்படாத நிலையில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் குழம்பிய நிலையில் உள்ளனர். 2008 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணித பாட வினாப் பத்திரத்தின் கடினத்தன்மையை கருத்தில் கொண்டு குறித்த வினாப்பத்திரம் ரத்துச்செய்யப்பட்டு கணித பாடத்துக்கு விசேட பரீட்சை நடத்தப்பட்டது. விசேடமாக நடைபெற்ற இந்தப் பரீட்சை யுத்தச் சூழ்நிலை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மன்னார், வவுனியா மாவட்டங்களில் சில பகுதிகளிலும் நடைபெறவில்லை. இந்த மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் குறித்த பரீட்சை பின்னர் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது எனினும் இதுவரை அந்தப் பரீட்சை நடத்தப் படவில்லை. மேற்படி பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்கான கணிதபாட பரீட்சை விசேட பரீட்சையாக நடைபெறுமா? பாதிக்கப்பட்ட மாணவர்கள் 2009 ஆம் ஆண்டுக்கான கணிதபாடப்பரீட் சைக்குத் தோற்றி சித்தியடைந்தால் இரண்டாம் தடவையாகச் சித்தியடைந்ததாகவே கருதப்படும் வாய்ப்பு உள்ளது. கணித பாடத்தில் சித்தியடையாத நிலையில் குறித்த மாணவர்கள் ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப் படமாட்டார்கள். கணித பாடம் பிரதான பாடங்களில் ஒன்றாகும். பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைவதும் இரண்டாம் தடவை சித்தியடைவதும் வேறுபட்ட தர நிலையிலேயே கணிக்கப்படும்.

இந்தக் குழப்பமான நிலைமை குறித்துக் கல்வித் துறையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும் என்று மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் எதிர்பார்க்கின்றனர். (ஒ-11)

## “சிரம வாசனா” சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் ''சிரம வாசனா'' நேற்றைய சீட்டிழுப்பில் ''R'' என்ற ஆங்கில எழுத்தும், 01, 21, 24, 54 ஆகிய இலக்கங்களும் வெற்றி இலக்கக் கங்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் ஆங்கில எழுத்தும் நான்கு இலக்கங்களும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருப்பின் ஒரு மில்லியன் ரூபா முதற் பரிசாக வழங்கப்படும்.

மூன்று இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிட்ட 162 பேருக்கு 1,000 ரூபா வீதம் பரிசுகள் வழங்கப்படும் என்றும் -

இரண்டு இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிட்ட 6,107 பேருக்கு 50 ரூபா வீதமும் ஒரு இலக்கத்தைச் சரியாகக் குறிப்பிட்ட 66,358 பேருக்கு 20 ரூபா வீதமும் பரிசுகள் வழங்கப்படும் என்றும் தேசிய லொத்தர் சபை நேற்று அறிவித்தது.

அடுத்த வாரத்துக்கான சுப்பர் பரிசுத் தொகை 3,426,518 ரூபா 50 சதமாக இருக்கும் என்றும் தேசிய லொத்தர் சபை அறிவித்துள்ளது.

## வல்லிபுர ஆலய உற்சவத் தொகுப்பு ரூபவாஹினியில்

வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் கொடியேற்றம், தேர், தீர்த்தத் திருவிழாக்களின் மஹோற்சவ நிகழ்ச்சிகளின் தொகுப்பு நாளை செவ்வாய்க்கிழமை ரூபவாஹினியின் 'நேத்திரா' அலை வரிசையில் பி.ப. 4 - 5 மணிவரை ஒளிபரப்பாகும்.

## மாவைக்கந்தன் ஆலயத்தில் திருக்கார்த்திகை விழா

யாழ்ப்பாணம்,நவ.30

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் திருக்கார்த்திகைத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை சிறப்புற நடைபெறும் என்று ஆலய ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

ஸ்னாபிஷேகம்,விசேட திருக்கார்த்திகைப் பூசை, ஆராதனைகள், சுவாமி வலம் வருதலுடன் விசேட பக்தி இசை நிகழ்வும் நடை பெறும். சுவாமி வீதி வலம் வந்ததும் மகேஸ்வர பூசை ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்களுக்குத் தேவைப்படும் மாவிளக்குப் பொருள்கள் எல்லாவற்றையும் ஆலய வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும், தெல்லிப்பழை சோதனைச் சாவடியிலிருந்து கோவிலுக்கு போய் வருவதற்கு விசேட 'வான்' சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய ஆதின கர்த்தா மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் விரைவில் இடமாற்றம் செய்யப்படலாம்

யாழ்ப்பாணம்,நவ.30

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களின் கல்விப்பணிப்பாளர்கள் உட்பட கல்வி அதிகாரிகள் பலர் இடமாற்றம் செய்யப்படலாம் என்று நம்பிக்கையாகத் தெரியவருகிறது. இது தொடர்பாக உயர் மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் நிர்வாக சேவை தொடர்பான பதவி உயர்வு மற்றும் நிர்வாக சேவையில் குறிப்பிட்ட கால சேவையை அடிப்படையாகக் கொண்ட இடமாற்ற நடைமுறை, குறிப்பிட்ட காலம் சேவையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் அதே வேளையில் கல்வி நிர்வாக சேவையில் உள்ளவர்களை இடமாற்றம் செய்வதில் ஏன் தாமதம் என்ற வினாவுக்கு பதில் கூற வேண்டிய தேவை என்பன வலயக் கல்விப்பணிப்பாளர்களின் இடமாற்றத்தை வலியுறுத்துவதாகக் கூறப்படுகின்றது.

மீளக்குடியேறிய மாணவர்கள் கல்வி நடவடிக்கை தொடர்பான செயற்பாடுகள் முன்னுரிமை அடிப்படையில் நிறைவு செய்யப்படுவதால் அதையடுத்து இடமாற்றம் தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படலாம் எனக் கூறப்படுகிறது.

அதேநேரம், அடுத்த வருடம் பாடசாலை அதிபர்களையும் இடமாற்றம் செய்வதற்கு ஏற்ற முறையில் விரிவான செயற்றிட்டம் ஒன்று வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவிருப்பதாகவும் அறியப்படுகின்றது.அந்த வகையில் பாடசாலைகளின் தரம், அதிபர்களின் தரம் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு அதிபர்களுக்கான இடமாற்றத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

பாடசாலை அதிபர்கள் தொடர்ந்து ஒரே பாடசாலையில் கடமைபுரிவதன் மூலம் முகாமைத்துவத்தில் நிதிகையாளுகையில் முறைகேடுகள் பெரிய அளவில் நடைபெற்று வருவதாலும் அதிபர்களின் நிதிக் கையாளுகை தொடர்பாக மேலிடத்துக்கு பெரியளவில் புகார் செய்யப்படுவதால் அதிபர்களையும் குறிப்பிட்ட சேவைக்கால அடிப்படையில் இடமாற்றம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்து. (4-11)

## கூட்டுறவு நகர் கிளை இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.30

பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத்தின் 5ஆவது சிறிய கூட்டுறவு நகர் ('மினி கோப்சிற்றி') மாதகல் மத்தியில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் இன்று திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் திறந்து வைக்கப்படும்.

பண்டத்தரிப்பு ப.நோ.கூ சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் பிரதமவிருந்தினராகவும், வலி.தென்மேற்குப் பிரதேசசெயலக உதவித்திட்டப் பணிப்பாளர் செல்வி வே.நிரஞ்சலா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஒ-9-130)

# வடக்கில் அரைவாசிப் பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2008 ஆம் ஆண்டின் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியில் வடக்கைச் சேர்ந்த எத்தனை பேர் தங்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்துகொண்டுள்ளார்கள் என்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என 'பவ்ரல்' தெரிவிக்கிறது.

அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் அதே தேர்தல் தொகுதியில் தற்போது தங்கியிருப்பதற்கான சாத்தியம் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட தொகுதியிலேயே வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

எனினும், அநேகமானோர் இடம்பெயர் முகாம்களிலும், வேறு இடங்களிலும், உறவினர்களுடனும் தங்கி வாழ்வதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் மிகவும் குறைவாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தங்கியிருந்த மக்கள் அடையாள அட்டைப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மக்களை வாக்களிப்பில் கலந்துகொள்ளச் செய்யவேண்டுமென்ற உண்மையான நோக்கமிருந்தால் அடையாள அட்டைப் பிரச்சினை மற்றும் வாக்காளர் பட்டியல் பதிவு குறித்த பிரச்சினை ஆகியவை தொடர்பில் தேர்தல் அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படாவிட்டால், எதிர்வரும் தேர்தலில் வடக்கு மக்களின் அபிலாஷைகளை அறிந்துகொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு திரும்பினார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்பியுள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இவர் கடந்த மூன்று வருடங்களாக ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருந்தார்.

இறுதியாக நோர்வே நாட்டில் தங்கியிருந்து அங்கிருந்து நேரடியாக நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

ஏற்கனவே வெளிநாடுகளில் தங்கியிருந்த அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் சில வாரங்களுக்கு முன்பு நாடு திரும்பியிருந்தமை தெரிந்ததே.

தற்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.ஜெயானந்தமூர்த்தி மட்டுமே தொடர்ந்தும் வெளிநாட்டில் தங்கியிருக்கின்றார். (அ-சி)

## 25 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என ஆள் பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஏ.ஜீ.தர்மதாஸ தெரிவித்தார்.

இதுவரை ஒரு லட்சத்து 46 ஆயிரம் பேர் அடையாள அட்டைகளைக் கோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

பிரதேச செயலாளர் செயலக மட்டத்தில் ஒருவருடத்துக்குமட்டும் செல்லுபடியாகும் அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கான செயற்றிட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-சி)


**A/L DAY CLASS**
**கலைப் பிரிவு**

தமிழ்: திரு.N. சத்தியவேந்தன்
இந்துநாகரிகம்: திரு.K.S ரமணன்
அளவையியல்: திரு. S.S.மனோகரன்
அரசியல்: செல்வி S.ரஜிதா
பொருளியல்: திரு. அருணன், திரு. M.C.சுதாகரன்
வரலாறு: திரு. S.விக்கி
புவியியல்: திரு S.டினேஷ்

ஆரம்பம்: 01.12.2009 செவ்வாய் காலை 9 மணி

BEACON- வெலிங்டன் சந்தி அருகில்



**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்
ஆங்கில இலக்கியம் - Gr.11
மேற்படி கருத்தரங்கு
01-12-2009
செவ்வாய்க்கிழமை
முற்பகல் 9 மணி தொடக்கம்
பிற்பகல் 1 மணி வரை
நடைபெறும்
ஆசிரியர்
Mr. K. Jeyakumar
B.A. PGDE (TESL) Col.
வெளிமாணவர்களும் பங்குபற்றி பயன் பெறலாம்.
முன்கூட்டியே பதிவு செய்யவும்.
புதிய கல்வி ஆண்டு 2010
Gr.1 முதல் O/L வரை
ஆரம்பம் - 05.12.2009
Sat 8 am
நிர்வாகி.



**மாபெரும் இலவச இரசாயனவியல் கருத்தரங்கு**
NEW SCIENCE CENTRE
(வெலிங்டன் சந்தி அருகில் - Becon இல்)
* A/L 2010 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரிய தொடர் கருத்தரங்கு
* தவணைப் பரீட்சைக்குரிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
ஆரம்பம்: 01/12/2009
செவ்வாய் மு.ப. 9.30
கருத்துரை வழங்குபவர்
சிரேஸ்ட இரசாயனவியல் ஆசிரியர்
திரு.அன்பு


## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொட்டியாரக்குடா துறைமுகத்தில் கடமையாற்றிய கடற்படை வீரர்களையே, சீனன்குடா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த மீனவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். குற்றவாளிகளை கைது செய்யுமாறு திருகோணமலை மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து குறித்த மூன்று கடற்படையினரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## அடுத்த வருடத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டது.

2011 ஆம் ஆண்டின் பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடத்தப்படவேண்டும் என ஏற்கனவே கடந்த மாநாடு ஒன்றின்போது தீர்மானிக்கப்பட்டது.

எனினும், மனித உரிமை மீறல் சம்பவங்களின் அடிப்படையில் இலங்கையில் அதனை நடத்தக்கூடாது என பிரித்தானியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து உட்பட்ட நாடுகள் தெரிவித்திருந்த நிலையிலேயே இந்த மாநாட்டை ஆஸ்திரேலியாவில் நடத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளியாகியது. (அ)


**வெளிவாரி G.A.Q., B.A.**
யாழ்., பேராதனை
புதிய கல்வியாண்டு
விரிவுரைகள்
ஆரம்பம்:
05.12.2009 சனி (8am)
New Education World
(ஆனைப்பந்தி குருநகர் அருகில்)



**பிரத்தியேக வகுப்பு**
தமிழ் (2009 DAY)
திரு.யாசிந்தன்
ஆரம்பம்:
01.12.2009 12 மணி
New Education World
(ஆனைப்பந்தி குருநகர் அருகில்)



**வகுப்புகள் ஆரம்பம்**
**கல்வியாண்டு - 2010**
தரம்:4 முதல் தரம்:11 வரை
தமிழ் மொழி மூலம்
GR:6,7,8 ENGLISH MEDIUM
யாழ் நகரின் தனித்துவ ஆசிரிய குழாம்
**2.12.2009 ஆரம்பம்**
அனுமதிகளை அதற்கு முன் பெறுக..
**சயன்ஸ் அக்கடமி**
அரியாலை. ⟵ இரு இடங்கள் ⟶ நல்லூர்.
ஸ்ரான்லி கல்லூரி முன்பாக. நல்லூர் கோயில் முன்பாக
எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே!
அமைதியான சூழலில் சீரான நேரஒழுங்கில்


## 13 ஆவது திருத்தச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரம், ஜனாதிபதியாக தாம் தெரிவு செய்யப்பட்டால் இந்தியாவுடன் சிறந்த உறவுகளைப் பேணப்போகிறார் எனத் தெரிவித்துள்ள அவர், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இந்தியா தார்மீக அரசியல் ஆதரவையும் வழங்கியது எனத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவற்றைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியாவே எமது நெருங்கிய அயல்நாடு, பிராந்தியத்தில் வலுவான அயல்நாடு.

இதன் காரணமாக இந்தியாவுடன் சிறப்பான உறவைப் பேணுவது அவசியம்.

சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் இணைந்து நான் செயற்பட்டேன் என எவராவது கூறுவார்கள் என்றால் அது இராணுவத் தளபாடங்களுக்காகத்தான். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்துக்கு அவை தேவைப்பட்டன.

இந்த இராணுவத் தளபாட ரீதியான உதவிகளை அந்த நாடுகள் வழங்கின.

எனினும், யுத்தத்தில் வெல்வதற்குத் தார்மீக ரீதியாக, அரசியல் ரீதியாக உதவியது இந்தியாதான்.

இந்தியாவுடனான உறவுகள் எப்போதும் உயர்மட்டத்தில் இருந்துள்ளன. எதிர்காலத்திலும் சிறந்த உறவுகளைப் பேண விரும்புகிறேன்.

எங்களுக்கு அருகிலிருக்கும் சிறந்த அயல்நாடு இந்தியா. இதன் காரணமாக சிறந்த உறவுகளைப் பேணவேண்டும். இராணுவத்தில் இணைந்த நாள் முதல் நான் அந்த நாட்டுடன் சிறந்த உறவுகளைப் பேணி வந்துள்ளேன்.

நான் இராணுவப் பயிற்சிக்காகத் தளபதியாக விளங்கியபோதும் நான்கு தடவைகள் இந்தியா சென்றுள்ளேன். அந்த நாட்டு இராணுவத்தைப் பெரிதும் மதிப்பதுடன் சிறந்த உறவுகளைக் கொண்டுள்ளேன்.

தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வுகாண வேண்டியது அவசியம். ஆனால், பெரும்பான்மைச் சமூகத்தின் விருப்பத்திற்கு இணங்கவே இந்தச் சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டம் 20 ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட சட்டம் என்பதால் அச்சட்டத்தில் மாற்றங்களைக் மேற்கொள்ளவது அவசியம் - என்றார். (அ-சி)

(சரத் பொன்சேகா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களின் மற்றொரு பகுதி 19 ஆம் பக்கத்தில்)


**A/L DAY CLASS**
**வர்த்தகப் பிரிவு**
எமது தரமான ஆசிரியர் குழாம்
பொருளியல்: திரு.N.B.சஜீந்தன்
வணிகக்கல்வி: திரு.S.K.பாலகேஷ்
கணக்கீடு: திரு.பாலகஜன்
ஆரம்பம்: (01.12.2009)
செவ்வாய் காலை 9 மணி
BRAIN POWER குருநகர்
(சின்னக்கடை சந்தை அருகில்)



**A/L DAY CLASS**
**வர்த்தகப் பிரிவு**
→ கணக்கீடு : திரு. பாலகஜன்
→ பொருளியல் : திரு. அருணன்
திரு. M.C. சுதாகரன்
→ வணிகக்கல்வி :
திரு. S.K. பாலகேஷ்
கடந்தகால பெறுபேறு எமது வெற்றிக்கு படிக்கல்
தனிப்பட்ட அனுமதி உண்டு.
ஆரம்பம் நாளை (01.12.2009)
செவ்வாய் காலை 9 மணி
BEACON யாழ்.நகர்
(வெலிங்டன் சந்தி அருகில்)


## தமிழ் அகதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனான், எலாபட், ஹெடார் பிராஹிமி, குரோபுரூண்ட் லேண்ட், பெர்னாண்டோ ஹென்றிக் கியூ கார்டோஸோ, ஜிம்மி கார்ட்டர், கிரேகா மெக்செல், மேரி ரொபின்சன் ஆகியோரே இவ்வாறு அவசரமாக ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்கள்.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இருந்து உள்நாட்டு யுத்தத்தால் வகைதொகையின்றி இடம்பெயர்ந்த பெருந்தொகையான தமிழ் அகதிப் பொதுமக்களின் மனித உரிமைகள் நிலைவரமும், அம்மக்கள் எதிர்கொள்ளும் மனிதாபிமான நெருக்கடிகளும் மிகுந்த கவலையைத் தருகின்றன என்று அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (அ-சி)

## டெங்குநோயாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என அமைச்சின் மக்கள் சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

தற்போது நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக டெங்கினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (அ-சி)

## பொன்சேகாவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளனர் எனவும், மொனராகலை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. அரசுக்கு எதிரான வாசகம் எதுவும் சுவரொட்டியில் இல்லாததால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஐ.எம். கருணரத்னா தெரிவித்தார்.

இதேவேளை, அரசிற்கு எதிரான வகையில் நாளைய தினம் ஜே.வி.பி கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்த உள்ளது என மற்றொரு தகவல் தெரிவிக்கிறது. (அ-சி)

## யுத்தக்குற்றச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது. இந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் உடன் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார்.

இந்நிலையிலேயே மேற்படி ஆணைக்குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் அடுத்த மாத இறுதியில் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவுள்ளன.

இந்த அறிக்கையை அடுத்த மாத இறுதியில் தமக்கு சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். மேற்படி தகவலை மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று வெளியிட்டார். (அ-சி)


**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
22 ஆவது வருட கல்விச் சேவையில் யாழ்.நகரின் No.1 கல்வி நிறுவனம்
புதிய கல்வியாண்டு 2010
1 6 2 7 3 8 4 9 5 10 O/L
ஆரம்பம் : 05-12-2009
சனிக்கிழமை மாலை 3.00 மணி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



யாழ்.முன்னணி ஆசிரியர் சேவையில்
**DAY CLASS**
கலை,வர்த்தகம்
ஆரம்பம் 02.12.2009 புதன் 7 a.m
பாடம் மாறிப்படிக்கும் மாணவர்களுக்கு விசேட,மேலதிக வகுப்புக்கள்
யூனிவேர்சல்
(யாழ்/இந்துமகளிர் கல்லூரி அருகே)



**அதிரடி விலைக்கழிவு**
டிஜிட்டல் பனர், ஸ்ரிக்கர் என்பவற்றை பிரதியாக்கம் செய்திட சதுர அடி 70/= மட்டுமே.
மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்
யாழ்ப்பாணம். (சி/562747)



**DAY CLASS**
(வர்த்தகப் பிரிவு)
ஆரம்பம்: டிசெம்பர்-2 (புதன்)
காலை-9 மணிக்கு
DMI JAFFNA



**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
DAY BATCH (2010) நடைபெறுகின்றது

| CHE | PHY | PHY | BIO |
|---|---|---|---|
| DIAS | SENTHIL | SELVAN | PONTHIVAKARAN |

இணை. கணித வகுப்புகள்
ஆரம்பம் 01/12/2009 செவ்வாய்:- 7.00 - 8.00 Am
AINHARAN // SIVAKARAN



**2010 ஆம் ஆண்டு கால்பதிக்கும் மாணவ மணிகளுக்கோர் நற்செய்தி**
உங்களுக்குத் தேவையான அப்பியாசப் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள், மற்றும் எழுதுகருவிகளை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
★80 பக்கம் - 12/=
★120 பக்கம் - 18/=
★160 பக்கம் - 24/=
T.P: 0212224375
**லக்சுமி காகிதாதிகள்,**
இல.02, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (ஔவையார் சிலைக்கு முன்பாக)



யாழ்நகரில் புதியதோர் உதயம் .....

டேவிற் பீரிஸ் மோட்டார் கொம்பனி பிறைவேட் லிமிடெட் இன் அங்கிகரிக்கப்பட்ட விற்பனை முகவர்
**S, J, மோட்டோர்ஸ்**

02.12.2009 (புதன்கிழமை) 09.30 – 11.30 மணிவரை உள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது என்பதனை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்று (02.12.2009) கொள்வனவு செய்யும் பஜாஜ் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக 1500/= பெறுமதியான ஹெல்மட் இலவசமாக வழங்கப்படும்
TP : 021 2224554, 0777 238373 இல : 73, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.